---


தாயுமானவரின் உவமைகள் 100
மன்னார்குடி பானுகுமார்
இணையதளத்தில் banukumar.in
ராஜம் பதிப்பகம்

---

## மானுடம் முழுவதும் விதைக்க வேண்டும்.

தாயுமானவர் தமிழ் இலக்கிய உலகில் தனக்கென தனி முத்திரை பதித்த பாடல்களைப்பாடி மக்களின் உணர்வுகளுக்கும், உணர்ச்சிகளுக்கும் புத்துயிர் ஊட்டியவர் இவரே ஆவார்.

தாயுமானவரின் ஆழ்ந்த அனுபவங்களும், அவருடைய வாழ்க்கைச் சூழலும், வாழ்க்கையில் எற்பட்ட இன்ன துன்பங்களுமே கவிதை என்னும் வடிவில் தத்துவப் பாடல்களாக வெளிவந்துள்ளன.

தாயுமானவர் பாடல்கள் ஒரு சாதகனுக்கு வழிகாட்டியாக அமைந்தவையாகும்.

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றும் அறியேன் பராபரமே" என்னும் கொள்கையுடைய தாயுமானவரின் அருள் வேட்கை அளப்பரியதாகும்.

உலக உயிர்கள் அனைத்தும் இன்பமாக, மகிழ்வோடு வாழவேண்டும் என்பதே தாயுமானவர் கொள்கை.

தாயுமானவர் தனது பாடல்களில் அதிகமாக உவமைகளைப் பயன்படுத்தி உள்ளார்.

தாயுமானவர் உவமை நயங்கள், திறம்பெற்றதாகவும், தனிச்சிறப்புடையதாகவும் திகழ்கிறது.

தாயுமானவர் உவமைநயங்கள் பல, சொல்லியலாலும், பொருளமைப்பாலும் தனிச்சிறப்பு பெறுகின்றன என்பது வெளிப்படை. அவ்வகையில் தாயுமானவர் பாடல்களில் உவமை நயங்களினூடான நுட்ப வேறுபாடுகளைக் காணமுடிகிறது.

மேலும் இது வாசிப்போரின் மனநிலையை பொறுத்து, விரிவும் செறிவும் பெற்றுத் திகழ்வதோடு, தாயுமானவர் பாடல்களுக்கான கருத்தேற்றத்திற்கும் துணை செய்வது குறிப்பிடத்தக்கது.

# உவமைகள் ஏன்?

மனிதன் தான் காணுகின்ற எல்லாப் பொருள்களையும் ஒன்றோடொன்று ஒப்பிட்டுப் பார்க்க எண்ணுகிறான். இவ்வியல்பு மனிதன் சிந்திக்கத் தொடங்கியபோதே தோன்றியிருக்க வேண்டும்..

ஒரு கவிஞனின் உள்ளத்துள் எழுந்தவாறே உலகிற்கு உணர்த்த உதவுவன உவமைகள் ஆகும்.

இந்த உவமைகள் பொருளின் உண்மைத் தன்மைகளை அறிந்து கொள்வதற்குப் பெரிதும் உதவுகின்றன. ஒரு பொருளை மற்றொரு பொருளோடு ஒப்புமைப்படுத்திக் கூறுவது உவமை எனப்படும்.

அதாவது தெரியாத ஒன்றைத் தெரிந்த ஒன்றோடு ஒப்புமைப்படுத்துவதாகும்.

## உவமத்தால் தோன்றும் நான்கு பொருள்கள்

ஒரு பொருளுக்கு மற்றொரு பொருளை உவமையாகச் சொல்லும்போது அவ்விரண்டு பொருள்களுக்கும் பொதுவாகிய ஒரு தொழில் (வினை) காரணமாகவும் அத்தொழிலால் பெறும் பயன் காரணமாகவும உருவாகிய வண்ணம் காரணமாகவும் ஒப்புமை கூறப் படுமாதலின் உவமத்தால் பொருள் தோன்றும். அது தோற்றம் வினை பயன் மெய் உரு என நால்வகைப்படும் என்பர்.

இதனை “வினை பயன் மெய்உரு என்ற நான்கே வகைபெற வந்த உவமத் தோற்றம்” என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

உவமையில் அடங்கியுள்ள உறுப்புகள் உவமேயம் உவமானம் பொதுப் பண்பு உவம உருபு என்னும் நான்காகும்.

சொல்ல எடுத்துக் கொண்ட பொருளைப் ‘பொருள்’என்றும் அதன் இயல்பையும் தன்மையையும் விளக்குவதற்கு ஒப்புமையாகக் கொள்ளப்படும் பிறபொருளை உவமை என்றும் குறிப்பிடுவார் தொல்காப்பியர்.

இவ்விரண்டையும் முறையே உவமேயம் - உவமானம் என்று குறிப்பர் வடநூலார்.

உவமையும் பொருளும் ஆகிய இவ்விரு பொருள்களிலும் ஒத்து காணப்படும் வண்ணம் வடிவு தொழில் பயன் ஆகியவற்றின் ஒப்புத் தன்மையைப் ‘பொதுப்பண்பு’ என்பர்.

அத்தன்மையினை விளக்குவதற்கு உவமைக்கும் பொருளுக்கும் இடையில் காணப்படும் சொற்கள் “உருபுகள்” ஆகும்.

.

## உவமையும் உருவகமும்

ஒன்றைப் போல் ஒன்று இல்லாத இரண்டு பொருள்களை ஒப்பிடப் பல சமயங்களில் உருவகமும் உவமையும் பயன்படுத்தப்படுகின்றன.

உவமையில் போல, போன்று. மாதிரி என்றவாறு ஏதேனும் ஒரு சொல்லினால் (உவம உருவு) ஒப்புமை உணர்த்தப்படுகிறது

உருவகத்தில் ஒப்புமை உட்குறிப்பாக உள்ளது அல்லது உட்பொதிந் துள்ளது. உருவகச் சொல் நேர்ச் சொல்லுக்குப் பதிலாகப் பதிலீடு (substitution) செய்யப்படுகிறது.

உவமை என்னும் வலருங் கூத்தி
பலவகைக் கோலம் பாங்குறப் புனைந்து
காப்பிய அரங்கிற் கவின்பெறத் தோன்றி
யாப்பு அறி புலவர் இதயம்
நீப்பு அறு மகிழ்ச்சி பூப்ப நடிக்குமே.

உவமை என்பவள் ஒப்பற்ற நாட்டிய மங்கை. அவள் பலவேறு கோலங்களைக் கொண்டு காவியம் என்னும் மேடையிலே அழகுபொலியத் தோன்றி, பாட்டின் சுவையை அறியும் ரசிகர் மனத்தில் நீங்காத இன்பம் மலர நடிக்கிறாள்.
"உவமை என்னும் தவலரும் கூத்தி....பல்வகைக் கோலம் பாங்குறப் புனைந்து நீப்பறுமகிழ்ச்சி பூப்ப நடிக்குமே" என்பது தண்டியலங்காரச் சூத்திரம்.

அதாவது உவமை என்னும் கூத்தி, பலவேறு அணிகளாக வேடமிட்டு வருகிறாளாம். (இதுவே உருவகம்தான். உவமை என்பதைக் கூத்தி என்று பெண்ணாக உருவகித்து விட்டார் இந்த இலக்கணக்காரர். ஆனால் உவமைதான் அடிப்படை அணி என்கிறார்.

## தொல்காப்பியத்தில் உவம இயல்

உவமை என்பது சம்ஸ்கிருதத்தில் ''உபமா'' எனப்படும். தொல்காப்பியரும் கூட இதைத் தமிழ்ப் படுத்தி உவமம் என்கிறார்.

உவம இயல் என்றே தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் ஒரு பிரிவு இருக்கிறது. அதில் அவர் 38 உவம உருபுகளைப் பட்டியல் இட்டுள்ளார்.

---

அதில் நிறைய உருபுகளை சங்க இலக்கியத்தில் கூடக் காண முடியவில்லை.

நமக்கு எல்லோருக்கும் தெரிந்த உவம உருபு ''போல'' என்பதாகும். ரோஜா மலர் போல இதழ், ஆப்பிள் பழம் போலக் கன்னம் என்றெல்லாம் சினிமா வசனங்களில் கேட்கிறோம். ஆனால் தொல்காப்பியர் தரும் பட்டியலைப் பாருங்கள்:–

அன்ன, அங்க, இறப்ப, உறழ, என்ன, எள்ள ஏய்ப்ப, ஒன்ற, ஒடுங்க, ஒப்ப, ஒட்ட,ஓட, கடுப்ப, கள்ள, காய்ப்ப, தகைய, நடுங்க, நந்த, நளிய, நாட, நிகர்ப்ப, நேர, நோக்க, புல்ல, புரைய, பொருவ, பொற்ப, போல, மதிப்ப, மருள, மறுப்ப, மான, மாற்ற, வியப்ப, விளைய, வீழ, வென்ற, வெல்ல.

இதில் 14 உருபுகள் சங்க இலக்கியத்தில் காணப்படவில்லை. என்றும் சங்க இலக்கியத்தில் 28 கூடுதல் உவம உருபுகள் பயன்படுத்தப்பட்டன.

## தாயுமானவரின் உவமைகள்

தாயுமானவர் உவமைநயங்கள் பல, சொல்லியலாலும், பொருளமைப்பாலும் தனிச்சிறப்பு பெறுகின்றன என்பது வெளிப்படை.

அந்த வகையில் தாயுமானவர் பாடல்களில் உவமை நயங்களினூடான நுட்ப வேறுபாடுகளைக் காண முடிகிறது.

மேலும் இது வாசிப்போரின் மனநிலையை பொறுத்து, விரிவும் செறிவும் பெற்றுத் திகழ்வதோடு, தாயுமானவர் பாடல்களுக்கான கருத்தேற்றத்திற்கும் துணை செய்வது குறிப்பிடத்தக்கது.

இந்த தொகுப்பில் உவமைளும் இருக்கலாம். உருவகமும் இருக்கலாம்.

"உவமை என்னும் தவலரும் கூத்தி....பல்வகைக் கோலம் பாங்குறப் புனைந்து நீப்பறுமகிழ்ச்சி பூப்ப நடிக்குமே" என்பதற்கிணங்க "தாயுமானவரின் உவமைகள்" என்று தலைப்பிட்டிருந்தாலும் உருவகமும் இத்தொகுப்பில் தொகுக்கப்பட்டுள்ளது.

தாயுமானவர் பாடல்களில் உள்ள உவமைகளை (உருவகங்களையும் சில இடங்களில் மட்டும் சேர்த்து) "தாயுமானவரின் உவமைகள் 100" என்று தலைப்பிட்டு தொகுத்து தந்துள்ளோம்.

---

எங்களுடைய நோக்கம், தாயுமானவரின் தத்துவங்கள் மானுடம் முழுவதும் பரப்ப வேண்டும். அவரது பாடல்களை விதைக்க வேண்டும்.

தாயுமானவரின் உவமைகளில் முத்தான சில துளிகளை மட்டும் (100 துளிகளை) எடுத்துக் கோர்த்துள்ளோம்.

எல்லாரும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற கோணத்தில்தான் இந்த மாலை கோர்த்து சூட்டடப்பட்டுள்ளது.

தாயுமானவரின் உவமைகளையும் அதன் மூலம் அவர் மானுடத்திற்கு சொல்ல வரும் தத்துவங்களையும் பெற்று ஆனந்தமடைவோம்.

ஆனந்தம்! ஆனந்தம்! ஆனந்தமே!

வாழத்தெரிந்திடில் ஆனந்தமே!!!

செங்கற்பட்டு

25.09.2018

வழக்கமான வணக்கங்களுடன்,

பானுகுமார்

---

# பொருளடக்கம்


1. கன்னிப் பெண்ணும் மங்கையும் போல (சுகவாரி 1 -  தா.பா.77)
2. உழவும் தவமும் (ஆனந்தமானபரம் 6-  தா.பா.72.)
3. ஆறுஅனைத்தும் புகும்கடல்போல் (ஆகாரபுவனம் 3 -  தா.பா.134.)
4. மனம் சிந்திய பாதரசம் போல (பரபூராண.பா.6.தா.பா.9)
5. கண்இலாக் குழவியைப்போல் (சின்மயானந்தகுரு. 6 - தா பா.31.)
6. தேரின் அச்சாணி அசைவற்று இருப்பது போல (மௌனகுரு வணக்கம்.9 – தா.பா.45.)
7. மடல் விரியும் மலர் போல (கருணாகரக்கடவுள் 9 –தா. பா.55.)
8. சந்தையில் கூடும் கூட்டம்போல்  (தேஜோமயானந்தம் 3 தா.பா. 113)
9. சுழலுகின்ற காற்றாடி போல (சித்தர்கணம்.7. தா.பா.63.)
10. பலசரக்கு கடைப்போல் (ஆனந்தமானபரம் 3 -  தா.பா.69.)
11. **ஆனந்த மழை  (**பரசிவ வணக்கம். (பா.2.தா.பா.2)
12. உயிர் காக்கும் மருந்துபோல் (சுகவாரி 4 -  தா.பா.80.)
13. துணையின்றி வாழமுடியாத பெண்மைபோல் (சுகவாரி 6 - தா.பா.82.)
14. விண்ணிலிருந்து மழை பொழிவது போல (சுகவாரி 7 -  தா.பா.83.)
15. காலூன்றி மழைபொழிதல் போல் (சுகவாரி 8 -  தா.பா.84.)
16. தீப்பந்தத்தில் பட்ட மெழுகு போல் (சுகவாரி 11 -  தா.பா.87.)
17. நீர்க்குமிழிக்குப் பூண் கட்ட முடியாதவாறு போல் (யாக்கையைப் பழித்தல் 2 -  தா.பா.1117)
18. கணவனுக்கு அடங்காத மனைவிபோல (எங்கும் நிறைகின்றபொருள் 4 -தா.பா.92)
19. எரியும் நெருப்பில் பட்ட மெழுகுபோல் (சுகவாரி 12 -  தா.பா.88.)
20. அனலுடன் ஒன்றி நிற்பது போல (சிற்சுகோதய விலாசம் 2 - தா.பா.123.)
21. ஓடுகின்ற காக்கைபோல் ( அன்பர் நெறி 6 -  தா.பா.1249.)
22. பண்ணின் இசைபோல (நிற்கும் நிலை 1 -  தா.பா.1271.)
23. பெய்கின்ற முகில்காள்எம் பெருமான் நும்போல் (ஆகாரபுவனம் 26- தா.பா.157.)
24. வாயில்லாத குடம் போல் (ஆகாரபுவனம் 25 -  தா.பா.156.)
25. நோயாளி போல (ஆகாரபுவனம் 24 -  தா.பா.155.)

---

26. **கு**டத்தில் கையை விட்டுத் தேடுவது போல (ஆகாரபுவனம் 29 - தா.பா.160.)
27. வானத்தில் அடங்கி நிற்கும் காற்று போல (நிற்கும் நிலை 5 - தா.பா.1275.)
28. தண்ணீரில் கலந்த உப்புபோல (நிற்கும் நிலை 6 - தா.பா.1276.)
29. இரும்பு உருகித் தீயாக விளங்குவது போல (நிற்கும் நிலை 7 - தா.பா.1278.)
30. மலரும் மணமும் போலவும் (ஆகாரபுவனம் - 1 தா.பா.132)
31. கல்லின்முன் எதிர்நிற்குமோ? (எங்கும் நிறைகின்றபொருள் 6 - தா.பா.94)
32. ஒளிகண்டு ஒளிக்கின்ற இருள் போல (எங்கும் நிறைகின்றபொருள்11 -தா.பா.99.)
33. அளக்கும் கருவியில் முகப்பது போல (சச்சிதானந்தசிவம் 2 - தா.பா.101.)
34. தாய் இலாப் பிள்ளைபோல் (சச்சிதானந்தசிவம் 1 -தா.பா.100.)
35. உள்ளங்கை நெல்லிக்கனிபோல (சச்சிதானந்தசிவம் 7 -தா.பா.106.)
36. ஆடாமல் ஓய்ந்திட்ட பம்பரம் போல (தேஜோ மயானந்தம் 4 - தா.பா.114.)
37. கூட்டத்தை விட்டுப் பிரிந்த மான்போல (ஆகாரபுவனம் 2 - தா.பா.133.)
38. நிகரஇல்பசு பதியான பொருளை நாடி (பொருள்வணக்கம் 12 – தா.பா.25)
39. மணலை எண்ணிக் காண்பது போல் (ஆகாரபுவனம் 16 - தா.பா.147.)
40. மானைக் காட்டி மானைப் பிடிப்பதுபோல (ஆகாரபுவனம் 17 - தா.பா.148.)
41. தேன்குடித்த வண்டு போல (சுகவாரி 23 - தா.பா.154.)
42. நெருப்பில் பட்ட கற்பூரம்போல (சுகவாரி 22 - தா.பா.216.)
43. அலையில்லாத கடல் போல (பன்மாலை 9 - தா.பா.183.)
44. அறியாமை மிகுந்த நாய் போல் (நினைவு ஒன்று 4 - தா.பா.188.)
45. அனலில் பட்ட மெழுகுபோல் (நினைவு ஒன்று 8 - தா.பா.192.)
46. இரும்பைக் காந்தம் இழுப்பதுபோல (பொன்னை மாதரை 24 - தா.பா.217.)
47. ஊமை கண்ட கனவு போல் (பொன்னை மாதரை 30-தா.பா.223.)

---

48. கையில் ஆமலக்கனி ஆகிய மெய்யனே (பொன்னை மாதரை 31- தா.பா.224.)
49. கடலில்பட்ட துரும்புபோல (ஆரணம் 3-தா.பா.274.)
50. கடுகுக்குள் கடலை அடைப்பதும்போல் (சொல்லற்கு அரிய 1 - தா.பா.282.)
51. பற்றிவரும் குழந்தை போல் (சொல்லற்கு அரிய 4 -  தா.பா.285.)
52. தாயிலாச் சேய்போல் அலைந்தலைப் பட்டேன் (சிவன்செயல் 5 - தா.பா.306.)
53. காற்றின் நடுவே மாட்டிக் கொண்ட இலவம் பஞ்சு போல (ஆசை எனும் 1 -  தா.பா.322.)
54. புரப்பான்தன் அருள்நாடி இருப்பதுபோல் (ஆசை எனும் 2 -  தா.பா.323.)
55. சாட்டை இல்லாத பம்பரக் கூட்டம் போல (ஆசை எனும் 3 - தா.பா.324.)
56. மத்தமதி யினர்போல (ஆசை எனும் 9 -  தா.பா.330.)
57. இடத்தைக் காக்கும் நாய்போல (ஆசை எனும் 27 -  தா.பா.348.)
58. பாட்டுஅளி  நறவம் உண்டு அயர்ந் தது போல (ஆசை எனும் 39 - தா.பா.360.)
59. அந்தரத்தில் நிறுத்துஅவ தானம் போல (மண்டலத்தின் 1 - தா.பா.390.)
60. பாயப் புலிமுனம் மான்கன்றைக் காட்டுவது போல் (பாயப்புலி 1 - தா.பா.401.)
61. குண்டலினி ஆற்றல் மழை மேகம் போல் (பாயப்புலி 28 -  தா.பா.428.)
62. கன்றுகெட்டால் தாய் இருகே காண். (உடல்பொய் உறவு 35 - தா.பா.494.)
63. பட்டினத்தடிகள் துறவு மேற்கொண்டது போல, (உடல்பொய் உறவு 57 - தா.பா.516.)
64. இன்பத்தை சொல்லமுடியாத தன்மை போல (உடல்பொய் உறவு 60 - தா.பா.519.)
65. ஊஞ்சல் கயிறு போல (ஏசற்ற அந்நிலை1 - தா.பா.543.)
66. வண்டு தேனுக்காக ஏங்குவது போல (திடம் உறவே 5 -  தா.பா.401.)
67. கண்மணி போல் (மலைவளர்க் காதலி 6 -  தா.பா.583.)
68. சுவை கண்டவரது நாவினைப் போல (நிற்கும் நிலை 11 - தா.பா.1281.)

69. கண்ணில்லாத ஊர்க்காளை போல (மலைவளர்க் காதலி 7 - தா.பா.584.)
70. கன்றினுக்குச் சேதா கனிந்து இரங்கல் போல (பராபரக்கண்ணி 34 - தா.பா.669.)
71. ஆழித் துரும்பு போல் (பராபரக்கண்ணி 36 - தா.பா.671.)
72. கொழுந்தில் வயிரம்எனக் (பராபரக்கண்ணி 88 - தா.பா.723.)
73. விளையும் பயிரை அதன் முளையிலே (பராபரக்கண்ணி 89 - தா.பா.724.)
74. அப்பும் உப்பும் போன்ற (பராபரக்கண்ணி 147 - தா.பா.782.)
75. துள்ளிக் குதிக்கும் பேய்க்குரங்கு போல (பராபரக்கண்ணி 172 - தா.பா.807.)
76. சிறுபிள்ளைகள் மணல்சோறு சமைத்து உண்பது போல (பராபரக்கண்ணி 187 - தா.பா.822.)
77. நீர்க்குமிழி போல (பராபரக்கண்ணி 204 - தா.பா.839.)
78. சுழன்று ஓய்ந்துபோன பம்பரம் போல (பராபரக்கண்ணி 205 - தா.பா.840.)
79. கல் கொண்டு வீச பாசி கலைந்து நல்ல நீர் தெரிவது போல (பராபரக்கண்ணி 214 - தா.பா.849.)
80. கரைக்கின்ற அஞ்சனம்போல் (பராபரக்கண்ணி 286 - தா.பா.921.)
81. கடைந்து வெளிப்படுத்தல் போல (பராபரக்கண்ணி 312 - தா.பா.947.)
82. கண் இன்றி நிகழுமோ? அதுபோல (பராபரக்கண்ணி 337 - தா.பா.972.)
83. ஓவியம்போல் நிற்கின்றஎனை (பைங்கிளிக்கண்ணி 28 - தா.பா.1052)
84. விலை கொடுத்து வாங்குவது போல (மாதர் மயக்கு அறுத்தல் 3 - தா.பா.1129.)
85. ஆழமான கடல் போல (மாதர் மயக்கு அறுத்தல் 11 - தா.பா.1137.)
86. குளிர்ந்த சந்திரஒளி கூட வெப்பம் தருவது போல் (மாதர் மயக்கு அறுத்தல் 12 - தா.பா.1138.)
87. பாம்பின் வாயில் அகப்பட்ட தேரை போல் (தத்துவ முறைமை 8 - தா.பா.1149.)
88. யானையின் வாயில் அகப்பட்ட கரும்பு போல (தத்துவ முறைமை 9 - தா.பா.1150.)

89. பிறவிக் குருடனுக்கு எங்கும் இருளாகவே தோன்றுவது போல (தத்துவ முறைமை 16 - தா.பா.1157.)
90. வறுத்த பொரி போல் (தத்துவ முறைமை 21 - தா.பா.1162.)
91. கைவிளக்கின் பின்னேபோய்க் காண்பார்போல் (பொருள் இயல்பு 1. தாயு.பா.1195)
92. நீரில் மூழ்குவது போல (ஆனந்த இயல்பு 5 - தா.பா.1218.)
93. இனியா தின்றால் இனிப்பனபோல் (ஆனந்த இயல்பு 13 - தா.பா.1226.)
94. பெய்கின்ற முகில்காள்எம் பெருமான் நும்போல் (ஆகாரபுவனம் 26 - தா.பா.157.)
95. சூரியனைக் கண்ட தாமரை மலர் மலர்வது போல (அன்பு நிலை 1 - தா.பா.1228.)
96. வானமுகில் கண்ட மயூரபட்சி போல (அன்பு நிலை 2 - தா.பா.1229.)
97. சந்திரனை விரும்பும் சகோரப் பறவை போல (அன்பு நிலை 3 - தா.பா.1230.)
98. கருப்புவட்டை வாய்மடுத்துக் கண்டார்நாப் போல (நிற்கும் நிலை 11 - தா.பா.1281.)
99. சுடச்சுட ஒளிவிடும் பொன்கட்டி போல (பராபரக்கண்ணி 354 - தா.பா.989.)
100. கடல்மடை திறந்தால் போல (அன்பு நிலை 11 - தா.பா.1236.)

நன்றி. தாயுமானவரின் உவமைகள்....மன்னார்குடி பானுகுமார்.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 1. கன்னிப் பெண்ணும் மங்கையும் போல

பேரின்பம் பெறுவதற்கான வழிவகைகளைச் சொல்லும் தாயுமானவர் அதற்கும் ஒரு சிறப்பான உவமையை இந்தப் பாடலில் தருகிறார் தாயுமானவர். உவமையின் அழகைச் சற்றுச் சுவைக்கலாம் வாருங்கள்.

இனிய அமுதம், கனி, சாக்கரைப் பாகு, கற்கண்டு, சீனி,தேன் என்னும்

---

இவைபோல சுவைக்குமாறு வலியவந்து, இன்பம் கொடுத்த நின்னை,

எப்பொழுதும் நினது அடியார்கள் இடைவிழாது உள்ளம் உருகி,

மனவேகம் குறைய, உரைகுழறி, உடல்ஓய்ந்து, பரவசமாகி,

உயர்வதற்கு அருமை உடைய பேரின்ப அனுபவத்தைப் பெற்று,

உள்ளது உள்ளபடி உணர்விலே உணர்வார்கள்.




கன்னிப்பெண் ஒருத்தி, சிற்றின்பத்தை வேம்புபோல் கசப்பானது என நினைத்திருந்தும்,

மங்கைப் பருவம் வந்தவடன், கணவனுடன் கூடி இன்பந் துய்த்த பிறகு,

முன்னம் அதனை பழித்துரைத்ததை நினைந்து நகை செய்வாள்.

அதுபோல சொன்னபடி கேட்டு நடக்கும் அறிவிலியாகிய எனக்கு

நின்னுடைய அருட்பெருக்கு உளதாயின்,நீங்காத பேரின்பம் தோன்றுமாம்.

தாயுமானவரின் அந்தப் பாடல்

(சுகவாரி 1 -  தா.பா.77)

இன்னஅமுது கனிபாகு கற்கண்டு சீனிதேன்
  எனருசித் திட, வலியவந்து

---

இன்பங்கொ டுத்த நினை எந்நேரம் நின்அன்பர்
இடையறாது உருகிநாடி,

உன்னிய கருத்தஅவிழ உரைகுளறி, உடல்எங்கும்
ஓய்ந்துயர்ந் தவசமாகி
உணர்வுஅரிய பேரின்ப அநுபூதி உணர்விலே
உணர்வார்கள் உள்ளபடிகாண்

கன்னிகை ஒருத்திசிற் றின்பம்வேம்பு என்னினும்

கைக்கொள்வள் பக்குவத்தில்,

கணவன் அருள் பெறின்முனே சொன்னவாறு என்எனக்

கருதிநகை யாவள். அதுபோல்

சொன்னபடி கேட்கும் இப் பேதைக்கு நின்கருணை

தோற்றின் சுகாரம்பமாம்.

சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரம்

ஜோதியே சுகவாரியே!

## இந்தப் பாடலில்

இந்தப் பாடலில் கன்னிப்பெண் ஒருத்தியை உவமையாக கூறுகிறார். மற்றவர்கள் சொல்படி கேட்டு நடக்கும் அறிவற்றவனாகிய சாதகனுக்கு, இறையருள் அருள் இருந்தால் நீங்காத பேரின்பம் கிடைக்கும்.

நம்முள்ளே இருக்கும் பேரானந்த நிலையை உணர்வதற்கு
சுயத்தில் உள்ள மூலப்பொருளை உணர்தலே உன்னதம், உத்தமம்
ஏனெனில் மூலப்பொருள் என்பது
ஆனந்தமானது அழகானது ஆழமானது
சுயமே சுகம் Self is joy
சுயத்தை உணர்ந்து சுகத்தில் சுகிப்போம்
இறையருள் பெற்று

---

பேரின்பத்தில் திளைக்கலாம் அல்லவா?

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

# 2. உழவும் தவமும்

இலக்கியத்திற்கு மிக இன்றியமையாதது உவமை. உவமையிலிருந்துதான் ஏனைய அணிகள் எல்லாம் தோன்றியள்ளன.

அதனால்தான் தொல்காப்பியம், தமிழரின் இலக்கியக் கொள்கை கூறும் பொருள் அதிகாரத்தில், உவமயியலை வைத்துள்ளது.

பின்பு தண்டியியலிருந்து தனி அலங்கார இலக்கண நூற்கள் வளர்ந்தன.

நுண்மையான செய்திகளைத் தெளிவுபடுத்த உவமைகள் பயன்படுகின்றன.

நாம் தினந்தோறும் காண்கின்ற பொருள்களையே வைத்துத் தொடர்புபடுத்திக் காட்டும்போது. நாம் எளிதில் கருத்துக்களைப் பரிந்து கொள்ள முடிகின்றது.

திருநாவுக்கரசர் பாடல் ஒன்று உழவு உவமையை அழகாகப்படம் பிடித்துக் காட்டும். அது போன்ற உழவு உவமையைத் தாயுமானவர் எவ்வாறு பயனபடுத்தியுள்ளார் என்பதை இப்பாடலில் காண்போம்.

மலையோடு சார்ந்த பெருங்காடு. அதுவும் இருள் பொருந்திய காடு. அக்காட்டை நன்செய் நிலமாக மாற்ற முதலில் அடர்ந்து செறிந்த மரங்களை வெட்டி அப்புறப்படுத்தல் வேண்டும்.

பின் அங்குள்ள கற்களைப் பிளந்து நீக்கிச் செம்மைப் படுத்த வேண்டும்.

திருத்திய நிலத்தில் நல்ல விதை விதைக்கப்படுகின்றது.

---

சிறுமுளையாகத் தோன்றிய அப்பயிருக்கு நீரும், வளமும்- வளரும் வரைப் -பறவை விலங்குகளிடமிருந்து- பாதுகாப்பும் அளிக்கப்படுகிறது.

பயிரை அழிக்கும்பூச்சிகள் விழாதவாறு- காக்கப்படுகின்றது. நல்ல விளைச்சல் கிடைக்கின்றது.

இவ்வாறு காத்தால், விளைந்த போகத்தை உணர்ந்த அன்பர் கூட்டத்தோடு எப்போதும் இருக்கும் நிலையை நீ தந்தாதல்,

அதுவே எனக்கு இன்பமாக அமையும எனப் பேசுகின்றார் தாயுமானவர்.

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(ஆனந்தமானபரம் 6- தா.பா.72.)

கார் ஆரும் ஆணவக் காட்டைக் களைந்து, அறக்
 கண்டு, அககங் காரம்என்னும்
கல்லைப் பிளந்து, நெஞ்சு அகமான பூமிவெளி
 காணத் திருத்தி, மேன்மேல்

பார் ஆதி அறியாத மோனம் ஆம் வித்தைப்
 பதித்து, அன்பு நீர்ஆகவே
பாய்ச்சி, அது பயிராகும் மட்டும் மாயை வன்
 பறவைஅணு காதவண்ணம்

நேராக நின்று, விளை போகம் புசித்து உய்ந்த
 நின்னன்பர் கூட்டமெய்த,
நினைவின் படிக்குநீ முன் நின்று காப்பதே
 நின் அருள் பாரம் என்றும்.

ஆர் ஆரும் அறியாத சூதான வெளியில்வெளி
 ஆகின்ற துரியமயமே
அண்டபகி ரண்டமும் அடங்கஒரு நிறைவுஆகி
 ஆனந்த மானபரமே.

---

இந்தப் பாடலில் -- மனம் – நெஞ்சம்தான் நிலம். அந் நெஞ்சத்தில் செம்பினால் களிம்புபோல் மண்டிக் கிடக்கிறது ஆணவப் பெருங்காடு.

அதன் மிகுதியும் செறிவும்; நெஞ்சை இருளாக்கிவிடுகின்றன.

எதற்கெடுத்தாலும் "நான்" "நான்" என்பதே ஆணவ நிலை. அக்காட்டை வேரறு நிலையில் அறவே களைதல் வேண்டும்.

அகங்காரமாமகிய , அகக் காரணமாகிய கற்கள் உடைத்து எறியல் வேண்டும்.

இவ்வாறு நெஞ்சத்தை செம்மையாக்கி, சமமாக்கி, வெளியாக்கிப் பின்பு மௌனமாகிய விதையை விதைக்க வேண்டும்.

உலக உயிர்கள் அனைத்திடமும் அம்மோன நிலையையிலும் அன்பைச் செலுத்துமளவில் அன்பு நீரைப் பாய்ச்சுதல் வேண்டும்.

இதற்கிடையே அம்மோனப் பயிர் வளராத வண்ணம் தடுக்கின்ற மாமாயை யாகிய இவ்வுலக மயக்கம், மெய்ம்மை விளையா வண்ணம் செய்கின்ற மயக்கம் என்னும் பறவை என்பனவற்றிடமிருந்து அதனைக் காத்தல் வேண்டும்.

அவ்வாறு காத்தால் அதினின்று இன்ப நுகர்வாகிய பயனைப் பெற முடியும்.

இது போன்றே மோனப் பயிர் வளர்த்த அன்பர் கூட்டத்திடையே வாழ முடியும்.

இத்தகு கருத்துக்களை, நுண்மையான கருத்துக்களைப் பருப் பொருளை வைத்து விளக்கும் போது தெளிவு கிடைக்கின்றது. இனிமை பயக்கின்றது. தாயுமானவரின் கைவண்ணமும் கவியாற்றலும் உவமையாட்சியும் தெளிகின்றன.

ஆணவம், கன்மம், மாயைகளால் அலைக்கழியும் இந்த உயிர் அறியாமை, இருள், மறப்பு, துன்பம் போன்ற பல் தன்மைகளை உடையது.

பேரறிவாகிய இறைவன், அறிவு, ஒளி. நினைவு, இன்பம் இவற்றை நிலையாகக் கொண்டுள்ளான்.

முழு அறிவு, முழு ஒளி, முழு நினைவு, முழு இன்பம் என எல்லாவற்றிலும் முழுமை தர, எல்லா நிலையிலும் முழுநிலைபெற்ற முழு முதலாலேயே இயலும்.

ஆகவேதான் இறைவனைப் பேரறிவு, பேரொளி, பேரின்பம் போல பல பெயர்களால் அழைக்கின்றறோம்.

உயிர் அல்லது ஆன்மா இறைவனோடு இணையும் இணைப்பை இரண்டு உவமைகளால் சாதாரண மக்களும் புரிந்து கொள்ளக் கூடிய நிலையில் சொல்லுகிறார் தாயுமானவர். அதனையும் அறியாமையால் செய்வதாகவே சொல்லுகிறார்.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 3. ஆறுஅனைத்தும் புகும்கடல்போல்

தாயுமானவர் பாடல்கள் தேன் போல் இனிக்கும். அப்பாடல்களில் அவர் தரும் உவமைகளும் இனிக்கும். ஆறுகளையும் சமயங்களையும் ஒப்பிட்டு தனக்கே உரிய பாணியில் ஒரு தத்துவத்தை இந்தப் பாடலில் தருகிறார்.

பதினாறு வகைப் பேறுகளையும் அணுவைப் போல் சிறுமைப்படுத்தி உதறித்தள்ளும் நிலைக்கும், என்னை உயர்த்திய பேரின்பமயமாகிய வெள்ளப் பெருக்கே!



பேசாத நிலையாகிய மௌனநிலையே!

பெருமை பொருந்திய நிலை என உணர்த்தி, அதனில் என்னை நிலைநிறுத்திய அழிவில்லாத பேறே!

பாழ் எனப்படும் சூனியமாகிய கொடிய மாயா காரியங்கள் அனைத்தையும் கடந்து, மிச்சமாக நிற்கும் குறைவற்ற நிறைவே!

விளங்குகின்ற ஆறுகள் அனைத்தும் சென்று கலக்கும் கடல்போல் சமய கோடிகள் அனைத்தும் சென்று கலக்கும், உயிருக்குப் பழங்காலம் தொட்டு நட்பாய் விளங்கும் பொருளே!

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(ஆகாரபுவனம் 3 - தா.பா.134.)

“பேறு அனைத்தும் அணுஎனவே உதறித் தள்ளப்
பேரின்பம் ஆககவந்த பெருக்கே பேசா
வீறுஅனைத்தும் இந்நெறிக்கே என்ன என்னை
மேவுஎன்ற வரத்தே. பாழ் வெய்ய மாயைக்
கூறுஅனைத்துங் கடந்தஎல்லைச் சேஷம் ஆகிக்
குறைவுஅறநின் றிடும் நிறைவே, குலவா நின்ற
ஆறுஅனைத்தும் புகும்கடல்போல் சமயகோடி
அத்தனையும் தொடர்ந்துபுகும் ஆதி நட்பே.”

இந்தப் பாடலில் –இறைநிலையின் பெருமையைச் சொல்ல வந்த தாயுமானவர், சமயங்கள் அனைத்தும் ஒரு புள்ளியில்தான் ஒடுங்குகின்றன என்பதை ஆறுகள் அனைத்தும் சென்று கலக்கும் கடல்போல் என்ற உவமையை நம் மனதில் ஆழமாகப் பதிவு செய்கிறார்.

அமெரிக்காவைவையே திரும்பி பார்க்க வைத்தவர் நமது விவேகானந்தர். 1983 செப்டம்பர் 11 ல் நடைபெற்ற, உலக ஆன்மீக மகாநாட்டில் தாயுமானவரின் இந்தக் கருத்தைத்தான் கீதைப் பாடலுடன் கர்ஜித்தார் விவேகானந்தர்.

"எண்ணுமிரு நிலத்தெழுந்த பலநதியு மிறுதியில்வந்தெறிநீர் வேலை
நண்ணுகின்ற இயல்பது போற் பலவேறுதகையராய் ஞானநாடும்
மண்ணகத்தோர் செல்லு நெறி செம்மையதாய்க் கோடைணையாய்
மருவுமேனும் புண்ணியனே நினையடைய மார்க்கமவையனைத்துமெனப்
புகல்வன் யானே;”

இப்பாடலால் எந்த நன்னெறியின் வழி சென்றாலும் மக்கள் சேர்வது நதிகள் எத்தனை வழி சென்றாலும் முடிவில் கடலில் வந்து சங்கமிப்பது போல். பலவகைச்சமயங்களும் கூறும் நன்மார்க்கம் ஒன்றையே சார்ந்து நிற்கின்றனர்.

அது போல் கீதையும் "எந்த எந்த பக்தன் நம்பிக்கையுடன் எந்த எந்த வடிவத்தை அர்ச்சிக்க விரும்புகிறானோ அவனுடைய அசையா நம்பிக்கைக்குத் தக்க வடிவத்தை நான் மேற்கொள்ளுகிறேன்" என்று பரமெய்ஞானக் கருத்தை கீதை நாயகன் கிருஷ்ணர் உபதேசித்தார்.

அதை ஆங்கிலத்தில் விவேகானந்தர் எடுத்துரைத்தார்.

மேடைப் பேச்சுக் கலையின் சிகரத்தில் நின்று தமது முதல் நாள் சொற்பிழிவுகளிலேயே அதாவது பேச்சை ஆரம்பிக்கும் போதே "சுவாமிஜி சகோதரிகளே சகோதரர்களே" என்று அன்போடு அழைத்ததும் அதில் பாய்ந்து பரவிய ஆன்ம நேயம் அவையோரை அன்புப்பிடியில் கட்டுப்பட வைத்தது மட்டுமல்ல, சம்பிரதாயமான அந்நிய பாவம் விலகி உடன்பிறப்புகள் போன்ற உறவு முறை மேலோங்கி நின்றது.

அவரது மந்திரச் சொற்களுக்கு கட்டுப்பட்ட மக்கள் கரவொலி எழுப்பி அவரது சொற்பொழிவுகளுக்கு ஜெயஒலி ஒழுப்பினர்.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 4. மனம் சிந்திய பாதரசம் போல

தாயுமானவர் தமிழ் இலக்கிய உலகில் தனக்கென தனி முத்திரை பதித்த பாடல்களைப்பாடி மக்களின் உணர்வுகளுக்கும், உணர்ச்சிகளுக்கும் புத்துயிர் ஊட்டியவர் இவரே ஆவார்.



முதற்பொருள் (கடவுள்) என்பது ஐம்பூதங்களும் ஒடுங்குகின்ற மாயை என்று சிலரும்,

ஐம்பொறிகளும் அவற்றின் புலன் நுகர்வுகளும் அற்ற இடமே என்று சிலரும், அந்தக்கரணம் முடியும் இடம் என்று சிலரும்,

முக்குணங்கள் அடங்கும் இடமே என்று சிலரும், நாத வடிவே என்று சிலரும்,

---

- விந்துவே என்று சிலரும்,
- இவற்றுக்கு நடுநாயகமாய் விளங்கும் ஆன்மா என்று சிலரும்,
- உருவம் உள்ளது என்று சிலரும்,
- உருவம் அற்றது என்று சிலரும்,
- தற்போதம் அழிந்த இடம் என்று சிலரும்,
- திருவருளே என்று சிலரும்,
- தொடக்கமும் முடிவும் இல்லாத வெட்டவெளியே என்று சிலரும்,

வேறு பலவிதமாகக் கூறும் பலரும் இருக்கின்றனர்.

இதன் காரணமாக மனம் சிந்திய பாதரசம் போல சலனப்படுமே அல்லாது, பேரானந்த நிட்டை கூட முடியுமோ?

## தாயுமானவரின் அந்தப் பாடல்

( பரபூராண. பா.9. பக்.29)

பூதலயம் ஆகின்ற மாயைமுதல் என்பர்சிலர்.
  பொறிபுலன் அடங்கும் இடமே
பொருள் என்பர் சிலர். கரண முடிவு என்பர் சிலர். குணம்
  போனஇடம் என்பர்சிலபேர்

நாதவடிவு என்பர்சிலர். விந்துமயம் என்பர்சிலர்.
  நட்டநடு வேய இருந்த
நாமென்பர் சிலர். உருவுஉருவம் ஆம் என்பர் சிலர். கருதி
  நாடில்அருள் என்பர்சிலபேர்.

பேதம் அற உயிர்கெட்ட நிலையம்என் றிடுவர்சிலர்.
  பேசில்அருள் என்பர்சிலபேர்
பின்னும்முன் னும் கெட்டசூனியமது என்பர்சிலர்
  பிறவுமே மொழிவர். இவையால்

பாதரசமாய்மனது சஞ்சலப் படும் அலால்
  பரமசுக நிட்டை பெறுமோ?
பார்குமிடம் எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற
  பரிபூர ணானந்தமே!

---

பார்குமிடமெங்குமொரு நீக்கமற நிறைகின்ற அந்த தெய்வத்தை உணர்ந்தால் ஆனந்தமே என்று பாடுகிறார்.

## இந்தப் பாடலில்

தெய்வம் என்பது என்ன? எங்கிருக்கிறது? என்று - மானுடம் இன்னும் தேடிக் கொண்டிருப்பதை தாயுமானவர் அழகான உவமை மூலம் விளக்குகிறார்.

மனிதர்கள் - சிந்திய பாதரசம் போல் மனதை அலையவிட்டு தெய்வத்தை தேடிக் கொண்டிருக்கின்றனரே என்று ஆதங்கப்படுகிறார் தாயுமானவர்.

**கண்ணதாசன் தத்துவத்தை தாயுமானவர் சுருக்கமாக** பார்குமிடம் எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற அந்த தெய்வத்தை உணர்ந்தால் ஆனந்தமே என்று பாடுகிறார்.

தெய்வம் இருப்பது எங்கே
தெய்வம் இருப்பது எங்கே அது இங்கே வேறெங்கே

**தெளிந்த நினைவும் திறந்த நெஞ்சும் நிறைந்ததுண்டோ அங்கே**
**தெளிந்த நினைவும் திறந்த நெஞ்சும் நிறைந்ததுண்டோ அங்கே**
**தெய்வம் இருப்பது எங்கே**

**பொன்னும் பொருளும் நிறைந்தவர் நெஞ்சம் பொய்யில் வளர்ந்த காடு**
**பொன்னும் பொருளும் நிறைந்தவர் நெஞ்சம் பொய்யில் வளர்ந்த காடு**
**எண்ணும் எழுத்தும் நிறைந்தவர் நெஞ்சம் இறைவன் திகழும் வீடு**
**எண்ணும் எழுத்தும் நிறைந்தவர் நெஞ்சம் இறைவன் திகழும் வீடு**
**தெய்வம் இருப்பது எங்கே**

**ஆடை அணிகலன் ஆடம்பரங்கள் ஆண்டவன் விரும்புவதில்லை**
**ஆடை அணிகலன் ஆடம்பரங்கள் ஆண்டவன் விரும்புவதில்லை**
**அங்கொரு கண்ணும் இங்கொரு கண்ணும் ஆலய வழிபாடில்லை**
**அங்கொரு கண்ணும் இங்கொரு கண்ணும் ஆலய வழிபாடில்லை**
**இசையில் கலையில் கவியில் மழலை மொழியில் இறைவன் உண்டு**
**இசையில் கலையில் கவியில் மழலை மொழியில் இறைவன் உண்டு**
**இவை தான்தெய்வம் என்பதை அறிந்தால் ஏற்கும் உனது தொண்டு**
**இவை தான்தெய்வம் என்பதை அறிந்தால் ஏற்கும் உனது தொண்டு**
**தெய்வம் ஏற்கும் உனது தொண்டு**

தெய்வத்தை உணர்ந்து ஆனந்தமாக அதில் லயித்திருப்போமாக!

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 5. கண்இலாக் குழவியைப்போல்

சாதகன் ஒருவன் ஆணவத்தாலும், துன்பத்தாலும், உடலை மெய் என்று கருதியும் பிறப்பு இறப்பு என்ற சுழலில் சுழன்றும் வாழக்கூடாது என்பதை அழகான ஒரு உவமை முலம் சொல்கிறார் தாயுமானவர்.



இருளால் சூழப்பட்ட கருமை நிறமுடைய அறையில் அறிவும் கண்பார்வையும் இல்லாத குழந்தை கிடந்தாற் போல........

ஆணவ மலத்தால் கட்டுண்டு கிடந்த உயிரை, வெளியில் விட்டு, துன்பத்தையே காவலாக்கி, பொருத்தமான ஒரு பெயரும் வைத்து,

மெய் என்ற பெயர் பெற்ற பொய்யான பாழ்த்த உடல் வ்லுப்பெறும் வகையில்,

விளைந்த தானியங்களை உணவாகத் தந்து,

பெரிய இந்நிலவுலகில் வந்த பிறக்கவும் இறக்கவும் செய்து, அதைனையும் திருவிளையாடலாய் நிகழ்த்தி,

வேதம் கூறும் நியதிக்குப் புறம்பாக வாழந்தால் எமனை அனுப்பி அதட்டித் துன்பம் தந்தும்,

வேதவிதிப்படி ஒழுகின், துன்பத்தைப் போக்கி,

இரவுபகல் இல்லாத பேரின்ப வீட்டில் நன்றாக உறங்குமாறும் செய்கின்றாய்.

### தாயுமானவரின் அந்தப் பாடல்

(சின்மயானந்தகுரு. 6 - தா பா.31. )

---

காரிட்ட ஆணவக் கருஅறையில் அறிவுஅற்ற
  கண்இலாக் குழவியைப்போல்
கட்டுண்டு இருந்தஎமை வெளியில்விட்டு,அல்லலாம்
  காப்புஇட்டு, அதற்குஇசைந்த

பேரிட்டு, மெய்என்று பேசுபாழ்ம் பொய்உடல்
  பெலக்கவிளை அமுதம்ஊட்டிப்
பெரியபுவ னத்தினிடை போக்குவரவு உறுகின்ற
  பெரியவிளை யாட்டு அமைத்திட்டு,

ஏரிட்ட தன்சுருதி மொழிதப்பில் நமனைவிட்டு
  இடர்உற உறுக்கி இடர்தீர்த்து
இரவுபகல் இல்லாத பேரின்ப வீட்டினில்
  இசைந்துதுயில் கொண்மின்என்று
சீரிட்ட உலகுஅன்னை வடிவான எந்தையே
  சித்தாந்த முக்திமுதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே!
  சின்மயா னந்தகுருவே.

இந்தப் பாடலில் மனிதனிடம் இருக்கும் ஆணவம் முதலிய செயல்கள் ஒழிந்தால் இரவுபகல் இல்லாத பேரின்ப வீட்டில் நன்றாக உறங்கலாம் என்பதை சொல்ல வந்த தாயுமானவர் அழகான ஒரு உவமை மூலம் விளக்குகிறார்.

இருளால் சூழப்பட்ட கருமை நிறமுடைய அறையில் அறிவும் கண்பார்வையும் இல்லாத குழந்தை கிடந்தாற் போல இருந்த மனிதன் அந்த ஆணவக் கூட்டை உடைத்து வெளியே வரவேண்டும் என்பதை சொல்கிறார்.

ஆணவக் கூட்டிலிருந்து வெளியே வருவோமா?

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 6. தேரின் அச்சாணி அசைவற்று இருப்பது போல

தான் என்ற தன்முனைப்பு அபாயகரமானது என்பதை ஒரு உவமை வாயிலாக சொல்லி மானுடத்தை வழிநடத்துகிறார் தாயுமானவர்.

"நான்" என்னும் அகங்காரமானது வேட்டடைக்காரனை விடவும், கொடிய பேயை விடவும், பாழாய்ப்போன ஆணவ மலத்தை விடவும், வலிமை உடையது.

இது அறிவை மயங்கச் செய்யும். நடுநிலையை அறியவிடாது. எந்த ஒரு செயலைச் செய்தாலும், அதனுள் புகுந்து, பொறுமையைக் காப்பாற்றாது, வேண்டாத சொற்கள் பேசும்.

திருமால், சிவன், பிரம்மன் முதலரியோர்க்கு நிகர் என்று தன்னை கூறிக் கொள்ளும்.



தங்குதடை இன்றி ஓடும் தேரில், அதன் அச்சாணி அசைவற்று இருப்பது போல தான் அசையாது நிற்கும்.

"இங்குஎனக்கு நிகராக எவர் உளர்?" எனப் பெருமை பேசி,

இராவணன் போன்ற தன்மை உடையதாய்,

இதயமாகிய ஆகாயத்தில் தான் அரசாட்சி செய்து கொண்டிருக்கும்.

இந்த அகங்காரத்தோடு நீங்கி நில்லாத அடிமையாக நான், இதனோடு நான் போராட முடியுமா?

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(மௌனகுரு வணக்கம்.9 – தா.பா.45.)

ஆங்காரம் ஆனகுல வேடவெம் பேய்பாழ்த்த
  ஆணவத் தினும்வலிதுகாண்,
அறிவினை மயக்கிடும். நடுவுஅறிய ஒட்டாது
  யாதுஒன்று தொடினும் அதுவாய்த்

தாங்காது மொழிபேசும். அரிகரப் பிரமாதி
 தம்மொடு சமானம் என்னும்.
தடையற்ற தேரில்அம் சுருவாணி போலவே
 தன்னில்அசை யாதுநிற்கும்.

ஈங்குஆர் எனக்குநிகர் என்னப்ர தாபித்து
 இராவணா காரம்ஆகி,
இதயவெளி எங்கணும் தன்அரசு நாடுசெய்து
 இருக்கும். இத னொடு எந்நேரமும்

வாங்காநி லாது, அடிமை போராட முடியுமோ?
 மௌனோப தேசகுருவே!
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
 மரபில்வரு மௌன குருவே.

இந்தப் பாடலில் ஆணவத்தீனை பற்றி குறிப்பிடுகிறார். ஆணவம் தான், தனது என்ற பிரிவுகளை உடையது.

நான் என்பது அதிகார ஆணவப்பற்று. தனது என்பது பொருள் பற்று. தான் என்ற நான் என்ற ஆணவத்தால் அழிந்தான் இராவணன்.

நான் பெரியவன் நான் பெரியவன் என்று நாம் எண்ணும் போதே நாம் மிகச் சிறியவன் ஆகி விடுகிறோம். ஆணவத்தால் அழிந்தவர்கள் பலர்.

நல் குணத்தால் மற்றவரை மதித்து தன்னைப் போலவே பிறரையும் நேசித்து மற்றவர்களின் கருத்துக்கு மதிப்பு அளித்து வாழ்ந்தவர்கள் இறந்த பின்னும் வாழ்கின்றனர்.

கர்வத்துடன், ஆணவத்துடன், அகந்தையுடன் நடந்து கொள்ளும் மனிதனை வீட்டிலோ, அலுவலகத்திலோ, நாட்டிலோ யாரும் மதிப்பது இல்லை. ஆணவக்காரர்கள் பற்றிய பிம்பம் உடைந்தே இருக்கும். என்னை மிஞ்சிய ஆள் உலகத்தில் இல்லை என்ற எண்ணத்தை அகற்றி விட்டு, என்னை விட உயர்ந்தவர்கள், சிறந்தவர்கள் உலகத்தில் உண்டு என்ற எண்ணத்துடன் வாழ வேண்டும்.

கடவுள் உருவங்களை ஏற்றிச் செல்லும் தேர் நகர்ந்து செல்கிறது........!!!

அந்த தேரில் உள்ள கடவுளும் அலங்காரங்களும் நகர்ந்து செல்கிறது.......!!! தேரும் நகர்கிறது..........!!!

தேரினை இழுப்பவர்களும் நகர்கிறார்கள்.
இத்தனை நகர்தளுக்கு காரணமாக இருப்பது எதுவென்றால்........???

அந்த தேரில் சும்மா இருக்கும் அந்த அச்சாணி என்னும் அச்சாரம் தானே......!!! அச்சாணி இல்லையேல் நகர்தல் இல்லையே.......!!!

ஆக, அச்சாணி சும்மா இருந்ததால் அத்தனை இயக்கத்திற்கும் காரண கர்த்தாவாக இருப்பது போல.......!!!

நாமும் மனதளவில் சும்மா இருந்து பழகினால் நம்முடைய உணர்வு விரிந்து அனைத்து உயிர்களோடும் உணர்வுகளோடும் ஒன்றி நிற்க முடியும் தானே.......!!!

தேர் மட்டுமல்ல, நகரக் கூடிய அத்தனை சக்கரங்களும் நகராமல் இருக்கும் ஒரு பொருள் தானே காரணம்...!!!

மனமென்னும் சக்கரத்தை நகராமல் சாட்சியாக நகராமல் இருந்து பார்த்துக் கொன்சிருக்கும் ஒன்று அது எது என்று கண்டறிந்து அதனோடு லயித்து விட்டால் அதுவே "சும்மா" இருத்தலுக்கான யுக்தி.....!!!
முயர்ச்சித்துப் பார்ப்போமா......!!!

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 7. மடல் விரியும் மலர் போல

---

கல்நெஞ்சமுடைய சாதகனுக்கு இறையருள் எளிதாகக் கிடைக்கும் என்பதை உவமையின் வாயிலாக இந்தப்பாடலில் தாயுமானவர் சொல்கிறார்.



உடம்பானது மெலியவும், எலும்புகள் எல்லாம் நெகிழ்ந்து உருகவும், கண்களிலிருந்து கதகதப்பான நீர் பெருகவும்,

காந்தத்தைக் கண்ட ஊசி நெருங்கிச் சென்று ஒட்டிக் கொள்வது போல

ஓர் உறவாக ஒட்டிக்கொள்ள , நினைந்து நினைந்து மனம் படபட எனப் பதைப்பவும், உள்ளத்தில் நடுக்கம் தோன்றவும், பாடியும் ஆடியும் குதித்தும்,

குளிர்ந்த சந்திரன் போன்ற முகத்தில் நிலவொளி போல

புன்னகை தோன்றவும், ஆரவாரம் செய்து,

மடல் விரியும் மலர் போல கையை விரித்தும்,

பின்னர் கூப்பியும், "மேகமே! அம்மேகத்திலிருந்து பொழியும் இன்பம் தரும் மழையே!

அம்மழை நீர்-திரண்டு ஓடும் வெள்ளமே! நீ நீடுழி வாழ்வாயாகா!" என வாழ்த்திப் போற்றும்,

கடல் மடை திறந்தாற் போல

அன்பினைப் பொழியும்அன்பரது அன்புக்கு எளியை! கல் போன்ற நெஞ்சம் உடைய எனக்கும் எளிளையோ?

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(கருணாகரக்கடவுள் 9 –தா. பா.31.)

உடல்குழைய, என்பு எலாம் நெக்கு உருக விழிநீர்கள்
ஊற்று என வெதும்பி ஊற்ற

---

ஊசி காந்தத்தினைக் கண்டு அணுகல் போலவே
 ஒரு உறவும் உன்னிஉன்னிப்

படபடென நெஞ்சம் பதைத்துஉள் நடுக்குறப்
  பாடி ஆ டிக் குதித்துப்
பனிமதி முகத்திலே நிலவு அனைய புன்னகை

 பரப்பி, ஆர்த்து ஆர்த்து எழுந்து,

 மடல் அவிழும் மலர் அனைய கைவிரித்துக்கூப்பி,
 வானே அவ் வானில் இன்ப
மழையே மழைத்தாரை வெள்ளமே நீடூழி
 வாழியென வாழ்த்தி ஏத்தும்

கடல்மடை திறந்து அனைய அன்பர்அன் புக்கு எளியை.
  கல் நெஞ்ச னுக்கு எளியையோ?
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
  கருணா கரக் கடவுளே!

இந்தப் பாடலில் ---

சாதகன் உள்ளம் உருகி உடம்புமெலியவும், எலும்புகள் எல்லாம் நெகிழ்ந்து உருகவும், கண்களிலிருந்து கதகதப்பான நீர் பெருகவும், அந்தக் கடவுளை வாழ்த்தினால் அவனுக்கு இறையருள் அன்பினைப் பொழியும்.

அன்பரது அன்புக்கு இறைவன் எளியவனாகிறான். கல்போன்ற நெஞ்சமுடைய சாதகனுக்கும் இது கிடைக்கும் என்பதை விளக்கிறார். எளியை! கல் போன்ற நெஞ்சம் உடைய எனக்கும் எளியையோ?

இறையருளில் மூழ்கியிருப்போமா?

---

# 8. சந்தையில் கூடும் கூட்டம்போல்.

நிலையாமை தத்துவத்தை அழகிய உவமை மூலம் சொல்லி வாழும் வாழ்க்கையை நமக்குப் புரியவைக்கிறார் தாயுமானவர்.



தாய் தந்தை, உறவினர், மனைவி, பிள்ளைகள் என்னும் இவை அனைத்தும் சந்தையில் கூடும் கூட்டம்போல் கலைந்து செல்லும் தன்மை உடையது.

இதில் எந்தவித ஐயமும் கொள்ள வேண்டாம்.

அழகிய மாளிகை, மண்டபம், உப்பரிகை, நால்வகைப் படைகள் என இவற்றுடன் வாழும பெருவாழ்வும் ஒரு கண்கட்டி வித்தைபோல் ஏமாற்றும் தன்மை உடையதுவே.

வஞ்சனை, பொறாமை, உலோபம் ஆகியவை தங்கிய மனமெனும் புழு தங்கி இருக்கும் அழுக்கைச் சுமக்கும் உடல் எனிலோ. அதுவும் விருப்பம் கொள்ளுதற்கு இயலாத கனவு போன்றது ஆகும்.

எப்பொழுதும், வாழ்வையும் தாழ்வையும் சமமாகக் கண்டு, இரவுபகல் அற்ற வெளியில், ஏகமாய் நிற்கும் நினது திருவருள் வெள்ளத்தில்,

"யான்" என்னும் நினைப்பு அற மூழ்கி, சிந்தை தெளிவு பெறாது, மனமானது சுழல்வது எதனாலோ?

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(தேஜோமயானந்தம் 3 தா.பா. 113)

தந்தைதாய் தமர்தாரம் மகவுஎன்னும் இவையெலாம்
  சந்தையிற் கூட்டம், இதிலோ
சந்தேகம் இல்லை மணி மாடமாளிகைமேடை
  சதுரங்க சேனையுடனே

வந்தது ஓர் வாழ்வும் ஓர் இந்த்ரஜா லக்கோலம்

---

வஞ்சனை பொறாமைலோபம்
வைத்தமன மாங்கிருமி சேர்ந்தமல பாண்டமோ
வஞ்சனைய இலாத கனவே,

எந்தநா ளும் சரி எனத்தேர்ந்து தேர்ந்துமே
இரவுபகல் இல்லா இடத்து
ஏகமாய் நின்றநின் அருள்வெள்ளம் மீதிலே
யான் என்பது அறவுமூழ்கிச்

சிந்தைதான் தெளியாது சுழலும்வகை என்கொலோ?
தேடரிய சத்தாகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே.

இந்தப் பாடலில் நிலையாமை தத்துவத்தை நமக்குப் புரிய வைக்கிறார். . மனிதன் உயிருடன் இருக்கும்போது மனைவி, மக்கள் என்று சொல்லி மகிழ்ச்சியாக வாழ்கிறான்.

ஆனால், உடலை விட்டு உயிர் பிரியும் போது உயிருக்கு உயிராக இருந்தவர்கள் உடன் செல்லமாட்டார்கள் என்ற நிலையை,

மனையாளும் மக்களும் வாழ்வும்
தனமும் தன் வாயில் மட்டே
இனமான சுற்றமும் மயானம்
மட்டே வழிக் கேது துணை (பட்டினத்தார் பாடல்கள் ப.308)

நிலையாமைப் பற்றி நன்கு விளக்கியுள்ளார்.

சிந்தையில் தெளிவு பெற்று மனமற்று இருப்போமா?

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 9. சுழலுகின்ற காற்றாடி போல

அலைபாயும் மனதை அறியவைப்பதற்கு அழகான ஒரு உவமை வாயிலாக பாதை அமைத்து தருகிறார் தாயுமானவர்.

ஆண்களிலோ, பெண்களிலோ, என்னைப் போன்ற ஒரு அறிவிலி உலகத்தில் உண்டோ?



சுழலுகின்ற காற்றாடி போல என் மனமானது அலைந்து திரிய,

அதனை ஒரு நொடிப்பொழுதாயினும் அடக்கித் திருவருளைக் கண்டேன் இல்லை.

அதுவும் அல்லாது, கண்களை மூடி, மௌனமாய் இருந்து, ஓடுகின்ற பிராணனை நிறுத்தி, பதினாறு கலைகளுடன் திகழும் சந்திர மண்டலத்தைத் தொடுமாறு, மூலாதாரத்தில் சூட்டினை உண்டாக்க நினைக்கவும் இல்லை.

இதுநாள் வரை கற்று, கேட்டுப் பெற்ற உலக அறிவின் போக்கிலே வாழ்க்கையைப் போகவிட்டு, பொய் ஒழுக்கம் உடையவன் ஆனேன்.



நாயினும் கடைப்பட்ட அற்பனாகிய நான்,

மேலும்மேலும் வெறுமனே அலைந்து திரியாமல் இருக்க,

மலைபோல் வெளிப்படைத் தன்மையுடன் எம்முன்பு தோன்றி அருள்செய்ய வேண்டும்.

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(சித்தர்கணம்.7. தா.பா.63.)

ஆணிலே பெண்ணிலே என்போல ஒருபேதை
  அகிலத்தின் மிசை உள்ளதோ
ஆடிய கறங்குபோல் ஓடி உழல் சிந்தையை
  அடக்க ஒரு கணமேனும்யான்

---

காணிலேன் திருவருளை. அல்லாது மௌனியாய்க்
கண்மூடி ஓடுமூச்சைக்
கட்டிக், கலாமதியை முட்டவே மூலவெம்
கனலினை எழுப்ப, நினைவும்

பூணிலேன், இற்றைநாள் கற்றதும் கேட்டதும்
போக்கிலே போகவிட்டுப்
பொய் உலகன் ஆயினேன் நாயினும் கடைஆன
புன்மையேன். இன்னம் இன்னம்

வீணிலே அலையாமல் மலையிலக்கு ஆகநீர்
வெளிப்படத் தோற்றல் வேண்டும்.
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே!

இந்தப் பாடலில்

இரண்டு உவமைகளை வைக்கிறார் தாயுமானவர். மனம் தான் மனித வாழ்க்கையின் விளை நிலம். மனத்தின் தன்மை எதுவோ அதுதான் மனிதனுடைய தன்மை.

மனத்தை அடக்க நினைத்தால் அலையும். மனத்தை அறிய நினைத்தால் அடங்கும். அலைபாயும் மனத்தை அறிய வேண்டும். மனித மனம் என்பது இறைநிலையும், அதில் தோன்றும் காந்த அலையுமே ஆகும்.

## அலைபாயும் மனதை என்ன செய்வது?

பத்து நிமிடங்களுக்குத் தொடர்ந்து உங்கள் மனதை கவனியுங்கள்.

அங்கு உற்பத்தியாகி அலைபாய்கிற எண்ணங்களை எல்லாம் நேர்மையாக ஒரு காகிதத்தில் பட்டியல் போட்டுக் கொண்டே வாருங்கள்.

ஓர் இடைவெளிவிட்டு அதை உங்கள் நண்பரிடம் காட்டுங்கள் அல்லது நீங்களே படித்தாலும் சரி… இன்னும் உங்களுக்குப் பைத்தியம்

---

பிடிக்காமல் எப்படி இருக்கிறது என்று உங்களுக்கே ஆச்சரியம் வந்துவிடும்

இப்போது உங்களுக்கும், மனநோயாளிக்கும் பெரிய வித்தியாசம் இல்லை. ஒரே ஆறுதல், உங்கள் பைத்தியக்காரத்தனத்தை சமூகம் வரையறுத்துள்ள எல்லைகளுக்குள் வைத்திருக்கிறீர்கள்.

வெளியே தெரியாமல் மறைத்து ஒளித்து நாடகமாடும் தந்திரம்தான் உங்களைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது. பைத்தியக்காரத்தனத்தை ஒளித்து வைப்பது உங்கள் பிரச்சனைகளை முடிவுக்குக் கொண்டு வந்துவிடாது.

முழுமையான விழிப்பு உணர்வு இல்லாமல் உங்கள் வாழ்க்கை தன்பாட்டுக்குத் தற்செயலாக நடக்கவிட்டுக் கொண்டு இருந்தால், மனதுக்கு என்றைக்கும் திருப்தி கிடைக்காது.

வாழ்க்கையை ஒவ்வொரு கணமும் முழுமையாக வாழுங்கள். மனம் வீணாக அலைபாய்வதை நிறுத்திவிடும்.

மனம் அலைபாயாமல் வாழ்வோமா?

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 10. பலசரக்கு கடைப்போல்

சமயப் பற்றாலோ மந்திரங்களை கற்றதாலோ பிரணாயாமம் செய்வதாலோ இறைநிலையை அடைய முடியாது என்பதையும் ஆறு சமயங்களிலும் வெவ்வேறு பெயர்களில் விளங்கும் இறைநிலையின் திருவிளையாடல் பற்றியும் அழகான உவமைகள் இப்பாடலில் உள்ளதை காண்போம்.

ஒரு சாண் வயிற்றை வளர்ப்பதற்காக கருத்து மாறுபாடு கொண்டு விவாதம் புரிவார்கள்.

நிலவுலகும் வானவுலகும் ஒன்றாகுமாறு பேராசை கொண்டு, மனம் அலைந்து திரிய, மயக்க உணர்வுடன் இருக்க அறிவார்கள்.

பல வேறுபட்ட கோலம் கொள்ள அறிவார்கள்.

ஒரு மந்திரத்தை முணுமுணுத்துக் கொண்டே மனதை வேறுபக்கம் அலையவிடும் வித்தையை அறிந்திருப்பார்கள்.



பலசரக்கு கடைப்போல் பல சமயநூல் கருத்துக்களைக் கற்று, என்போல் கடைவிரிக்க அறிவார்கள்.

புலிபோல் சீறி மூச்சை எள்ளே இழத்தும் வெளியே விட்டும் பிராணாயாமம் செய்து, விழிசிவக்க நிற்பார்கள்.

தம்முடைய மதம் வலிமை உடையது என்று தாமச குணத்தில் நின்று பிதற்ற அறிவார்கள்.

ஆறுவகைச் சமயங்களிலும் வேறு வேறு பெயர்களில் வெளிப்பட்டு நின்று விளையாடும் உமது திருவிளையாடலை யாரால் அறிந்து கொள்ள முடியும்?

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(ஆனந்தமானபரம் 3 - தா.பா.69.)

மாறுபடு தர்க்கந் தொடுக்கஅறி வார்;சாண்
 வயிற்றின் பொருட்டது ஆக
மண்தலமும் விண்தலமும் ஒன்றாகி மனதுஉழல
 மாலாகி நிற்கஅறிவார்.

வேறுபடு வேடங்கள் கொள்ளஅறி வார் ஒன்றை
 மெணமெணென்று அகம்வேறதாம்
வித்தைஅறி வார்எமைப் போலவே சந்தைபோல்
 மெய்ந்நூல் விரிக்கஅறிவார்.

சீறுபுலி போல்சீறி மூச்சைப் பிடித்துவிழி
 செக்கச் சிவக்கஅறிவார்
திரம் என்று தந்தம் மதத்தையே தாமதச்
 செய்கைகொடும் உளற அறிவார்.

ஆறுசம யங்கள் தோறும் வேறுவேறு ஆகிவிளை
யாடும் உனை யாவர் அறிவார்?
அண்டபகி ரண்டமும் அடங்கவொரு நிறைவாகி

ஆனந்தம் ஆன பராபரமே!

இந்தப் பாடலில்

தேவையற்ற சமய விவாதத்திலும் மந்திரங்கள் சொல்லி முனுமுனுத்துக் கொண்டிருக்கும் மனிதர்களை தாயுமானவர் சுட்டிக் காட்டுகிறார்.

ஆறு சமயங்களிலும் வெவ்வேறு பெயர்களில் நிற்கும் உனது திருவிளையாடல் என்று இறைவனை பார்த்துக் கேட்கிறார்.

இறைநிலையை நாம் உணருவோமாகா!

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

# 11. ஆனந்த மழை

தாயுமானவர், இந்தப் பாடலில் மேகத்தையும் கடவுளையும் உவமைப்படுத்துகிறார். அல்லது உருவகப்படுத்துகிறார்,



மேகக்கூட்டம் பெருமளவில் வந்து மழையினைப் பொழிவதுபோல இறைவனும் பேரின்ப மழையை ஆனந்த மழையை பொலிவான் அழகாகவும் விரிவாகவும் விளக்கமாகவும் தெளிவாகவும் நமக்குத் தருகிறார்.

---

ஆனந்தமழையில் நினைய அழைத்துப் போகிறார் தாயுமானவர் . . .வாருங்கள் . . . .

(உயிர்கள் பல பிறவிக்குள் சென்று வந்துள்ளமையால்) பிறந்த ஊர்கள் பல.

பெற்ற பெயர்கள் பல.

சூழ இருந்த உறவுகள் பல.

செய்த நல்வினை தீவனைகளின் பயனாய்ப் பெற்ற உடல்கள் பல.

செய்யும் செயல்கள் பல. எழுந்த எண்ணங்களும் பல.

பெற்ற பேரும் புகழும் பல.

சென்று வந்த சொர்க்க நரகங்களும் பல.

வழிபட்ட நன்மை செய்யும் தெய்வங்களும் பல.

வேறுபட்ட கருத்துகளுடன் கூடிய சமயங்களும் பல.

அதனால், ஞானத்தைத் தரும் பராசத்தியின் அருளால் உணர்ந்து,

மேகக்கூட்டம் பெருமளவில் வந்து மழையினைப் பொழிவதுபோல



அன்பர்களது கண்ணிலும், மனமாகிய விண்ணிலும் திருவருளாகிய நீரைத் தேக்கி,

எண்ணுதற்கரிய பேரின்பமாகிய மழையினைப் பொழியும் மேகத்தை, நமது கடவுளை, நாலாம் நிலையாகிய துரிய வடிவத்தை.,

பல பெயர்களால் புகழ்ந்து பேசப்படுவதும்,

பல வேதங்களாலும் சிறப்பித்துச் சொல்லபட்டதும்,

ஆகிய மௌனம் என்னும் நிதிக்குவியலை,

---

பேசுவதற்கு அருமை உடையதும், எல்லையற்றதும், ஞானமயமானதும் ஆன

பெரிய பெருளைப் பணிந்து வணங்குவோம்.

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(திருவருள் விலாசப் பரசிவ வணக்கம். (பா.2.தா.பா.2)

ஊரனந் தம்பெற்ற பேரனந் தம்.சுற்றும்
உறவு அனந்தம். வினையினால்
உடல் அனந்தம். செயும் வினை அனந்ம்.கருத்
தோ அனந்தம். பெற்றபேர்

சீர் அனந்தம். சொர்க நரகமும் அனந்தநற்
றெய்வமும் அனந்தபேதம்
திகழ்கின்ற சமயமும் அனந்தம். அதனால் ஞான
சிற்சக்தி யால் உணர்ந்து

கார் னந் தம். கோடி வருஷித்தது  என அன்பர்
கண்ணும்விண்ணும் தேக்கவே,
கருதரிய ஆனந்த மழைபொழியும் முகிலை.நம்
கடவுளைத். துரியவடிவைப்

பேர் அனந்தம் பேசி மறையனம்.  தம்சொலும்
பெரிய மௌனத்தின் வைப்பைப்.
பேசரும் அனந்தபத ஞான ஆனந்தம். ஆம்
பெரிய பொருளைப் பணிகுவாம்."

இந்தப் பாடலில் சாதகன் ஒருவனை இறையருளைப் பெறும் வழிகளை உவமை மூலம் விளக்குகிறார் தாயுமானவர்.

அன்பர்கள் காதலாகி கசிந்து கண்ணீர் உருக மல்க வேண்டும். அன்பர்களது கண்ணிலும், மனமாகிய விண்ணிலும் திருவருளாகிய நீரைத் தேக்கி,

எண்ணுதற்கரிய பேரின்பமாகிய நமது கடவுளை உள்ளம் உருகி பிரார்த்தனை செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார்.ஞான ஆனந்தத்தில் மூழ்கி திளைப்போமாக!

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 12. உயிர் காக்கும் மருந்துபோல்

நிலையில்லாத இந்த உலகம் எப்படி இருக்கும் என்று காட்டுகிறார் நம் தாயுமானவர்...வாருங்கள்....

- எலும்பு எலாம் நெகிழ்ந்து உருகவும்,
- மயிர் சிலிர்ப்பவும், உடல் இளக்கம் கொள்ளவும்,
- மனம் அளலில்பட்ட மெழுகு போல் இடைவிடாது உருகவும்,
- மழைபோல் இரக்கம் காட்டி, இருவிழிகளிலும் நீரைப் பொழிய,
- அன்பு மிகுதியாய் மூச்சையான மெய்யன்பருக்கு
- உயிர் காக்கும் மருந்துபோல் வந்து பேரின் மழையைப் பொழிவாய்!.
- உன்மீது அன்பு வைக்காத என்னை, யாருக்காக அடிமையாக ஏற்றுக்கொண்டாய்?
- இழிந்த ஊன், மயிர், தோல், நரம்பு, எலும்பு என இவற்றால் ஆன,
- சிறுகுடிசை போன்ற புலால் உடல், அருவருப்படையது என்பது பொய் அல்லவே!
- இதனை உண்மை என்று நம்பி, என் புத்தி வீணே.
- இதன்பின் செல்லுமோ? சென்று துன்புற்று அலைந்து திரியுமோ?

ஐயனே! இந்த நிலையில்லாத உலக வாழ்வை கனவிலும் வேண்டேன்.

---

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(சுகவாரி 4 -  தா.பா.80.)

என்புஎலாம்நெக்குஉடைய, ரோமம் சிலிர்ப்ப, உடல்

இளக, மனது அழிலின்மெழுகாய்

இடையறாது உருக,  வரு மழைபோல் இரங்கியே

இருவிழிகள் நீர் இறைப்ப,

அன்பினால் மூர்ச்சித்த அன்பருக்கு அங்ஙனே

அமிர்தசஞ் சீவிபோல் வந்து

ஆனந்த மழைபொழிவை.உள்அன்பு இலாதஎனை

யார்க்கா அடிமைகொண்டாய்,

புன்புலால் மயிர்தோல் நரம்புஎன்பு மொய்த்திடு

புலைகைகுடிலில் அருவருப்புப்

பொய்அல்ல வே, இதனை மெய்என்று நம்பிஎன்

புந்திசெலு மோபாழிலே?

துன்பமாம் அலையவோ? உலகநடை யைஒரு

சொப்பனத் தினும்வேண்டிலேன்.

சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரம்

ஜோதியே சுகவாரியே!

இந்தப் பாடலில் நிலையாமை தத்துவத்தை தகுந்த உவமைகள் மூலம் எடுத்துக் கூறி நம்மை எச்சரிக்கிறார் தாயுமானவர்.

---

யாக்கையை யாப்புடைத்தாப் பெற்றவர் தாம்பெற்ற
யாக்கையா லாய பயன்கொள்க; - யாக்கை
மலையாடு மஞ்சுபோல் தோன்றிமற் றாங்கே
நிலையாது நீத்து விடும்.    (யாக்கை நிலையாமை, நாலடியார்)

உடம்பை உறுதியுடையதாக நோயில்லாத நல்ல உடம்பாகப் பெற்றவர்கள் தாம் அங்ஙனம் முன் நல்வினையினால் அரிதின் அடைந்த அந்நல்யாக்கையினால் ஆகக்கூடிய புண்ணியப் பயனைக் காலந்தாழாமற் செய்து கொள்க.

ஏனென்றால்; மலையுச்சியில் உலவுகின்ற மேகம் போலக் காணப்பட்டு பின்பு அங்ஙனம் காணப்பட்டபடியே நிலையாமல் இவ்வுடம்பு அழிந்துவிடும்.

நாம் உடல், மற்றும் மனதிற்கு உட்பட்டவர்கள் அல்ல.........!!!

நாம் எல்லையற்ற ஆனந்த சொரூபி......!!!

என்னை மிக மிக கவர்ந்தும், சோகத்தில் தடுமாறிய போதெல்லாம் நிலை கொள்ள வைத்ததும் இந்த வாசகமே......!!!



"நான் ஆத்மானந்த ஆனந்த சொரூபி.....

என்னை தவிர்த்து பிறிதொன்றும் இல்லை.......

பிறிதொன்றினால் எனக்கு எந்த பாதிப்பும் இல்லை....!!! "

இது எப்போது புரியும் என்றால்..........???

ஆன்மாவில் நிலைத்து,
அதனோடு லயித்து,
தான் ஆனந்த சொரூபியை உணர்ந்தால் மட்டுமே புரியும்.......!!!

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 13. துணையின்றி வாழமுடியாத பெண்மைபோல்,

சாதகன் ஒருவனுக்கு பற்றினை விடவும் ஆசைகளை சீரமைக்கவும் தேவையான அறிவுரைகளை பொருத்தமான உவமை மூலம் சொல்கிறார் தாயுமானவர்.

ஐம்பொறிகளாலும் பற்றப்படும் ஐம்புலன்களாகிய பற்ற அற்று, அவாவின்மை என்று சொல்லப்படும் ஒரு நிலத்தில்,

நிலைத்துநிற்கும் பொருட்டு, அதனைப் பற்றி பிடிப்பதற்கு ஏதுவாக பிராணனை அடக்க, மூச்சுப்பயிற்சி என்னும் ஒரு நிலம் உண்டு.

இவற்றைப் பற்றி நிற்க, மனம் இறந்துபடும்.

இதனை அறிவிக்க,



திரட்டிக் கட்டப்பட்ட அழகிய சடாமுடியுடன் விளங்கும் மௌனகுரு என்னும் (ஒரு வாழைத்தாரில் முதலில் ஒரு கனி தானே கனிந்ததுபோல)

தானே கனிந்த ஒருகனி, ஏனைய காய்களை கனிவிக்க வந்ததுபோல

"தான் கண்ட நெறி இந்நெறியே" என்றுதிருவுள்ளத்தில் இரக்கம் கொண்டு,

கொவ்வை கனி போன்ற சிவந்த உதடுகளுடன் கூடிய தனது வாயினைத் திறந்து,

ஒரு வார்த்தை சொல்லப் பெற்றவனும் அல்லேன்.

சொல்லாததாதல் ஒன்றும் பெறாதவனும் அல்லேன்.

ஆனால்,

---

மிகவும் உடல் இளைத்து, அரற்றித் தவிப்பெய்தி, துணையின்றி வாழமுடியாத பெண்மைபோல்,

இரு கண்களிலும் கண்ணீர் பெருக, நான் பேய் போல் இருக்க,

என்னைச் சுற்றிநின்று, உலகமக்கள் எள்ளி நகையாட, அலையவிட்டாய்

ஆயின், இதுகுறித்து மேற்கொண்டு எடுத்துக்கூற எனக்கு வாய்தான் உண்டோ?

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(சுகவாரி 6 - தா.பா.82.)

பற்றுவன அற்றிடும் நிராசை என்று ஒருபூமி
  பற்றிப் பிடிக்கும்யோகப்
பாங்கில் பிராணலயம் என்னம் ஒரு பூமிஇவை
  பற்றின்மனம் ஆறும் என்னவே

கற்றையஅம் சடைமௌனி தானே கனிந்தகனி
  கனிவிக்க வந்தகனிபோல்
கண்டது இந் நெறி எனத் திருவுளக் கனிவினொடு
  கனிவாய் திறந்தும் ஒன்றைப்

பெற்றவனும் அல்லேன் பெறாதவனும் அல்லேன்
  பெருக்கத் தவித்து உளறியே
பெண் நீர்மை என்னஇரு கண்ணீ ர் இறைத்துநான்
  பேய்போ லிருக்கஉலகம்

சுற்றிநகை செய்யவே உலைய விட் டாய் எனில்
  சொல்லஇனி வாயும் உண்டோ?
சுத்தநீர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
  சோதியே சுகவாரியே.

இந்தப் பாடலில்

---

தாயுமானவர் மூன்று உவமைகளைக் காட்டுகிறார். மனம் இறந்து படுவதற்கு ஐம்பொறிகளாலும் பற்றப்படும் ஐம்புலன்களாகிய பற்றை விடவேண்டும். ஆசையை சீரமைக்க வேண்டும். பிராணனை அடக்க, மூச்சுப் பயிற்சி செய்ய வேண்டும்என்னும்.

ஆனால், என்னை மிகவும் அலைவிட்டாய். மனம் இறந்து படுவதற்கு ஒரு வார்த்தைகூட சொல்லவில்லையே? என்று வருத்தமடைகிறார் தாயுமானவர்.

தான் தவித்ததை இரண்டு உவமை மூலமும் இறையருளின் கருணையை ஒரு உவமை மூலமும் அழகாக படம் பிடித்துக்காட்டுகிறார் தாயுமானவர்.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 14. விண்ணிலிருந்து மழை பொழிவது போல

இறையருள் நம்மைக் கைவிடாமல் இருக்க வேண்டுமா? வழிகாட்டுகிறார் தாயுமானவர்.

"அரிய பொன்னே! மணியே! எனது அன்பே! என் அன்பினில் ஊறும் அறிவே! ஊறும் இன்பப் பெருக்கே!" என்றெல்லாம் பலவாறாகப் புகழ்ந்து பாடினேன். ஆடினேன்.

மிகுதியும் விருப்பம் கொண்டு கூவி அழைத்தேன். நா வரண்டேன்.

கூப்பாடு போட்டேன். உடம்பிலுள்ள உரோமம் சிலிர்ப்ப, இரண்டு கைகளையும் தலைமேல் கூப்பி,



விண்ணிலிருந்து மழை பொழிவது போல

கண்ணிலிருந்து கண்ணீர் மழை பொழிய நின்று, அயர்ச்சி அடைந்தேன்.

இரும்பு பொன்ற வலிய மனம் படைத்த கள்ளத்தனம் உடையவன் ஆனாலும்,

---

இடையில் உன்னை விட்டுப் பிரிந்து சென்றதுண்டோ?

என்றிலிருந்து நீ இருக்கிறாயோ, அன்றிலிருந்து நானும் இருக்கிறேன்.

நான் உன்னுடைய அடிமை அல்லவா?

ஒன்றும் அறியாத வெறும் சிறு துரும்பு போன்றவன் என்றாலும்,

என்னைக் கைவிடுதல் நீதியாகுமோ?

எனவே என்னை உனது அடியார்களோடு கூட்டுவிப்பாயாக!

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(சுகவாரி 7 -  தா.பா.83.)

அரும்பொன்னே மணியே என் அன்பேஎன் அன்பான
  அறிவேஎன் அறிவில் ஊறும்
ஆனந்த வெள்ளமே என்றுஎன்று பாடினேன்,
  ஆடினேன் நாடிநாடி

விரும்பியே கூவினேன்,  உலறினேன்,  அலறினேன்
  மெய்சிலிர்த்து இருகைகூப்பி
விண்மாரி எனஎன் இரு கண்மாரி பெய்யவே
  வேசற்று அயர்ந்தேன் யான்,

இரும்புநேர் நெஞ்சகக் கள்வன் ஆனாலும்உனை
  இடைவிட்டு நின்றது உண்டோ
என்றுநீ அன்றுயான் உன்ன அடிமை அல்லவோ?
  யாதேனும் அறியாவெறும்

துரும்பனேன் என்னினும்  கைவிடுதல் நீதியோ
  தொண்டரொடு கூட்டுகண்டாய்
சுத்தநீர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
  சோதியே சுகவாரியே.

இந்தப் பாடலில் – தான், விண்ணிலிருந்து மழை பொழிவது போல கண்ணிலிருந்து கண்ணீர் மழை பொழிய நின்று, அயர்ச்சி

---

அடைந்ததாகவும், இரும்பு பொன்ற வலிய மனம் படைத்த கள்ளத்தனம் உடையவன் ஆனாலும், இடையில் உன்னை விட்டுப் பிரிந்து சென்றதுண்டோ? எனக் கேட்கிறார்.

இருந்தாலும் சிறு துரும்பு பொன்ற என்னை கைவிடுதல் நியாமா? எனவும் இறைவனைப் பார்த்துக் கேட்கிறார் தாயுமானவர்.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 15. காலூன்றி மழைபொழிதல் போல்

ஆனந்தமாக வாழ்வதற்கே மனிதப் பிறப்பை எடுத்து வந்துள்ளோம். அந்த ஆனந்தமான வாழ்க்கை வாழ வழி வகை செய்கிறார் நம் தாயுமானவர்.

எண்ணிச் சொல்லமுடியாது பல கோடி மேகங்கள் கால் ஊன்றி நின்று, மழையினைப் பொழிவதுபோலக்



காற்று வீசி, மின்னல் மின்னி, மேலான வெளியைக் கவித்து நின்று,

பேரின்ப வெள்ளத்தை இடைவிடாது பொழிவதற்கு அருளால் முழங்கி,

அன்பர்களைக் கூவி அழைக்கும் மழைமேகமே!

தூய, முக்குண வசப்படாத மேலான தெய்வமே!

பேரொளிப் பிழம்பே! இன்பக்கடலே!

---

நிலம் முதலாகச் சொல்லப்பட்ட அண்டங்கள் அனைத்தையும் தன்னுள் அடக்கி நிற்கும் பரவெளியின் உண்மை நிலையைக் காட்டி,

அப்பெருவெளியினைத் தொடர்ந்து பற்றி நிற்கும் மனவெளியையும் காட்டி,



அம்மனமாகிய வெளியில் பிணைந்து நிற்கும் பாவியாகிய அடியேனது தன்மையையும் காட்டி,

மனம் விரிந்து நிற்க ஏதுவாக மனம் இறந்த நிலையினையும் காட்டி,

எல்லாக் காலங்களிலும மனம் ஒருப்பட்டு நிற்கும் உண்மை நிலையைக் காட்டி அருளினை!

இந்நிட்டைக்கும் அப்பால் உள்ள சுகாதீத இன்ப நிலையைத்ததைக் காட்டி அருள

மேலும் பலநாள் செல்லுமோ?

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(சுகவாரி 8 - தா.பா.84.)

பார் ஆதி அண்டங்கள் அத்தனையும் வைக்கின்ற
  பரவெளியி உண்மைகாட்டிப்
பற்றுமன வெளிகாட்டி மனவெளியினில்தோய்ந்த
  பாவியேன் பரிசுகாட்டித்,

தாராள மாய்நிற்க நிர்ச்சந்தை காட்டிச்
  சதாகால நிட்டைஎனவே
சகநிலை காட்டினை சுகாதீத நிலயம்
  தனைக்காட்ட நாள்செல்லுமோ?

கார் ஆர எண்ணரும் அனந்தகோடிகள்நின்று
  காலூன்றி மழைபொழிதல் போல்

---

கால்வீசி மின்னிப் படர்ந்து, பர வெளியெலாம்
கம்மி ஆனந்தவெள்ளம்

சோராது பொழியவே கருணையின் முழங்கியே
தொண்டரைக் கூவுமுகிலே
சுத்தநீர்க் குணமான பரதெய்வ மேபரம்
சோதியே சுகவாரியே.

## இந்தப் பாடலில்

பரவெளியின் நிலை காட்டினாய். மனவெளியையும் காட்டினாய். எனது தன்மையும் காட்டினாய். மனம் விரிந்த நிலையையும் காட்டினாய். மனம் இறந்த நிலையினையும் காட்டினாய். மனம் ஒருமைப்பட்டு இருக்கும் நிலையையும் காட்டினாய்.

அதற்கு அப்பால் உள்ள ஆனந்த நிலையை அடைய, இன்னும் சாதனை செய்ய வேண்டும் என்பதை நமக்குச் சொல்கிறார் தாயுமானவர்.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 16. தீப்பந்தத்தில் பட்ட மெழுக போல்

ஆன்மீக வாழ்க்கையில் சாதகனுக்கு முயற்சியும் பயிற்சியும் தேவை என்பதையும் அப்போதுதான் தேர்ச்சி கிடைக்கும் என்பதை அழகிய உவமை மூலம் தாயுமானவர் விளக்குகிறார்.

தேவரீர் என்மீது இரக்கம் காட்டப் போகும் நாள், எந்த நாள்?" என்று கேள்வி கேட்டு, என்மனம் என்னைத் துளைத்து எடுக்கிறதே!

இதற்கு எவ்வாறு விடை கூறுவேன்? முன்னுக்குப் பின் முரண் இல்லாதபடி இன்றுவரை அடியேன் பெற்றது யாது?



தீப்பந்தத்தில் பட்ட மெழுக போல் உள்ளம் நடுநடுங்கி உருகலாகுமோ?

---

மேலான இன்பமானது, எப்பொழுது வந்து எய்தும்?

பொறுத்துக் கொள்ள முடியாத அளவு துன்பம் அடைந்து பல முறையும் மூர்ச்சை அடைகிறேனே!

என் சந்நிதியில் இருப்பது என்ன?" என்பதை நீ அறிவாய்.

என் அறிவுக்கு அறிவான தெய்வம் உன்னைத் தவிர வேறு உண்டோ?

இந்த உடம்பு நிலையானது அல்லவே?



உடைந்த கப்பல், நல்ல கப்பலாய் அலைவீசும் கடல் நடுவில் செல்லும் தகுதி உடையதோ?

உரிமையோடு என்னை அடிமை கொண்ட நீ,

முன்பின் தெரியாதவர் போல் நடித்து,

என்னைத் துன்பத்தில் மூழ்கச் செய்தல் முறையான செயல் ஆகுமோ?

இந்தப் பாடலில் – சாதகன் ஒருவன் கடுமையான பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை தனது அனுபவத்தின் மூலம் தாயுமானவர் சொல்லுகிறார்.

முயற்சி, பயிற்சி, தேர்ச்சி என்பார்கள். மெழுகுபோல் உருகி இறைவனிடம் சரணாகதி அடைய பயிற்சி செய்ய வேண்டும்.

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(சுகவாரி 11 -  தா.பா.87.)

எந்தநாள் கருணைக்கு உரித்தாகும்  நாள்? எனவும்
  என் இதயம் எனைவாட்டுதே.
ஏது என்று சொல்லுவேன்?  முன்னொடுபின் மலவு அறவும்
  இற்றைவரை யாதுபெற்றேன்?

பந்தமா னதில் இட்ட மெழுகு ஆகி உள்ளம்
  பதைத்துப் பதைத்து உருகவோ

---

பரமசுகம ஆவது பொறுப்பு அரிய துயரமாய்ப்
பலகாலு மூர்ச்சிப்பதோ?

சிந்தையா னது அறிவை என்ன அறிவில் அறிவுஆன
தெய்வம்நீ அன்றி உளதோ?
தேகம்நிலை அல்லவே உடைகப்பல் கப்பலாய்த்
திரை ஆழி ஊடுசெலுமோ?

சொந்தமாய் ஆண்டநீ அறியார்கள் போலவே
துன்பத்தில் ஆழ்த்தல்முறையோ?
சுத்தநீர்க் குணமான பரதெய்வ மேபரம்
சோதியே சுகவாரியே.

உடைந்த கப்பல் அலைவீசும் கடலில் செல்ல வேண்டுமானல், கப்பல் நல்ல தகுதி ஆக இருக்க வேண்டும்.

அதுபோல் சாதகனும் முயற்சி செய்து பயிற்சி செய்து தகுதியடைவனாக தன்னை ஆக்கிக் கொள்ள வேண்டும்.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 17. நீர்க்குமிழிக்குப் பூண் கட்ட முடியாதவாறு போல்

நீர்க்குமிழிக்குப் பூண் கட்ட முடியாதவாறு போல் உடலும் நிலை இல்லாதது என்பது உணர்ந்து. இதன்மீது வைத்த பற்றை அறுக்கும் நாள், எந்த நாள் வரும் என்று எதிர்பார்க்கின்றார் தாயுமானவர்.

### தாயுமானவரின் அந்தப் பாடல்

(யாக்கையைப் பழித்தல் 2 - தா.பா.1117)

நீர்க்குமிழி பூண்அமைத்து நின்றாலும் நில்லாமெய்

பார்க்கும் இடத்து இதன்மேல் பற்றுஅறுவது எந்நாளோ.

---

இந்தப்பாடலில் சாதகன் பற்று அறுப்பது எவ்வாறு அமையவேண்டும் என்பதை அதற்குரிய உவமை வாயிலாக தருகிறார்.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 18. கணவனுக்கு அடங்காத மனைவிபோல

மனம் என்ற நிலத்தில் எதைப் போட்டாலும் விளையும். ஆனால் எதைப் போடவேண்டும் எப்படி போடவேண்டும் என்பதை தாயுமானவர் தனது பாடல்களில் பொருத்தமான உவமைகள் வாயிலாக வாரி வழங்கியிருக்கிறார்.

அலை பாயும் மனதை அடக்க முடியாது? ஆனால் அறிய முடியும் என்கிறார் தாயுமானவர்...... எப்படி?



அழைத்த மாத்திரத்தில் அருகில் வராத பிள்ளையைத் தாயானவள் தொட்டிலில்இட்டு ஆட்டுவதும், ஆட்டி உறங்க முற்படும்போது, உறங்காதிருக்கத் தொடையில் கிள்ளுவதும் போல

மனமாகிய மாயையானது விருப்பத்தோடு கூடிய எண்ணம் ஒன்றை முதலில் உண்டாக்கும். பிறகு அதுவே அந்த எண்ணத்தைக் கைவிட்டு விடும்.

கொடிய துன்பம் என்னும் ஏழு நிலையங்களில் சென்று, தலைசுற்றி ஆடும்.

கணவனுக்கு அடங்காத மனைவிபோல தானே வெளியில் சென்று அலைந்து திரியும்.

கல்லையும் இரும்பையும் விடத் தமக்கு வலிமை இருப்பதாய்க் காட்டிக் கொள்ளும்.

நேரில் காணாது, காதால் கேட்டதை, கண்ணால் கண்டதாகக் கூறும்.

------------------------------------------------------------------------------------------------------------------------------------

உயிரை அதன் வியாபகம் தெரியாபடி அணு அளவாகச் சுருங்கி நிற்கச் செய்யும், வஞ்சனை பொருந்திய மாயவித்தையை இப்படி எல்லா வல்லமையையும் ஒருங்கே பெற்றது இந்த மனமாகிய மாயை.

அறிவிலியாகிய என்னால் இதனை அடக்க முடியுமோ?

இந்தப் பாடலில் இரண்டு உவமைகளைத் தருகிறார் தாயமானவர்.

சாதகன் ஒருவன் மனதை அடக்க கடினமாக பயிற்சி செய்ய வேண்டும் என்பதை தாயுமானவர் வலியுறுத்துகின்றார்.

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(எங்கும் நிறைகின்றபொருள் 4 -தா.பா.92)

சொல்லான தில் சற்றும் வாராத பிள்ளையைத்
தொட்டில்வைத்து ஆட்டிஆட்டித்
தொடையினைக் கிள்ளல்போல் சங்கற்பம் ஒன்றில்
தொடுக்கும் தொடுத்து ஒழிக்கும்.

பொல்லாத வாதனை எனும்சப்த பூமியிடை
போந்துதலை சுற்றி ஆடும்
புருஷனில் அடங்காத பூவைபோல் தானே
புறம்போந்து சஞ்சரிக்கும்.

கல்லோடு இரும்புக்கும் மிகவன்மை காட்டிடும்.
காணாது கேட்ட எல்லாம்
கண்டதாக காட்டியே அணுவாச் சுருக்கிடும்.
கபடந டக ஜாலமோ?

எல்லாமும் வலது இந்த மனமாயை ஏழையாம்
என்னால் அடக்கவசமோ?
இகபரம் இரண்டினிலும் உயிரினுக்கு உயிராகி
எங்குநிறை கின்றபொருளே.

பிள்ளைத் தொட்டிலிலே போட்டுத் தூங்க வைப்பது போலவும் செய்து. அதனுடைய தொடையையும் கிள்ளி அழவைப்பது போலச் –

---

சும்மா எங்கேனும் உட்கார்ந்து கொண்டு இருக்கலாம் என்று உட்கார்ந்தால் –

நம்முடைய எண்ணத்திலும் நம்மை ஈடுபடச் செய்து, ஒரு விருப்பு வெறுப்பிலே நம்மை அழ வைத்துவிட்டுப் –

பிறகு நம்மையே கலக்கி, அதனாலே கவலைப்படச் செய்கின்றதே இந்த மனம்!

கணவனுக்கு அடங்காத ஒரு மனைவி இந்தத் தெரு, அந்தத்த தெரு, இந்த ஊர் எல்லை, அந்ந ஊர் எல்லை, இப்படி எல்லாம் சுற்றித்திரிந்தால் எப்படி இருப்பாளோ அதுபோல்இருக்கின்றதே!


shutterstock.com • 201349568

என்னைவிட்டு எங்கெங்கோ ஓடி, எங்கெங்கோ  அலைகிறதே என்னுடைய மனம்!

இறைவனே! நீ படைத்த பொருள்களுக்குள்ளே கல் வன்மையானது என்று சொல்லவார்கள்.

இரும்பு வன்மையானது என்று சொல்வார்கள்.

ஆனால் என்னைக் கேட்டால் இந்த என்னுடைய மனம்தான் வன்மையானது.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 19. எரியும் நெருப்பில் பட்ட மெழுகுபோல்

இறையருள் பெறுவதற்கு  நமது சரணாகதி  எப்படி அமையவேண்டும் என்பதை அழகான உவமை மூலம் தெளிவாகத் தருகிறார் தாயுமானவர்.

எப்பொழுதும் இந்த உடலிலே,உயிரே உன்னைப்போல நானும் இருக்கவில்லையோ?

மனமாகிய நானும், எனது நட்பாய் இருந்துவரும் பிராணனும் ஆகிய எங்களை "அறிவற்றவை" என்றும், உன்னை "அறிவுடையது" என்றும், அந்த நாளிலேயே எவனோ பிரித்து வைத்து விட்டான்.

அன்று தொடங்கி இன்றுவரை நியாயமற்ற முறையில் எங்களை அடக்கி வைத்துவிட்டு, குறுக்கே புகுந்து வலிய அரசாட்சி செய்து, எந்தக் கோட்டையைப் பிடித்தாய்?" என்று அறிவில்லாத மனம் மிகவும் பழித்து உரைக்க,



கொழுந்துவிட்டு எரியும் நெருப்பில் பட்ட மெழுகுபோல் உள்ளம் கருகுதல் முறைமை ஆகுமோ?

பத்தாயிரம் முறை எடுத்துரைப்பினும் உனது மனம் இரக்கம் காட்டவில்லையே!

இனிப் பேரின்பம் வருவது எவ்வாறு? சொல்வாயாக!

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(சுகவாரி 12 - தா.பா.88.)

எந்நாளும்உடலிலேஉயிராம்உனைப்போல்
இருக்கஇலையோ?மனதுஎனும்
யானும்என்நட்பாம்பிராணனும்எமைச்சடமது
என்றுஉனைச்சித்துஎன்றுமே

அந்நாளில்எவனோபிரித்தான்அதைக்கேட்ட
அன்றுமுதல்இன்றுவரையும்
அநியாயமாய்எமைஅடக்கிக்,குறுக்கே
அடர்ந்தஅரசுபண்ணி,எங்கள்

முன்னாகநீஎன்னகோட்டைகொண்டாய்என்று
மூடமனம்மிகவும்ஏச,

--------------------------------------------------------------------------------

மூண்டுஎரியும்அனலில்இட்டமெழுகாய்உளங்கருகல்
முறைமையோ?பதினாயிரம்

சொன்னாலும்நின்னருள்இரங்கஇலையேஇனிச்
சுகம்வருவதுஎப்படிசொலாய்.
சுத்த நீர்க்குணமானபரதெய்வமேபரம்

சோதியேசுகவாரியே.

இந்தப் பாடலில் – தாயுமானவரின் புலம்பல் நம்மையே கண்கலங்க வைக்கின்றது.

கொழுந்துவிட்டு எரியும் நெருப்பில் பட்ட மெழுகுபோல் உள்ளம் கருகியும் இறைவன் மனம் இரக்கம் காட்டவில்லையே என்று ஆதங்கப்படுகிறார்.

தமக்கு எப்போது பேரின்பம் கிடைக்கும் என்று ஏங்குகிறார்.

தாயுமானவர் தனக்காக ஏங்கவில்லை.

நாம் எப்படி இறையருள் பெற வேண்டும்? எப்படி உள்ளம் உருக வேண்டும் என்பதை அழகான உவமை மூலம் இப்பாட்டில் தெரிவிக்கிறார்.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 20. அனலுடன் ஒன்றி நிற்பது போல

எல்லாரும் இன்புற்று நினைப்பதுவே அல்லாமல் வேறு ஒன்றும் அறியாத தாயுமானவர்....



மனிதன் மாயையால் கட்டுப்பட்டிருப்பதையும் அதனை

---

அவிழ்க்கும் வழிமுறைகளை தெரிந்து கொள்ள வேண்டும் என்று தாயுமானவர் விருப்பபடுகிறார்.

அடையாளம், குணம் ஆகியன இன்றி, அனலாய் உருகி ஒழுகும் இரும்பு, அனலுடன் ஒன்றி நிற்பது போல,

கொடிய ஆணவ மலமாகிய அறையில், அறிவு எதுவும் இன்றி, அறியாமை மயமாய்க் கிடந்த என்னை,

நினது திருவருளினால் வெளியில் எடுத்து, பலமுறையும் உடல், கருவி, உலகம், நுகர்ச்சிப் பொருள்களைத் தந்து, அருள் செய்தபோதே உன் அருமையை நான் அறிந்திருக்க வேண்டும்.

அவ்வாறு அறிந்து, உன்னை விட்டுப் பிரிந்து செல்லாது இருப்பதை விடுத்து. நிறங்களைப் பிரதிபலிக்கும் பளிங்கு போன்ற தன்மை உடைய மாயையால் கவரப்பட்டேன்.

அதனுள் அழுந்திக் கிடந்து, நின்னுடைய அருட்கொடையாக விளங்கும் படைப்பாகிய நல்ல அருளிச்செயலை மறந்து இருந்துவிட்டேன்.

இனிச் சிறியேனாகிய நான், உன்னை வந்தடைந்து இன்பம் பெறுவது எப்பொழுது?

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(சிற்சுகோதய விலாசம் 2 -  தா.பா.123.)

குறிக ளோடுகுணம் ஏது ம் இன்றி, அனல்
  ஒழுக நின்றிடும் இரும்பு, அனல்
கூட ல் இன்றிஅது வாயி இருந்தபடி,
  கொடிய ஆணவ அறைக்குளே

அறிவதும் ஏதும்அற,  அறிவு இலாமைமய
  மாய்  இருக்கும்எனை அருளினால்
அளவி லாததனு கரணம் ஆதியை
  அளித்த போது உனை அறிந்துநான்,

பிறவி இலாதவணம் நின்றி டாதபடி

பலநி றங்கவரும் உபலமாய்ப்
பெரிய மாயையில் அழுந்தி நின்னது
ப்ரசாத நல்அருள் மறந்திடும்

சிறிய னேனும் உனை வந்து அணைந்துசுக
மாய் இருப்பது இனி என்றுகாண்?
தெரிவ தற்குஅரிய பிரமமேஅமல
சிற்சு கோதய விலாசமே!

இந்தப் பாடலில் – மாயையிலிருந்து விடுபட்டு ஞானத்தை நோக்கி செல்வதே ஆன்மீகம் என்று சொல்லப்படுகிறது.

ஆனால் எது மாயை? எது ஞானம்? என்பது முதலில் தெரிந்தால்தானே ஞானத்தை நோக்கி செல்வது சாத்தியமாகும்!

எது மாயை எது ஞானம் என்பதை தாயுமானவர் விளக்குகிறார். இந்தப் பாடலில் மட்டும்மல்ல தாயுமானவர் பாடல்கள் முழுவதிலும் எது மாயை? எது ஞானம்? என்பதை விரிவாக நாம் தெரிந்து கொள்ளலாம்.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 21. ஓடுகின்ற காக்கைபோல்

ஒரு கல்கொண்டு வீச, அதுகண்டு பறந்து ஓடும் பல காக்கை போல பொய்மாயச் சொல்கண்டு ஓடுகின்ற அன்பர்களுடன், கூடி இருப்பது சாதகனின் கடமையாகும்.

### தாயுமானவரின் அந்தப் பாடல்

( அன்பர் நெறி 6 - தா.பா.1249.)

கல்கண்டால் பொய்ம்மாயச் காக்கை போல பொய்மாயச்

---

சொல்கண்டால் ஓடும்அன்பர் தோய்வுஅறிவது எந்நாளோ.

சாதனையில் வெற்றி பெற சத்சங்கத்தில் இருக்க வேண்டும். எப்படிப்பட்ட சத்சங்கம் ....ஔவையார் பதிலாக வருகிறார்.

நல்லாரைக் காண்பதும் நன்றே நலம் மிக்க
நல்லார் சொல் கேட்பதும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதும் நன்றே. - ஔவையார்

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

# 22. பண்ணின் இசைபோல

பண்ணும் அதனோடு ஒத்து இசைக்கும் ஓசையும் போல பரமனிடத்தில் அத்துவிதமாய்க் கலந்து நின்ற திறமை நினைந்து. திருவருள் மயமாய் இருக்கும் நிலையில் பக்தன் இருக்க வேண்டும்.

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(நிற்கும் நிலை 1 - தா.பா.1271.)

பண்ணின் இசைபோலப் பரமன்பால் நின்றதிறன்

எண்ணிஅருள் ஆகி இருக்குநாள் எந்நாளோ?

இந்தப்பாடலில் -- தாயுமானவர் முழு சரணாகதி தத்துவத்தை பக்தனுக்கு புகட்டுகிறார். பண்ணும் இசையும் போல பரமனுடன் சதா காலமும் இணைந்திருக்க வேண்டும் என்பதற்கு இந்த உவமையினை கையாள்கிறார்.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 23. பெய்கின்ற முகில்காள்எம் பெருமான் நும்போல்

-----------------------------------------------------------------------------------------------------------------------------

முறையாக இரவும் பகலும் ஒரு தன்மையாய் மாறி மாறி வர, சூரிய சந்திரர்களை இயக்குபவர் யார்?

அவர் பெருமை குறித்து எவ்வாறு எடுத்துரைப்பது? அடிக்கின்ற காற்றே நீ யாருடைய ஆணையின்படி இயங்குகின்றாய்! என்று கேட்பேன்.

மழையாய் வந்து பொழிகின்ற மேகங்களே! உங்களைப் போல எம்பெருமானும் தாராளமாய் அருளைப் பொழிய வேண்டும் என்று அவருக்கு எடுத்துக் கூறுங்கள்! என்பேன்.

### தாயுமானவரின் அந்தப் பாடல்

(ஆகாரபுவனம் 26 -  தா.பா.157.)

நேரேதான் இரவுபகல் கோடா வண்ணம்
  நித்தம்வர உங்களை இந் நிலைக்கே வைத்தார்
ஆரே? அங்கு அவர் பெருமை என்னே என்பேன்!
  அடிக்கின்ற காற்றேநீ யாரா லேதான்
பேராதே சுழல்கின்றாய் என்பேன் வந்து
  பெய்கின்ற முகில்காள்எம் பெருமான் நும்போல்
தாராள மாக்கருணை பொழியச் செய்யும்
  சாதகம் என் னேகருதிச் சாற்றும் என்பேன்.

-

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 24. வாயில்லாத குடம் போல்

ஆராய்கின்ற அறிவு உடையவராய், உன்னை எப்பொழுதும் விட்டு நீங்காத, இன்பம் பெற்ற மெய்டியார்கள், "ஐயோ!" என்று பதறுமாறு, தீமைஉடைய உயிர்க்கொலையை ஆதரிக்கும் சமயநெறிகளிலும் சிந்தையானது செல்ல, அதுகுறித்தும் மனதைத் தேற்றிக் கொள்வேன்.

---

உயிர் வாழவேண்டி காய், இலை,அற்ப சருகு முதலியவற்றைத் தேடி உண்ணும் பொருட்டு, காடு கடல் மலை முதலியன எங்கே எனக் கவலை கொள்வேன்.

வானத்தில் உலாவரும் சூரிய சந்திரரை முன்னிலையாக வைத்து வாயில்லாத குடம் போல் கிடந்து தலையில் உருளுவேன்.

தாயுமானவரின் அந்தப் பாடல் (ஆகாரபுவனம் 25 - தா.பா.156.)

ஆயும் அறிவு ஆகி உன்னைப் பிரியா வண்ணம்
 அணைந்துசுகம் பெற்ற அன்பர் ஐயோ என்னத்
தீயகொலைச் சமயத்தும் செல்லச் சிந்தை
 தெளிந்திடவும் சமாதானஞ் செய்வேன் வாழ்வான்
காயிலைபுன் சருகுஆதி அருந்தக் கானம்
 கடல்மலைஎங் கேஎனவுங் கவலை ஆவேன்
வாய்இல் கும்பம் போல்கிடந்து புரள்வேன் வானின்
 மதிகதிரை முன்னிலையா வைத்து நேரே.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 25. நோயாளி போல

நிலம் முதல் ஆகாயம் வரை உள்ள அனைத்தும் நீயே என நினைத்து, அதனை பெரிய பனை ஓலையாகிய ஏட்டினில் எழுதிப் பார்த்துப் பார்த்து,

"என் உயிர்த் தலைவனே! வர மாட்டாயோ? என ஏங்குவேன். என்னை வளைத்து வளைத்து நீயே உன்னில் வைத்துக் கொண்டு, முற்றிலும் வேறு ஒன்றினையும் அறியாதபடி செய்துவிட்டாய்.

அதனால் நோயாளி போல மனத்தால் புலம்பி, உள்ளம் நீராய் உருக, கண்களில் நீர் சொரிய, பெருமூச்சு விட்டு, உடம்பை மறந்து, ஒப்பற்ற நிலையில் நிற்பேன்.

தாயுமானவரின் அந்தப் பாடல் (ஆகாரபுவனம் 24 - தா.பா.155.)

---

பார்ஆதி விண் அனைத்தும் நீயாச் சிந்தை
  பரியமட லாஎழுதிப் பார்த்துப் பார்த்து
வாராயோ என்ப்ராண நாதா என்பேன்.
  வளைத்து வளைத்து எனைநீயா வைத்துக் கொண்டு
பூராய மாமேலொன்று அறியா வண்ணம்
  புண்ணாளர் போல்நெஞ்சம் புலம்பி உள்ளே
நீராள மாய் உருகிக் கண்ணீர் சோர
  நெட்டுயிர்த்து மெய்ம்மறந்துஊர் நிலையாய் நிற்பேன்.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 26. **கு**டத்தில் கையை விட்டுத் தேடுவது போல

குறிஞ்சி நிலத்தில் வேடன் யானையை விரட்டுகிறான்.

அது அவன் கண்ணிற்கு மறைந்து விடுகிறது. அதன் பின்னும் தேடுகின்றான்.

ஒரு குடம் அகப்படுகின்றது.

யானை குடத்தினுள் அடங்க இயலாதென உணரவியலாது, அதனை அதனுள் எதிர்பார்த்துக் கையை விடடுத் துழாவுகின்றானாம்.

அது போன்று இருக்கிறது என் அறியாமை.

நான், ஆணவம் மாயை, வினை போன்ற கட்டுக்களால் அறியாமையில் மூழ்கி கிடக்கின்றேன்.

அவ்வறியாமை நீங்கித் தீயில் மறையும் கர்ப்பூரம் போன்றும்,

நீரில் கரைந்த உப்பைப் போன்றும்

இரண்டும் ஒன்றாகும் ஐக்கிய நிலையை விரும்பி நிற்கின்றேன் எனப் பாடுகிறார் தாயுமானவர்.

### தாயுமானவரின் அந்தப் பாடல்

(ஆகாரபுவனம் 29 -  தா.பா.160.)

-----------------------------------------------------------------------------------------------------------------------------

ஒருவன்அவன் யானைகெடக் குடத்துள் செங்கை
  ஒட்டுதல்போல் நான்பேதை உப்போடு அப்பை
மருவவிட்டும், கர்ப்பூரம் அதனில் தீபம்
  வயங்கவிட்டும் ஐக்கியம் உன்னி வருந்தி நிற்பேன்.
அருளுடைய பரம் என்றோ அன்று தானே
  யான் உளன் என் றும், எனக்கே ஆணவாதி
பெருகுவினைக் கட்டு என்றும் என்னாற் கட்டிப்
  பேசியது அன்றே, அருள்நூல் பேசிற்று அன்றே.

இறையுயிர்க் கலப்புக்கு இதே உவமையைப் பல இடங்களில் பயன்படுத்துவது தாயுமானவர் இயல்பாகும்.

இத்தகைய மிக எளிய உவமைகள் பலவற்றால் தம் கருத்துக்களை, நுண் பொருண்மைகளை விளக்கும் தாயுமானவரின் திறம் எண்ணி இன்புறத் தக்கது.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 27. வானத்தில் அடங்கி நிற்கும் காற்று போல

 வானத்தில் அடங்கி நிற்கும் காற்று போல இன்ப மயமாய் இறைவனிடம் அடங்கி இரண்டற கலக்க வேண்டும்.

### தாயுமானவரின் அந்தப் பாடல்

(நிற்கும் நிலை 5 -  தா.பா.1275.)

வானூடு அடங்கும் வளிபோல இன்புஉருஆம்

கோனூடு அடங்கும் குறிப்புஅறிவது எந்நாளோ.

இறையுயிர்க் கலப்புக்கு இது போன்ற  உவமையைப் பல இடங்களில் பயன்படுத்துவது தாயுமானவர் இயல்பாகும்.

இத்தகைய மிக எளிய உவமைகள் பலவற்றால் தம் கருத்துக்களை, நுண் பொருண்மைகளை விளக்கும் தாயுமானவரின் திறம் எண்ணி இன்புறத் தக்கது.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 28. தண்ணீரில் கலந்த உப்புபோல

சொல்லுதற்கரிய கண்ணளி உடைய பேரின்பப் பேரறிவு உடைய சிவபெருமானின், எங்கும் நீக்கமற நிறைந்து நிற்கும் முழுமையில், தண்ணீரில் கலந்த உப்புபோல சேர்ந்து கரைந்திருக்க வேண்டும்.

### தாயுமானவரின் அந்தப் பாடல்

(நிற்கும் நிலை 6 -  தா.பா.1276.)

செப்பரிய தண்கருணைச் சித்சுகனார் பூரணத்தில்

அப்பினிடை உப்பாய் அணையுநாள் எந்நாளோ.

இந்தப்பாடலில்

தண்ணீரும் உப்பும் கலந்திருப்பது போல் சாதகன் தவம் செய்ய வேண்டும்.

எப்படி? இறைநிலையோ ஒன்றியிருக்க வேண்டும் என்கிறார்.

ஒன்றி ஒன்றி நின்று அறிவைப் பழக்க
உறுதி, நுட்பம், சக்தி இவை யதிகமாகும்
அன்று அன்று அடையும் அனுபவங்கள் எல்லாம்
அறிவினிலே நிலைத்து விடும், ஆழ்ந்து ஆய்ந்து
நன்று என்று கண்டபடி செயல்கள் ஆற்றும்
நற்பண்பு புலன்களுக்கு அமைந்து போகும்
என்றென்றும் கருவிடத்தே அறிவை ஒன்றும்
இயற்கைமுறை சிறப்புடைத்து இதே தவமாம். - அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 29. இரும்பு உருகித் தீயாக விளங்குவது போல

---

தூய அறிவு ஆன இன்ப வடிவ ஒளியில், தீயில் பட்டு உருகும் இரும்பு உருகித் தீயாக விளங்குவது போல இறைநிலையுடன் ஒன்றியிருக்க வேண்டும்.

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(நிற்கும் நிலை 7 - தா.பா.1278.)

தூய அறிவுஆன சுகரூப ஜோதிதன்பால்

தீயில் இரும்புஎன்னத் திகழுநாள் எந்நாளோ.

இறைநிலையுடன் எப்படி உருகி தீயாக இருக்க வேண்டும். விடையாக வருகிறார் நரேந்திரன் என்ற விவேகானந்தர்.

ஒரு நாள் மாலை நேரம் தியானத்தில் நரேந்திரர் ஆழ்ந்திருந்தார். அப்போது தமக்குப் பின்னால் ஓர் ஒளி தோன்றுவதை அவர் உணர்ந்தார்.

தியானம் கலையவில்லை. ஒளியின் வீச்சு கூடிக்கொண்டே சென்றது. பின்பு ஒளிவெள்ளம் சிதறியது.

அதற்குப் பிறகு நரேந்திரர் தியானத்திலேயே சமாதி நிலையை எய்தினார். பிரம்மத்துடன் ஒன்றிய நிலை. "கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்" என்ற நிலை.

பின்பு சற்று நினைவு திரும்பியது. ஆனால் உடமபு இல்லாதது போல உணர்வு. நரேந்திரர் தம்மருகே தியானம் செய்து கொண்டிருந்த கோபாலனை அழைத்தார். "என் உடம்பு எங்கே இருக்கிறது?" என்று நரேந்திரர் கேட்டார்.

"நரேன், உன் உடம்பு இங்கே தானே இருக்கிறது" என்றான் கோபாலன். நரேந்திரரின் உடல் குளிரில் விறைந்திருப்பது போலத் தோன்றமளித்ததைக் கண்டு கோபாலன் பதறினான்.



நரேந்திரர் அசையாமல் அமர்ந்திருந்த விதமும் அவனது கேள்வியும் கோபாலனுக்கு பயத்தைத்

---

தோற்றுவித்தன. உடனே குருதேவைத் தேடி விரைந்தான்.

எதற்காக பயப்படுகிறாய் என்பது போல குருதேவரின் பார்வை கோபாலன் மீது படிந்தது.

"நரேந்திரரின் நிலையைப் பார்த்தால் பயமாக இருக்கிறது. அவனைக் காப்பாற்றுங்கள் குருதேவரே" என்று அவருடைய கால்களில் பணிந்தான்.

"ஏன் கவலைப்படுகிறாய் கோபாலா, பிரம்மத்தோடு ஐக்கியமாக வேண்டும். அந்த அனுபவத்தை அடைய வேண்டும் என்று என்னை ஓயாமல் வேண்டிக் கொண்டிருந்தான். இருக்கட்டும். சிறிதுநேரம் அப்படியே இருக்கட்டும்" என்றார் குருதேவர்.

ஒருசில மணி நேரங்களுக்குப் பின்பே நரேந்திரர் புற உலகை உணர்வைப் பெற்றார். எல்லோரும் கவலையுடன் அவரைச் சூழந்திருப்பதைக் கண்டார்.

"சத்தியமான பொருள் என்றால் அது அத்வைத வேதாந்தமே" என்று கூறிய நரேந்திரரர் குருதேவரை வணங்கினார்.

"குழந்தாய், தேவி உனக்கு செல்வமனைத்தையும் வழங்கி விட்டாள்" என்று குதூகலத்துடன் கூறி, நரேந்திரருக்கு ஆசி அருளினார் குருதேவர்.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 30. மலரும் மணமும் போலவும்

வெட்டவெளியாகிய தெய்வம் முடிவில்லாத பேரின்பமயமாய் விளங்கும் தன்மையையும் அது எவ்வாறு உடல் உலகம் இவற்றில் கலந்துள்ளது என்பதை உவமையாகத் தருகிறார் தாயுமானவர். வாருங்கள் பாடலின் உள்ளே செல்வோம்.

பல வடிவங்களாகக் காணப்படும் இந்த உலகம், அப்படியே ஒருசொல்லால் (சும்மா இரு) இன்ப வடிவாய்த் தோன்றியது.

எல்லையற்ற யோகத்தால் இன்ப அனுபவம் பெற்ற அன்பரது உயிருக்கு உள்ள துணையே!

## என்னளவில் இனிய நட்பே!



அழகிய கிண்கிணியும் அதன் இசையும் போலவும், மலரும் மணமும் போலவும்

உடல் உலகம் ஆகிய இவற்றில் கலந்து, முடிவில்லாத பேரின்பமயமாய் விளங்கும் தெய்வக்குன்றே!

இந்தப் பாடலில் – வெட்டவெளி என்ற தெய்வம் அழகிய கிண்கிணியும் அதன் இசையும் போலவும், மலரும் மணமும் போலவும், உடல் உலகம் ஆகிய இவற்றில் கலந்து உள்ளது என்பதை அழகான உவமை மூலம் விளக்குகிறார்.

## தாயுமானவரின் அந்தப் பாடல்

ஆகாரபுவனம் - 1 தா.பா.132)
ஆகார புவனம் இன்பா காரம் ஆக
அங்ஙனேஒருமொழியால் அகண்டா கார
யோகானு பூதிபெற்ற அன்பர் ஆவிக்கு
உறுதுணையே என் அளவும் உகந்த நட்பே
வாகு ஆரும் படிக்கு இசைகிண் கிணிவாய் என்ன
மலர்ந்தமல ரிடைவாசம் வயங்கும் மாபோல்
தேகாதி உலகம் எங்கும் கலந்து தானே
திகழ் அனந்தா னந்தமயத் தெய்வக் குன்றே

# தாயுமானவரின் உவமைகள் 100

-----------------------------------------------------------------------------------------------------------------------

**மன்னார்குடி பானுகுமார்**

# 31.கல்லின்முன் எதிர்நிற்குமோ?

விதியை மதியால் வெல்லாம் என்பார்களே? ஆம்! நமது விதி என்ற வினைகளை -பாவப்பதிவுகளை மதியால் வெல்ல வழிகாட்டுகிறார் தாயுமானவர். வாருங்கள்.



ஒரு கோடி காகம் ஓர் இடத்தில் கூடி இருந்தாலும், ஒரு கல் கொண்டு வீச,அங்கு ஒரு காகமேனும் எஞ்சி நிற்குமோ? அதுபோல

முன்செய்த ஒரு கோடி வினைகள் திரண்டு நின்றாலும், நினது அருள் வெள்ளத்தின் முன் எதிர்நிற்கும் வல்லமை உடையனவோ அவை?

நினது திருவருளைப் பெற வேண்டும் என்னும் தாகம் கொண்டவர்க்கு, அவ்வினைகளால் வரும் துன்பமும் உண்டோ?

எந்த ஆதரவுமின்றித் தணிந்து நிற்கும் எனக்கு நின் அருளைப் பெறவேண்டும் என்னும் தாகம் ஒரு சிறிதும் இல்லை. இது வெளிப்படை.

முன்செய்த வினைகள் அனைத்தும் ஒரு கட்டுப்பாட்டுடன் ஒன்றுகூடி என் உடம்பை மிகவும் வாட்டி வதைக்கிறதே!

மேலும் மேலும் துன்பங்கள் வந்து அணுகாது இருக்க உதவும் யோக நெறியும் கைகூடவில்லையே!

ஞானியர்கள் கூடும் இயல்பான நிட்டைக்கும் எனக்கும் உள்ள இடைவெளி மிகவும் பெரியது.

நான் உன்னோடு இரண்டறக் கலந்து நிற்கும நாள், எந்த நாளோ? இந்நாளில் அது முற்றுப் பெறாதோ?

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(எங்கும் நிறைகின்றபொருள் 6 -தா.பா.94)

---

காகம்ஆ னதுபோடி கூடிநின் றாலும்ஒரு

கல்லின்முன் எதிர்நிற்குமோ?

கர்மம்ஆ னதுகோடி முன்னேசெய் தாலும் நின்

கருணைப்ர வாகஅருளைத்

தாகமாய் நாடினரை வாதிக்க வல்லதோ?
தமியனேற்கு அருள்தாகமோ?
சற்றும் இலை என்பதுவும் வெளியாச்சு. வினையெலாம்
சங்கேத மாய்க்கூடியே

தேகம் ஆனதை மிகவும் வாட்டுதே துன்பங்கள்
சேராமல் யோகமார்க்க
சித்தியோ வரவில்லைஈ, சகசநிஷ் டைக்கும்என்
சிந்தைக்கும் வெகுதூரம்நான்

ஏகமாய் நின்னோ டிருக்கும் நாள் எந்தநாள்
இந்நாளில் முற்று உறாதோ?
இகபர மிரண்டினிலும் உயிரினுக்கு உயிர்ஆகி
எங்குநிறை கின்றபொருளே.



இந்தப் பாடலில் – நமது வினைகள் பற்றிப் பேசுகின்றார். இதுவரையில் பல பிறவித் தொடராகச் சேர்க்கபட்டனவும், இப்பிறவியிலும்அதிகரிக்கப்பட்டனவும் ஆகிய வினைப் பதிவுகள் அனைத்தும் உடலில் நோயாகவும், மனதில் கவலையாகவும் உள்ளன.

இறைவனின் திருவருளைப் பெற வேண்டும் என்னும் தாகம் கொண்டவர்க்கு, அவ்வினைகளால் துன்பம் வராது என்கிறார்.

எப்படி என்றால் ஒரு கோடி காகம் ஓர் இடத்தில் கூடி இருந்தாலும், ஒரு கல் கொண்டு வீச,அங்கு ஒரு காகமேனும் எஞ்சி நிற்காது அதுபோல முன்செய்த ஒரு கோடி வினைகள் திரண்டு நின்றாலும், நினது அருள் வெள்ளத்தின் முன் எதிர்நிற்கும் வல்லமை உடையனவோ அவை?

எப்போதும் விழிப்போடும் சிந்தனையோடும்ஆற்றும் செயல்களினால் முன்வினையின் தீமைகள் தடுக்கப்படும்.

கால கட்டத்தில் உடல் வளர்ச்சி அடைந்து அதன் பின் சிறிது காலம் கழித்து தளர்ச்சி அடைகிறது........!!!

ஆனால் வினைப்பதிவு மட்டும வளர்ந்து கொண்டே இருக்கிறது.....!!!

இதற்கு என்ன தான் வழி...???

- தவத்தோடு, தற்சோதனையும் தொடர்ந்தால் எண்ணக்கூடிய எண்ணத்தில் விழிப்புணர்வு வந்துவிடும்.
- அதனால் தீய செயல்கள் விளையாது.
- அதனால் புதிய பதிவுகள் ஏற்படாது.
- எண்ணங்கள் தூய்மை அடைய அடைய நற்செயல்கள், தான தர்மங்கள் செய்யக்கூடிய சந்தர்ப்பம் கிட்டும்.
- அந்த சந்தர்ப்பத்தை முறையாக செயல்படுத்தினால் வினைப்பதிவு அழியாது, ஆனால், அதனுடைய தன்மை குறையும்.

ஆக, தவம் தற்சோதனைக்கு வழிகாட்டும். தற்சோதனை நல் வாழ்விற்கு வழிகாட்டும்.

வினை குறைக்கும் பணியில் : தாயுமானவரின் உவமைகள்

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 32. ஒளிகண்டு ஒளிக்கின்ற இருள் போல

உவமை என்னும் தவலரும் கூத்தி....பல்வகைக் கோலம் பாங்குறப் புனைந்து நீப்பறுமகிழ்ச்சி பூப்ப நடிக்குமே” என்பதற்கிணங்க

---

"தாயுமானவரின் உவமைகள்" என்று தலைப்பிட்டிருந்தாலும் உருவகமும் இத்தொகுப்பில் தொகுக்கப்பட்டுள்ளது.

பேரறிவு உடைய உன்னுடைய நிலையும், சிற்றறிவு உடைய என்னுடைய நிலையும், ஒரே நிலை உடையதுதான் எனப் பிதற்றித் திரியும் ஒரு துன்பத்துக்கு ஆளாகி,



ஒளியைக் கண்டு ஒளிந்துகொள்ளும் இருளைப் போன்ற தன்நிலையைக்

காட்டாது ஒடுங்கி நிற்க,

இருவியையாகிய அலைவீசும் இன்பதுன்பமாகிய கடல் தடுமாற்றம் அடைய,

முற்றிலும் சூனியமாய் முடியும் மாயையானது தடித்து, பல உலகங்களாகத் தோன்றித் தன்னை வேறுபடுத்திக் காட்டி, அதன்பின்னர் சுட்டிக் கூறமுடியாதபடி அழிவு எய்த.

பிரிப்பில்லாத எங்கும் நிறை முழுவடிவாய்த் தோன்றும் திருவடி உணர்வு (மூதறிவு) மேலோங்க, முன்பின், கீழ் மேல்நடு ஆகிய பக்க வேறுபாடுகள் இன்றி, முழுவதும் பேரின்ப மயமாய் நிறைந்துள்ள நிறைவே!

இந்நிலைமை என் நிலைமையாய் நிற்குமாறு, அருள்பாலித்த நினது திருவருளானது என்றும் வாழ்க, வாழ்க!

## இந்தப் பாடலில் –

ஒளியைக் கண்டு ஒளிந்துகொள்ளும் இருளைப் போல

தன்னுடைய வினைகளை எல்லாம் களைந்து அருள்பாலித்து உன்னோடு இணைத்துக் கொண்டாய் என்று பெருமையுடன் தாயுமானவர் சொல்கிறார்.

சாதகனும் தன்னுடைய வினைகளை களைந்து இறைநிலையுடன் கலக்கலாம் என்பதை தெளிவுபடுத்துகிறார்.

---

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(எங்கும் நிறைகின்றபொருள்11 -தா.பா.99.)

உன்நிலையும் என்நிலையும் ஒருநிலை எனக்கிடந்து
உளறிடும் அவஸ்தைஆகி
உருவுதான் காட்டாத ஆணவமும் ஒளிகண்டு
ஒளிக்கின்ற இருள்என்னவே

தன்நிலைமை காட்டாது ஒருங்கஇரு வினையினால்
தாவுசுக துக்கவேலை
தட்டழிய முற்றும் இல்லாமாயை அதனால்
தடித்த, அகில பேதம் ஆன

முன்னிலை ஒழிந்திட அகண்டிதா காரமாய்
மூதறிவு மேல் உதிப்ப
முன்பினொடு கீழ்மேல் நடுப்பக்கம் என்னாமல்
முற்றும் ஆனந்தநிறைவே.

என்னிலைமை யாய்நிற்க இயல்புகூர் அருள்வடிவம்
எந்நாளும் வாழிவாழி
இகபர மிரண்டினிலும் உயிரினுக்கு உயிராகி
எங்குநிறை கின்றபொருளே.

---

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 33. அளக்கும் கருவியில் முகப்பது போல

மேற்கு, கிழக்கு முதலிய திசைகளை உழக்கு என்னும் அளக்கும் கருவியில் முகப்பது போல,

---

- ஐந்த பூதங்கள் ஒன்று கூட,
- அவற்றைக்கொண்டு கட்டப்பட்ட சிறிய இல்லத்தை,
- சன்னல்கள் ஒன்பதுடன் விளங்கும் நடமாடும் வீட்டை,
- துர் நாற்றம் வீசுகின்ற வெள்ளை நரம்பு வடக்கயிறாக எலும்பு, தசை முதலியன கொண்டு,
- மன்மதன் திருவிழா நடத்தச் செய்து அமைத்த சிறிய தேரினை,
- கோழை ஆகிய வெண்ணீரும், இரத்தமாகிய செந்நீரும், கண்களில் வடியும் கண்ணீரும்,
- கழிவாக வெளியேறும் சிறுநீரும், சீழ் எனப்படும் பண்ணீரும்
- ஆகிய இவற்றை இறைக்கும் இறைச்சியால் ஆகிய தோல் பையை,
- கரு என்னும் மருந்து உற்பத்தி செய்யும் கூட்டை,



- வெட்ட வெட்ட துளிக்கின்ற ஆசையாகிய மரம் வளரும் சுடுகாட்டை,
- மெய்போல இருந்து முடிவில் பொய்யாகும் உடம்பை,

நிலை இல்லாதது என்று உணர்ந்து. சிவஞானம் பெற்று இருப்பது என்றைக்கோ?

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(சச்சிதானந்தசிவம் 2 -தா.பா.101.)

குடக்கொடு குணக்காதி திக்கினை உழக்கூடு
  கொள்ளல்போல் ஐந்துபூதங்
கூடம் சுருங்கு இலைச் சாலேகம் ஒன்பது
  குலாவுநடை மனையை, நாறும்

வடக்கயிறு வெண்நரம் பா, என்பு தசையினால்
  மதிவேள் விழாநடத்த
வைக்கின்ற கைத்தேரை வெண்ணீர் செந்நீர் கணீர்
  மலநீர்புண் நீர் இறைக்கும்

விடக்குத் துருத்தியைக், கருமருந்துக் கூட்டை,
  வெட்டவெட் டத் தளிர்க்கும்
வேட்கைமரம் உறுகின்ற சுடுகாட்டை முடிவிலே
  மெய்போல் இருந்துபொய்யாம்

சடக்கைச், சடக்கெனச், சதம் என்று சின்மயம்
  தானாகி நிற்பது என்றோ?
சர்வபரி பூரண அகண்டதத் துவம் ஆன
  சச்சிதானந்தசிவமே.

- இந்தப் பாடலில் - யாக்கை நிலையாமைப் பற்றி நன்கு விளக்கியுள்ளார். உடலை விட்டு உயிர் பிரியும் போது உயிருக்கு உயிராக இருந்தவர்கள் உடன் செல்லமாட்டார்கள் என்ற நிலையை,

மனித வாழ்வு எவ்வளவு நிலையற்றது, அந்த நிலையற்ற வாழ்வை முழுவதும் உணர்ந்து கொள்ளாமல் ஒருவன் வாழும் குறுகிய காலத்தில் எவ்வளவு பாவச் செயல்களைப் புரிகிறான்? எவ்வளவு உணர்ச்சிக் கொந்தளிப்பில் தகாத செயல்களைப் புரிகிறான்?



ஆடிய ஆட்டம் என்ன?

பேசிய வார்த்தை என்ன?
தேடிய செல்வம் என்ன?

திரண்டதோர் சுற்றம் என்ன?
கூடுவிட்டு ஆவி போனால்

கூடவே வருவது என்ன?

கண்ணதாசன் எவ்வளவு அழகாக் கேட்கிறார் பாருங்கள்...



சிவவாக்கியார் தரும் உடல் நிலையையாமைப் பாட்டையும் பாருங்கள்.

மண்கலம் வீழ்ந்த போது வைத்து வைத்து அடுக்குவார்
வெண்கலம் கவிழ்ந்த போது வேணும் என்று வேணுவார்

-----------------------------------------------------------------------------------------------------------------------------

நன்கலம் கவிழ்ந்த போது நாறும் என்று போடுவார்
எண்கலந்து நின்ற மாயமய் என்ன மாயம் ஈசனே!

மண்பானை கவிழ்ந்து உடைந்து போனால் அது தேவைப்படும் என எடுத்து அடுக்கி வைப்பார்கள்.

வெண்கலப் பானை வீழ்ந்து நசுங்கிப் போனால் அது வேணும் என்று பாதுகாப்பார்கள்.

ஆனால் நமது உடம்பை விட்டு உயிர் போய் கிடக்கும் போது அதனைப் பிணம் என்று இகழ்ந்து அது கிடந்தால் நாறும் எனக் கூறி குழிவெட்டி அதனில் போட்டு மூடிவிடுவார்கள்.

இப்படி ஒரு காசுக்கும் கூட உதவாத என் எண்சாண் உடம்பில் நீ நின்று ஆடிய மாயம்தான் என்ன மாயையோ ஈசனே!

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 34. தாய் இலாப் பிள்ளைபோல்

"நிலம் முதல் ஆகாயம் ஈறாகச் சொல்லப்பட்ட ஐம்பெரும் பூதங்களும் உண்டோ?" என்று எண்ணும்படியாக அறிவுப் பெருவெளியாகவும்,

அக்கினி, சூரியன், சந்திரன் ஆகிய மூவரும் காணாத சுயசோதியாகவும், அண்டங்களிலும் பேரண்டங்களிலும் உள்ள உயிர்கள் அனைத்துக்கும் நேரிய அறிவாகவும்,

வரையறுக்கப்படாததாகவும், ஒரே கடவுளாகவும், நிலைத்து நிற்பதாகவும், இரண்டற்றதாகவும், முக்குணங்களுக்கு அப்பாலுள்ள பெருநிலையைமாகவும், வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாத மலமற்ற பேரின்மயமாகவும்,

நீ அசையாது நிலைத்து நிற்கிறாய். ஆனால், பேய் போன்ற என் மனத்தோடு நெருங்கி இருந்து, (தாய் இலாப் பிள்ளைபோல் ஒரு துணையின்றி பித்தாகவோ?

---

என் மனதோடு சேராதபடி, அறிவில் ஒருமை உணர்வு தோன்ற, அதன் அங்கமாய், தடையில்லாத நிட்டைகூட அருள் புரிவாயாக! அன் அங்கமாய், தடையில்லாத நிட்டைகூட அருள்புரிவாயாக!

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(சச்சிதானந்தசிவம் 1 -தா.பா.100.)

பார்ஆதி ககனப் பரப்பும் உண் டோ என்று
படர்வெளியது ஆகி எழுநாப்
பரிதிமதி காணாச் சுயம் சோதி யாய்அண்ட
பகிரண்ட உயிர் எவைக்கும்

நேராக அறிவாய் அகண்டமாய் ஏகமாய்
நித்தமாய் நிர்த்தொந்தமாய்
நிர்க்குண விலாசமாய் வாக்குமனம் அணுகாத
நிர்மலா னந்தமயமாய்ப்

பேராது நிற்றிநீ சும்மா இருந்துதான்
பேரின்பம் எய்திடாமல்
பேய்மனதை அண்டியே தாயிலாப் பிள்ளைபோல்
பித்தாக வோ? மனதை நான்

சாராதபடி அறிவில் நிருவிகற் பாங்கமாம்
சாசுவத நிஷ்டைஅருளாய்
சர்வபரி பூரண அகண்டதத் துவம் ஆன
சச்சிதா னந்தசிவமே.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 35. உள்ளங்கை நெல்லிக்கனிபோல

உள்ளங்கை நெல்லிக்கனிபோல வேதம், ஆகமம் ஆகிய நூல்கள் மூலம் தெரிந்துகொள்ள வேண்டிய உறுதிப் பொருள்கள் நான்கு உண்டு.

---

அவை. அறம், பொருள், இன்பம், வீடு என்பன . இந்நான்கனுள்ளும் மேன்மையுடையது முத்தி எனப்படும் வீடேயாகும்.

அதுகுறித்து எண்ணிப் பார்க்கும்போது அனுமான அளவை முதலான உத்தி பலவற்றுள்ளும் நிருவிகற்பம் என்னும் பகுப்பின்மை இல்லை.

ஆகையால், ஒன்றொடு ஒன்று ஆக இரண்டு என்னும் நிலை அங்கு இல்லை.

நீ வேறாகவும் தான் வேறாகவும் இல்லை என்பதும் ஒரு தந்திரமே. நீ உண்டு நானும் சித்தத்தளவில் உளன்.

எனவே நான் இல்லை என்று சொல்லும் சொல்லின் உண்மயை நீ அறிவாய்!

இதனை அறியாதவர்கள், என்றேனும் அறிந்து கொள்ள வாய்ப்புள்ளதோ?



வீட்டுநெறி ஒப்புவமை கூற முடியாதது ஆயிற்றே! அறிவின் அடையாளமாக சின்முத்திரை காட்டி ஆட்கொள்ளும் மரபில்,

ஓசையின்றி என்னை ஆட்கொண்ட மௌனகுருவின் கையினால்

ஆதரவின்றித் தனித்திருந்த எனக்கு உதவிசெய்த முதற்பொருளை அல்லவா நீ!

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(சச்சிதானந்தசிவம் 7 -தா.பா.106.)

கைத்தலம் விளங்கும்ஒரு நெல்லிஅம் கனிஎனக்

கண்டவே தஆகமத்தின்

காட்சிபுரு ஷார்த்தம். அதில் மாட்பெறும் முக்தி.அத

கருதின்அனு மானம்ஆதி

---

உக்திபல வாம். நிர் விகற்பம் மேல் இல்லையால்
ஒன்றோடு இரண்டு என்னவோ
உரையும் இலை, நீயும்இலை, நானும்இலை என்பதும்
உபாயம். நீ உண்டு நானும்

சித்தம்உளன் நான்இல்லை எனும்வசனம் நீஅறிவை
தெரியார்கள் தெரியவசமோ?
செப்புகே வலநீதி ஒப்புவமை அல்லவே
சின்முத்தி ராங்கமரபில்

சத்தம்அற எனைஆண்ட குருமௌனி கையினால்
தமியனேற் குதவுபொருளே.
சர்வபரி பூரண அகண்டதத் துவம் ஆன
சச்சிதா னந்தசிவமே.

இந்தப் பாடலில் – முழு முதற்பொருள் இறைநிலையே என்பதை பல பாடல்களில் விளக்குவதைப் போல இந்தப் பாடலிலும் விளக்குகிறார்.

அறிவின் அடையாளம் சின்முத்திரை என்பதை பதிவு செய்கிறார். சின்முத்திரை காட்டி ஆதரவின்றி தவித்துக் கொண்டிருந்த தன்னை ஆட்கொண்டதை எண்ணி மகிழ்கிறார்.

உள்ளங்கை நெல்லிக்கனிபோல வேதம், ஆகமம் ஆகிய நூல்கள் மூலம் தெரிந்துகொள்ள வேண்டிய உறுதிப் போருள்கள் நான்கு உண்டு.

அவை. அறம், பொருள், இன்பம், வீடு என்பன .  இந்நான்கனுள்ளும் மேன்மையுடையது முத்தி எனப்படும் வீடேயாகும் என்பதை அழகான உவமை மூலம் நமக்கு விளக்குகிறார்.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

------------------------------------------------------------------------------------------------------------------------------------

## 36. ஆடாமல் ஓய்ந்திட்ட பம்பரம் போல்

(சுழன்று) பின்னர் சுழல்வதை நிறுத்திக் கொண்ட பம்பரம் போல


ஆற்றலானது அடங்கி மனம் சோர, நேரே அறியாமை எனப்படும் இருளானது விலக,

இருளும் ஒளியும் (இரவும் பகலும்) இல்லாத அறிவுப் பெருவெளி போல பிழையற என்னைத் திருவருளால் கண்டு,

என்னுள் நிறைந்து நீங்காது நிற்கும் அமைதிப் பெருவெளி போல பிழையற என்னைத்திருவருளால் கண்டு,

என்னுள் நிறைந்து நீங்காது நிற்கும் அமைதிப் பெருவெளியினைச் சார்ந்து, மேலான இன்பம் கைகூடப் பெற்றேனோ?

அல்லது சரியை, கிரியை முதலிய நெறிகளில் முயன்று, முன்னேறினேனோ?




இவை எவற்றையும் நான் செய்யவில்லை, அல்லது இவற்றுக்கு மாற்றாக, இடகலை, பிங்கலை எனப்படும் இரு மூக்குத் துளையின் வழி வெளியேறும் பிராணனை கட்டுபபடுத்தி, ஆறு ஆதாதரங்களில் நிறுத்தி, யோகநெறியில் மேலாய் விளங்கும் சாதனை செய்தேனோ? அதுவும் இல்லை.

இவற்றை எல்லாம் விட்ட நான், ஒரு வறிய குடும்பஸ்தன் ஆகி, செல்வத்தைத் தேடிச் சேர்ப்பதை விட்டு, செலவு மட்டும் செய்யும் புத்தி உடையவனாய் இருக்கிறேன். இந்த அறிவு எதனால் வந்தோ?

(சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும நான்கு நெறியிலும் புதிதாக ஏதம் செய்யாமலும், பழைய புண்ணியத்தை எடுத்து செலவு செய்பவனாயும் இருந்துவிட்டதாக வருந்துகிறார்.)

### தாயுமானவரின் அந்தப் பாடல் (தேஜோ மயானந்தம் 4 -தா.பா.114.)

---

ஆடாமல் ஓய்ந்திட்ட பம்பரம் போல்விசை
அடங்கி மனம்வீழ, நேரே
அறியாமை ஆகின்ற இருள் அகல இருள் ஒளியும்
அல்லாது இருந்தவெளிபோல்

கோடாது எனைக்கண்டு எனக்குள்நிறை சாந்தவெளி
கூடிஇன் பாதீதமும்
கூடினே னோ சரியை கிரியையில் முயன்றுநெறி
கூடினே னோஅல்லன்யான்

ஈடாக வே ஆறு வீட்டினில் நிரம்பியே
இலகிவளர் பிராணன் என்னும்
இருநிதி யினைக்கட்டி யோகபரன் ஆகாமல்
ஏழைக் குடும்பன் ஆகித்

தேடாது அழிக் ஒரு மதிவந்தது என்கோலோ
தேடரிய சத்து ஆகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவுஆன தெய்வமே
தேசோ மயானந்தமே.

## இந்தப் பாடலில்

சுழல்வதை நிறுத்திக் கொண்ட பம்பரம் போல என்ற உவமையைக் கையாளுகிறார். சுழல்வதை நிறுத்திக் கொண்ட பம்பரம் போல தான் இருந்து விட்டதை எண்ணி வருந்துகிறார்.

ஆனால் இந்த பாடலில் சாதகனுக்கு ஒரு செய்தியை விதைத்துள்ளார் தாயுமானவர். அது என்ன செய்தி.

1. மனதில் அறியாமை என்ற இருள் அகல வேண்டும்.
2. மனம் பிழையற இருக்க வேண்டும்
3. சரியை கிரியை முதலிய நெறிகளில் பயிற்சி எடுக்க வேண்டும்.
4. பிராணாயாமம் பழகுதல் வேண்டும்.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 37. கூட்டத்தை விட்டுப் பிரிந்த மான்போல

சகுண பிரம்மத்தினை வர்ணணை செய்து கொண்டே நம்மை வழிநடத்துகிறார் தாயுமானவர்.

அதற்காக பல அழகான உவமைகளையும் உருவகங்களையும் எடுத்தாள்கிறார்.

பல்வேறு நிலைகளைப் பெற்று வாழும் உயிர்கள் அனைத்திலும் உயிருக்கு உயிராய் நின்று, இன்பத்தை அளிக்கும் பொருளே!

அளந்து அறிய முடியாத பொருளே! தனித்தன்மை உடைய பொருளே!

கீழ் எல்லையையும் மேல் எல்லையையும் காட்டாத அகண்ட பொருளே!



நிலைத்த பொருள்களிலும் நிலையில்லாத பொருள்களிலும் நின்று அருளினைப் பொழிந்து கொண்டிருக்கும் தலைமைப் பொருளே! தன் கூட்டத்தை விட்டுப் பிரிந்த மான்போல

அடியேன் உன்னைப் பிரிந்து வருந்தாது, அடியார்களுடன் சேர்ந்து இன்பமுடன் இருக்குமாறு செய்யும் சிறப்பு பொருந்திய பெருஞ் சிறப்புடைய பொருளே!

குளிர்ந்த அருளாகிய பழுத்த பழமே! இன்பமாகிய கற்கண்டாய் விளங்கும் வரமே!

### தாயுமானவரின் அந்தப் பாடல்(ஆகாரபுவனம் 2 - தா.பா.133.)

அனந்தபத உயிர்கள்தொறும் உயிரா யென்றும்
ஆனந்த நிலைஆகி அளவைக்கு எட்டாத்
தனந்தனிச்சின் மாத்திரமாய்க் கீழ்மேல் காட்டாச்

---

சதசத்தாய் அருட்கோயில் தழைத்த தேவே
இனம்பிரிந்த மான்போல் நான் இடையா வண்ணம்
இன்பம் உற அன்பர்பக்க ல் இருத்தி வைத்துக்
கனம் தருமா கனமேதண் அருளில் தானே
கனிபலித்த ஆனந்தக் கட்டிப் பேறே.

இந்தப் பாடலில் – சாதகன்- தனது ஆன்மீக பயணத்தில் சத்சங்கத்துடன் தொடர்பில் இருக்க வேண்டும்.

இதனை வலியுறுத்த வந்த தாயுமானவர் தன் தன் கூட்டத்தை விட்டுப் பிரிந்த மான்போல இருக்க கூடாது என்பதை சொல்கிறார்.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 38. நிகரஇல்பசு பதியான பொருளை நாடி

சொற்களால் விளக்கிச் சொல்லமுடியாத அந்த மேலான பொருளை அழகான ஒரு உவமை வாயிலாக தருகிறார் தாயுமானவர்.

இந்தப் பாடலில்........

"அ" என்னும் எழுத்துத் தனித்தும், ஏனைய எழுத்துகளில் பொருந்தியும் நிற்பதுபோலத்



அண்டங்கள் அனைத்திலும் கலந்து நிற்கின்ற பொருளாகியும்,

சொல்லப்படாத அனைத்தும் ஆகியும்,

மேலான பொருள் ஆகியும்,

சொற்களால் விளக்கிக் கூறமுடியாத தன்மை உடையது ஆகியும்,

குற்றமற்றதும், விருப்பு வெறுப்புகள் படியாததும் ஆன அறிவு ஆகியும்,

தூயதன்மை உடையது ஆகியும்,

ஒப்பில்லாததும் உயிர்களுக்குத் தலைவனாய் விளங்குவதும் ஆகிய பொருளை

ஆராய்ந்து தேடி, பெருமூச்சு விட்டு, பேரன்பு கொண்டு நினைவில் நிறுத்துவோமோகா!

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(பொருள்வணக்கம் 12 – தா.பா.25)

அகரஉயிர் எழுத்து அனைத்து ஆகி வேறாய்
அமர்ந்துஎன அகிலாண்டம் அனைத்தும் ஆகிப்
பகர்வனஎல் லாம் ஆகி, அல்லது ஆகிப்,
பரம்ஆகிச், சொல்லரிய பான்மை ஆகித்.
துகள்அறுசங் கற்பகவிகற் பங்கள் எல்லாம்
தோயாத அறிவாகிச் சுத்தம் ஆகி,
நிகரஇல்பசு பதியான பொருளை நாடி
நெட்டுயிர்த்துப் பேரன்பால் நினைதல் செய்வாம்"

**அண்டம்** என்பது நம்மைச் சுற்றியுள்ள எல்லாவற்றையும் குறிக்கின்ற ஒரு சொல்லாகும்.

பூமி, நிலவு, வானம், சூரியன், சூரியனைச் சுற்றி வரும் கோள்கள், விண்மீன்கள், விண்மீன்களுக்கு இடையுள்ள விண் துகள்கள் (*cosmic dust*), அவற்றின் இயக்கம், இவற்றை எல்லாம் சூழ்ந்துள்ள வெட்ட வெளி (*empty space*), கண்ணுக்குத் தெரியாத தொலைவில் உள்ள விண்மீன்களுக்கும் அப்பால் உள்ள விண்மீன் குழுக்கள் (*galaxy*) ஆகியன அனைத்தும் அண்டம் என்ற சொல்லில் அடங்கும்.

இத்துடன் காலம் என்ற கருத்தும் அது தொடர்பான முறைமைகளும் (*laws*) இதில் அடங்கும்.

இந்தப் பாடலில் தாயுமானவர் அண்டங்கள் அனைத்திலும் கலந்து ஊடுருவியிருக்கும் வெட்ட வெளி என்பதை விளக்க அருமையான உவமையைக் எடுத்தாள்கிறார்.

-----

"அ" என்னும் எழுத்துத் தனித்தும், ஏனைய எழுத்துகளில் பொருந்தியும் நிற்பதுபோலத் தனித்தும், இருப்பதுதான் வெட்டவெளி என்பதை விளக்குகிறார்.

வெட்டவெளி நினைவில் எப்பொழுதும் இருப்போமா?

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 39. கடல் மணலை எண்ணிக் காண்பது போல்

போலி மதவாதிகள் தெய்வத்தைக் காட்ட பல உதாரணங்களை கூறி மக்களை ஏமாற்றி வருவதையும் ஒரு உவமை மூலம் நமக்கு சொல்லி எள்ளி நகையாடுகிறார் தாயுமானவர்.

- மழை அளவு பெரிய காட்சி என்றும்,
- கண்ணால் காண முடியாதவை என்றும்,
- மறப்பு என்றம், நினைப்பு என்றும்,
- மாயை என்னும கடலில் வீசும் அலைகளாகிய இன்ப துன்பங்கள் என்றும்,
- தனை நீக்க உதவும் சமயங்கள் என்றும்,அவற்றிற்குரிய தெய்வங்கள் என்றும்,
- ஆத்ம சாதகர் என்றும்,
- அதற்குச் சாட்சியாக நூல்களில் சொல்லப்பட்ட நெறிகள் என்றும்,
- அதன்மீது வாதப் பிரதிவாதம் என்றும்,




இப்படி பலப்பலவாய் கடல் மணலை எண்ணிக் காண்பது போல்

எண்ணிக் காண முடியாது போகும்.

---

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(ஆகாரபுவனம் 16 - தா.பா.147.)

மலைமலையாம் காட்சிகண்கா ணாமை ஆதி
மறப்பு என்றும் நினைப்பு என்றும் மாயா வாரி
அலைலையாய் அடிக்கும் இன்ப துன்பம் என்றும்
அதைவிளைக்கும் வினைகள் என்றும் அதனைத் தீர்க்கத்
தலைபலவாம் சமயமென்றும் தெய்வ மென்றும்
சாதகது என் றும் அதற்குச் சாட்சி யாகக்
கலைபலஆம் நெறி என்றுந் தர்க்கம் என்றும்
கடல் உறுநுண் மணல், எண்ணிக் காணும் போதும்.

இந்தப் பாடலில் – தெய்வம் எது என்று பலவாறாக சமயவாதிகள் வாதபிரத வாதம் செய்து வருவது கடல் மணலை எண்ணிக் காண்பது போலாகும் என்கிறார் தாயுமானவர்.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

### 40. மானைக் காட்டி மானைப் பிடிப்பதுபோல

சாதகனுக்கு குரு தானாக வருவார். இதனை அருமையான ஒரு உவமை மூலம் தாயுமானவர் நமக்கு விருந்து படைக்கிறார். வாருங்கள் உண்டு களிப்போம்.

கண்ணால் காண முடியாத துன்பங்கள் பலவும் கத்தை கத்தையாய் வந்துசேர,

அதனைக் கற்பூர மலையில் தீப்படித்ததுபோல் கட்டோடு எரித்து,

ஓர் அதிசயத்தை நிகழ்த்தி, அறிவு விளக்கம் பெற்று நிற்க.

உணவு, உறக்கம். இன்பம், துன்பம், பெயர், ஊர் முதலியன கொண்டு நம்மைப் போலவே மானுட உருவம் கொண்டு,

மானைக் காட்டி மானைப் பிடிப்பதுபோல-குற்றமறத் தன்வசப்படுத்தும் கொள்கையுடன்-அருள்நிறை மௌன குருவாய் வந்தனன்.

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(ஆகாரபுவனம் 17 -  தா.பா.148.)

காணரிய அல்லல் எல்லாம் தானே கட்டுக்
  கட்டாக விளையும் அதைக் கட்டோ டேதான்
வீணினில்கர்ப் பூரமலை படுதீப் பட்ட
  விந்தை எனக் காண ஒரு  விவேகம் காட்ட
ஊண் உறக்கம் இன்பதுன்பம் பேர் ஊர் ஆதி
  ஒவ்விடவும்,  எனைப்போல உருவம் காட்டிக்
கோண் அ ஓர் மான்காட்டி மானை ஈர்க்கும்
  கொள்கைஎன அருள்மௌன குருவாய் வந்து.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 41. தேன்குடித்த வண்டு போல

இறையின்பத்தை அனுபவிப்பது எப்படி?  விடையாக வருகிறார் தாயுமானவர்.  வாருங்கள் அனுபவிக்கலாம்.

அது என்று கூறும்போது, எது என ஒரு ஐயம் தோன்றும்.  ஆகையால் அது எனச் சொல்வதையும முழுமையாக நீக்கி விட்டு,



தேன்குடித்த வண்டு போல சனகன் முலிய மன்னர்களும் சுகர் முதலிய முனிவர்களும் திருவடி ஞானத்தில் திளைத்தனர் என்பது அறிந்து

இந்நிலையில்நில் எனவும் ஆட்கொண்டு அருள்செய்யும் பதி எனவும்,

என்னை ஆட்கொண்ட முறைமைக்கு ஏற்ப,

வேறுபாடற்ற நிட்டையில் நின்று,

---

மேலான பேரின்ப நிலையைக் கண்டு கொள் எனவும், அருள் செய்வாயாகா!

இது நிகழாது உறங்கவும் மாட்டேன். வேறு செயல் எதுவும் செய்யவும் மாட்டேன்.

## தாயுமானவரின் அந்தப் பாடல்

_(சுகவாரி 23 - தா.பா.154.)

அதுநறால் எதுஎன ஒன்று அடுக்கும் சங்கை
  ஆதலினால் அது எனலும் அறவே விட்டு
மது உண்ட வண்டு எனவுஞ் சனகன் ஆதி
  மன்னவர்கள் சுகர்முதலோர் வாழ்ந்தார் என்றும்
பதி இந்த நிலை எனவும் என்னை ஆண்ட
  படிக்கு, நிர் விகற்பத்தால் பரமா னந்தக்
கதிகண்டு கொள்ளவும்நின் அருள்கூ ர். இந்தக்
  கதியன்றி உறங்கேன். மேற் கருமம் பாரேன்.



(சுகர் முனிவர்களுக்கு உபதேசித்தல்)

(யாக்யவல்க்கிய முனிவருடன் மன்னர் ஜனகர்)



இந்தப் பாடலில் –சராணகதி அடைந்தபின் இறையின்பம் கிடைக்கும் என்பதை பதிவு செய்கிறார்.

சனகர், சுகர் முதலியவர்களை உதாரணப் புருஷர்களாக ஒரு உவமை மூலம் தருகிறார் தாயுமானவர்.

சுகதேவர், சுகதேவ கோசுவாமி என அழைக்கப்படுபவர்.

வேதங்களை நான்காகப் பகுத்தவரும் பாகவதம் எனப்படும் புராணத்தை எழுதியவருமான வியாச முனிவரின் புதல்வன் ஆவார்.

---

மகாபாரததில் வரும் அர்ஜுனனின் பேரனான பரிட்சித்து மன்னன், தட்சகனால் கடிபட்டு இறக்கும் தறுவாயில் அவனுக்கு பாகவதத்தை உபதேசித்தார்.

இவர் அத்வைத இருடிகளின் மரபு வழியில் வந்த ஐந்தாவது இருடி ஆவார். சீவ முக்தி எனப்படும் துறவு நிலையை அடைந்தவர்.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 42. நெருப்பில் பட்ட கற்பூரம்போல

தாயுமானவர் உவமைகள் மூலமே தனது பாடல்களை படைத்துள்ளார். இதோ அதில் ஒரு உவமை பருக வாருங்கள்.



தானா தன்மை தவிர அங்கு வேறு எதுவும் தலை தூக்குவது இல்லை.

அவ்வாறு தலைதூக்கினாலும்,

நெருப்பில் பட்ட கற்பூரம்போல காணாமல் போகுமே அன்றி,

காணப்படுபொருள் தனியே இருக்காது,

காண்பானும் காணப்படும் காட்சியும் காணப்படு பொருளும் அற்ற நிலையில் நிற்கும்பேர், அதன் பெருமையை யாரால் விவரித்துப் பேச முடியும்?

தான் (உயிர்) அது இறை) ஆகின்ற போது, அதுவே அதன் பெருமையை உணர்த்தி நிற்கும்.

### தாயுமானவரின் அந்தப் பாடல்

(சுகவாரி 22 -  தா.பா.216.)

---

தானான தன்மயமே யல்லால் ஒன்றைத்
தலையெடுக்க வொட்டாது தலைப்பட் டாங்கே
போனாலுங் கர்ப்பூர தீபம் போலப்
போயொளிப்ப தல்லாது புலம்வே றின்றாம்
ஞானாகா ரத்தினொடு ஞேய மற்ற
ஞாதுருவும் நழுவாமல் நழுவி நிற்கும்
ஆனாலும் இதன்பெருமை எவர்க்கார் சொல்வார்

இந்தப் பாடலில் ---இந்தப் பாடலில் ஒன்றாய்க் காண்பதே காட்சி என்பதை விளக்குகிறார் தாயுமானவர்.

**ஒன்றாக காண்பதே காட்சி !**

ஒரு பொருளை காணும் போது
அதில் காண்பவன்,
காணப்படும் பொருள் இவ்விரண்டை இணைக்கும் காட்சி
என மூன்று நிலைகள் உண்டு !

தன்னையும், தனது அறிவையும், அறியப்படும் பொருளையும் பகுத்து உணரும்படி நில்லாமல் அறியப்படும் பொருளில் அழுந்தித் தன்னையும் தனது அறிவையும் மறந்து அப்பொருளோடு ஒன்றுபட்டு நிற்கும்போதே இன்ப நுகர்ச்சி உளதாகும்.

இவ்வுண்மை உலக இன்பத்திற்கும் பொருந்தும்; பேரின்ப நுகர்ச்சிக்கும் பொருந்தும்.

கனவில் பெண்ணிடம் இன்பம் துய்க்கும் நிலையில் இங்கே காண்பவனும் - காட்சியும் - காணப்படும் பொருள் அனைத்தும் (அவனே ) ஒன்றே!

காஞ்சி புராணத்திலும் இக்கருத்தினை நாம் பார்க்கலாம்.

ஞானமும் ஞேயப் பொருளும் -- பற்றும்
ஞாதாவும் இல்லையென் பார்க்கரி யாராம்
ஞானமும் ஞேயப் பொருளும் -- பற்றும்
ஞாதாவு மாய்ப்பகுப் பார்க்குயெட்டாராம் (ஆனந்தம்)

-----------------------------------------------------------------------------------------------------------------------------

பரமுத்தி நிலையாகிய சிவபோக அநுபவ நிலையில் உயிரும், உயிரினறிவு நிகழ்ச்சியும் , முதற்பொருளும் உள்ளனவெனினும், யான் துய்க்கின்றேன் என்னும் சுட்டறிவு நிகழப் பெறாமையின் காண்பானும் காட்சியும் காட்சிப்பொருளில் வியாப்பியமாய் அடங்கி நிற்கும் என்பது உணர்த்துகின்றது, இது.

காண்பானும் காட்டுவதும் காண்பதுவும் நீத்துண்மை காண்பார்கள் நன்முத்தி காணார்கள் -காண்பானும் காட்டுவதுங் காண்பதுவும் தண்கடந்தைச் சம்பந்தன் வாட்டும்நெறி வாரா தவர் என்னும் வினாவெண்பாவின் பொருளை விளக்குதல் காண்க.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 43. அலையில்லாத கடல் போல

தாயுமானவர் தமது தத்துவங்களைச் சொல்லும்போது ஒரு பாட்டில் இரண்டு உவமைகளைக் கூட கையாளுவதுண்டு. இதோ ஒரு பாடல் சுவைக்கலாம் வாருங்கள். . .



அலையில்லாத கடல் போல மனத்தில் அசைவு தீர்ந்து,

தெளிவாய் உருகும் பொன்போல தெளிவாய் மனம் உருகும் இடத்து,

நீ கனிந்த மேலான பேரின்பக் கற்கண்டாக வெளிப்படுவாய்!

அப்படிப்பட்ட கற்கண்டாய் இதுநாள் வரை நீ வரக் காணேன்.

என்னால் வற்புறுத்தப்பட்டு வார்த்தை சொன்னால் இன்பம் வருமோ?



வஞ்சமனம் உடைய என்னை இந்த உடம்பிலே தங்கவைத்து,

---

வேறுபாடற்ற இன்பநிட்டை கொடுப்பது, ஐயா! எப்பொழுதோ?

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(பன்மாலை 9 - தா.பா.183.)

திரை இல்லாக் கடல்போலச் சலனம் தீர்ந்து,
தெளிந்து உருகும் பொன்போலச் செகத்தை எல்லாம்
கரையவே கனிந்துஉ உருக்கும் முகத்தி லேநீ
கனிந்தபர மானந்தக் கட்டி, இந்நாள்
வரையிலே வரக்காணேன். என்னாற் கட்டி
வார்த்தை சொன்னால் சுகம்வருமோ? வஞ்ச னேனை
இரையிலே இருத்தி நிர் விகற்பம் ஆன
இன்பநிட்டை கொடுப்பது ஐயா எந்த நாளோ.

இந்தப் பாட்டில் தாயுமானவர் தனது பாடல்களில் அவரைப் பற்றி சொல்லவில்லை. நம்மைப்பற்றித்தான் சொல்லி வருகிறார்.

நமது உடலிலே வஞ்சமனத்தை வைத்திருக்கிறோம். அதனை அகற்ற வேண்டும். அலையில்லாத கடல் போல மனதை அலைபாயாமல் வைக்க வேண்டும்.

தெளிவாய் உருகும் பொன்போல மனம் உருக வேண்டும். இந்த நிலை வரும் நாளில் கற்கண்டாய் பேரின்ப வெள்ளத்தில் நாம் மிதக்கலாம்.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 44. அறியாமை மிகுந்த நாய் போல்

தாயுமானவர் இந்தப் பாடலில் நாயையும் யானையையும் உவமைக் காட்டுகின்றார்.

வாழ்வதற்கு தேவைப்படும் இடம், பொருள், ஏவலர் ஆகியவற்றைக் குறிவைத்த நீ, அறியாமை மிகுந்த நாய் போல் எங்கே போய் சிக்கிக் கொண்டாய்.



---

அறியாமை உடைய மனம் குறித்து கவலைப்படாதே. இங்கே வா!

ஆசையற்ற இடமே இடம் என உணர்! அந்த இடத்தில் நிலைபெற்று நிற்க, எல்லாப் பொருளும் வந்துசேரும். உலகமும் உனது ஏவல் கேட்டு நிற்கும்.

இந்த ஆசையற்ற நிலையில் நின்றவர்கள் **சனகன்** முதலிய முனிவர்கள் ஆவர்.



மதம் பொருந்திய பெரிய யானை கட்டப்பட்டிருப்பது போல பாசமாகிய பெரிய சங்கிலியினால் கட்டப்பட்டிருக்கிறாய்.

அந்தக் கட்டு அவிழுமாறு திருவருளை எதிர்நோக்குவாயாக!

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(நினைவு ஒன்று 4 - தா.பா.188.)

இடம்பொருள்ஏ வலைக்குறித்து மடம்புகுநாய் எனவே
  எங்கேநீ அகப்பட்டாய். இங்கேநீ வாடா.
மடம்பெறுபாழ் நெஞ்சாலே அஞ்சாதே. நிராசை
  மன் இடமே இடம்அந்த மாநிலத்தே பொருளும்.
திடம்பெறவே நிற்கின் எல்லா உலகமும் வந்து ஏவல்
  செய்யும் இந்த நிலைநின்றோர் சனகன் முதல் முனிவர்
கடம்பெறுமா மதயானை என்னவும் நீ பாசக்
  கட்டான நிகளபந்தக் கட்டு அவிழப் பாரே.

இந்த பாடலில் --- அறியாமையாலும் பாசத்தாலும் நாம் கட்டப்பட்டிருக்கிறோம். இந்தக் கட்டினை அவிழ்த்துவிட்டால் ஆசையை அகற்றி விட்டால் இறையருள் கிடைக்கும்.

---

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 45. அனலில் பட்ட மெழுகுபோல்

---

தாயுமானவர் உவமை நயங்கள், திறம்பெற்றதாகவும், தனிச் சிறப்புடையதாகவும் திகழ்கிறது. நமது மனம் பற்றிய அவர் கூறிய உவமையை சுவைப்போமா?

வருவதும் போவதும் இன்றி, எப்பொழுதும் ஒரு தன்மை உடையதாய் விளங்கும் என்று சொல்ல முடியாத ஆகாயம் முதலிய தத்துவங்களைத் தன்னுள் அடக்கி, தான் அதற்கு மேலாக வெளிப்பட்டு நிற்கும் வலிய மனம் என்ன இரும்பா? கல்லா? மரமா?

இப்படிப்பட்ட மனமும் அனலில் பட்ட மெழுகுபோல் உருக,

இன்ப வெள்ளம் பெருக்கெடுக்க,

அவ்வின்பம் கரும்பு, கற்கண்டு. சீனி, சர்க்கரை, தேன், கனி, அமுதம் என இவை போன்ற சுவைதர, பக்குவமுடைய ஞானியர் அதனைச் சுவைத்து நுகர்வர்.

ஆனால் பக்குவம் இல்லாதவரோ அரும்பு மணத்தைக் காட்டாதது போலவும், காமஇன்பத்தை கன்னிப்பெண் அறியாதது போலவும், அறிய மாட்டார்.

தாயுமானவரின் அந்தப் பாடல்(நினைவு ஒன்று 8 - தா.பா.192.)

வரும்போம் என் பனவும் இன்றி, என்றம் ஒரு படித்தாய்
  வான்ஆதி தத்துவத்தை வளைந்து அருந்தி, வெளியாம்
இரும்போ கல்லோ, மரமோ என்னும் நெஞ்சைக் கனல்மேல்
  இட்டமெழு கா உருக்கும் இன்பவெள்ள ம் ஆகிக்
கரும்போ, கண் டோ, சீனி சர்க்கரையோ, தேனோ,
  கனி,அர்தோ எனருசிக்கும் கருத்தவிழ்ந்தோர் உணர்வார்
அரும்போ, நன் மணங்காட்டும் காமரசம் கன்னி
  அறிவாளோ? அபக்குவர்க்கோ அந்நலந்தான் விளங்கும்?

சாதனையில் பக்குவப்பட்டு உயர்நிலை அடைந்தவர்கள் இன்ப வெள்ளமான கரும்பு, கற்கண்டு. சீனி, சர்க்கரை,தேன், கனி, அமுதம் என இவை போன்ற சுவைதர, அதனைச் சுவைத்து நுகர்வர்.

சாதனையில் வெற்றி பெறதாவர்கள் இன்னும் பக்குவப்படாதவர்கள் அரும்பு மணத்தைக் காட்டாதது போலவும், காமஇன்பத்தை கன்னிப்பெண் அறியாதது போலவும், அறிய மாட்டார்.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 46. இரும்பைக் காந்தம் இழுப்பதுபோல

தாயுமானவர் தனது பாடல்களில் அதிகமாக உவமைகளைப் பயன்படுத்தி உள்ளார். நாம் பக்குவப்பட்டிருந்தால் இறைவன் நம்மை, தாயைப் போல் ஏற்றுக் கொள்வான் என்பதை அழகிய உவமையாக தருகிறார்.



காந்தம் இரும்பைக் காந்தம் இழுப்பதுபோல என்னை ஈர்த்து,

திரும்பி வேறெங்கும் பார்க்காதபடி திருவடியாகிய கரும்பினைத் தந்து,

கண்ணீர் சிந்தவும் உடல் நடுங்கவும் ஆகிய எல்லாம் செய்வித்து,


© Can Stock Photo

ஏற்றுக் கொண்ட எனது தாயைக் போல் பரிவு காட்டிய தயாளனே.

### தாயுமானவரின் அந்தப் பாடல்

(பொன்னை மாதரை 24 - தா.பா.217.)

இரும்பைக் காந்தம் இழுக்கின்ற வாறு எனைத்
திரும்பிப் பார்க்க ஒட் டாமல் திருவடிக்
கரும்பைத் தந்து, கண் ணீர் கம்பலைஎலாம்
அரும்பச் செய்எனகு அன்னை ஒப் பாமனே!

இந்தப் பாடலில் – சாதகன் இறையருளை பெற தன்னை தகுதியாக்கி கொண்டால் இறையருள் கண்டிப்பாக வந்து சேரும் என்பதை ஆணித்தரமாக சொல்கிறார் தாயுமானவர்.

தாயுமானவரின் உவமைகள் 100

---

**மன்னார்குடி பானுகுமார்**

# 47. ஊமை கண்ட கனவு போல்

தாயுமானவர் உவமை நயங்கள், திறம்பெற்றதாகவும், தனிச்சிறப்புடையதாகவும் திகழ்கிறது. அதில் ஒன்றை சுவைப்போம் வாருங்கள்.

ஐயனே! என்னை வாரி அணைத்து. தன்னுள் அடக்கி,

பேரின்பமாய் உலகில் கண்ட பொருள்கள் அனைத்திலும் தன்னையே காட்டும் தன்மையை ஆராய்ந்ததால், **ஊமை கண்ட கனவு போல்** யாருக்கும் சொல்ல முடியாத நிலை உண்டானது.

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(பொன்னை மாதரை 30-தா.பா.223.)

வாரிக் கொண்டுளனை வாய்மடுத் து இன்பமாய்ப்
பாரில் கண்டவை யாவும் பருகினை.
ஓரில் கண்டிடும் ஊமன் கனவென
யாருக் குஞ்சொல வாயி இலை ஐயனே!

இந்தப் பாடலில் - தவநிலையில் நாம் அடைந்த இன்பத்தை யாரிடமும் பகிர்ந்து கொள்ளவோ விவாதிக்கவோ கூடாது என்பதை தாயுமானவர் வலியுறுத்துகிறார்.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

# 48 கையில் ஆமலக்கனி ஆகிய மெய்யனே

-----------------------------------------------------------------------------------------------------------------------

தாயுமானவர் உவமைநயங்களும் உருவகங்களும் பல, சொல்லியலாலும், பொருளமைப்பாலும் தனிச்சிறப்பு பெறுகின்றன என்பது வெளிப்படை.



ஐயனே! ஏனைய சாதி சமயங்கடந்த துறவிகளுக்கெல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல், தெற்றென விளங்கும் மெய்ப் பொருளே!

இந்த உலகில் உழன்று கொண்டிருக்கும் பொய்யனாகிய எனக்கு நிலையான புகலிடம் வேறு எங்கு உளது?

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(பொன்னை மாதரை 31-தா.பா.224.)

ஐய! மற்ற அதிவரு ணர்க்குஎலாம்
கையில் ஆமல கக்கனி ஆகிய
மெய்யனே இந்த மேதினி மீதுஉழல்
பொய்ய னேற்குப் புகலிடம் எங்ஙனே?

இந்தப்பாடலில் -- ஒருவர் சொன்ன விஷயம் தெளிவாகப் புரிந்தது என்பதற்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல் என்பதை உவமை கூறுவது வழக்கம்.

### உள்ளங்கை நெல்லிக்கனி என்று ஏன் சொல்கிறோம்?

அதற்கு நாம் சொல்லும் பொருள், உள்ளங்கையில் நெல்லிக்கனியை வைத்தால் அது பளிச்சென்று தெரியும்.

உள்ளங்கையில் ஆரஞ்சு வைத்தால்கூட, அது பளிச்சென்று தெரியும், பிறகு ஏன் நாம் ‘உள்ளங்கையில் ஆரஞ்சுக் கனிபோல’ என்று சொல்வதில்லை?

அதற்குக் காரணமே வேறு, மற்ற பழங்கள் உள்ளிருந்து அழுகும், நெல்லிக்கனிமட்டும் வெளியிலிருந்து அழுகும்.

---

ஆகவே, மற்ற பழங்களைக் கையில் வைத்துப் பார்த்தால், அது நல்லதா அழுகியதா என்று தெரியாது,

நெல்லிக்கனியைப் பார்த்தால்மட்டும் உடனே தெரியும். அதனால்தான் உள்ளங்கை நெல்லிக்கனியைப் பயன்படுத்துகிறோம்.

---

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 49. கடலில்பட்ட துரும்புபோல

தாயுமானவர்  பாடல்களில் உவமை நயங்களினூடான நுட்ப வேறுபாடுகளைக் காணமுடிகிறது.

வஞ்சனையுடன் கூடிய வஞ்ச நெஞ்சினர் காணாத காட்சியே!அனைத்துக்கும் சாட்சியே! அறிஞர் உள்ளத்தில் குடிகொள்ளும் துணையே! பொன்னம்பலத்தில் நடனமிடும் உண்மை எனப்படும் தத்துவமே!

வளம் பொருந்திய ஞானக் கடலை வாயினால் உண்டு, மண்ணும் விண்ணும் தெரியாவண்ணம் கடலில்பட்ட துரும்புபோல உடலும் உயிரும் பேரின்பமாய் நின்று, பின்னர் வருந்தினேன்.

தாயுமானவரின் அந்தப் பாடல்(ஆரணம் 3-தா.பா.274.)

வளம்பெறு ஞான வாரிவாய் மடுத்து
மண்ணையும் விண்ணையும் தெரியாது
அளம்பெறும் துரும்பு ஒத்து? ஆவியோடு ஆக்கை
ஆனந்தம் ஆகவே அலைந்தேன்.
களம்பெறு வஞ்ச நெஞ்சினர் காணாக்
காட்சியே சாட்சியே அறிஞர்
உளம்பெறும் துணையே. பொதுவினில் நடிக்கும்

உண்மையே உள்ளவாறு இதுவே.

# தாயுமானவரின் உவமைகள் 100

---

**மன்னார்குடி பானுகுமார்**

## 50. கடுகுக்குள் கடலை அடைப்பதும்போல்

மாயையில் மயங்கி கிடக்கும் மானுடத்தை எமனுக்கு விருந்தாக அமைத்து விட்டதை சொல்ல வந்த தாயுமானவர், எமனைப் பற்றி இரண்டு உவமைகளை இந்தப் பாடலில் தருகிறார்.

சொல்லுதற்கு அருமை உடைய மேலான மெய்ப்பொருளே!

பேரின்பப் பெருங்கடலே! பேரொளிக் கொழுந்தே!

வெல்லுதற்கு அருமையுடைய மாயையாகிய மயக்கத்தில் என்னை விட்டு, எங்கு சென்று ஒளித்தாய்?அந்தோ! கெட்டு ஒழிந்தேன்.

வலிய கருங்கல்லில் பசிய நாரினை உரிப்பதும், கடுகுக்குள் கடலை அடைப்பதும்போல் அரிய செயல்களைச் செய்யும் கரிய நிறமுடைய எமனுக்கு

என்னை ஆளாக்கி விட்டாயோ? அறியேனே!

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(சொல்லற்கு அரிய 1 -  தா.பா.282.)

சொல்லற்கு அரிய பரம்பொருளே, சுகவா ரிதியே, சுடர்க்கொழுந்தே,
வெல்லற்கு அரிய மயலில் எனை விட்டுஎங்கு ஒளித்தாய்? ஆகெட்டேன்.
கல்லில் பசிய நார் உரித்துக் கடுகில் பெரிய கடல் அடைக்கும்
அல்லில் கரிய அந்தகனார்க்கு ஆளாக் கினையோ அறியேனே!

எமனைப் பற்றி இரண்டு உவமைகளில் சொல்லுகிறார். வலிய கருங்கல்லில் பசிய நாரினை உரிப்பது போலவும், கடுகுக்குள் கடலை அடைப்பதும்போலவும் எமன் அரிய செயல்களை் செய்பவனாம்.

அவனுக்கு மாயையில் அகப்பட்டு கிடக்கும் நம்மை ஆளாக்கி விட்டாயே? என்று இறைவனைப் பார்த்து நாம் கேட்பதாக இப்பாடல் அமைந்துள்ளது.

# தாயுமானவரின் உவமைகள் 100

---

**மன்னார்குடி பானுகுமார்**

# 51. பற்றிவரும் குழந்தை போல்

சாதகனை ஒரு குழந்தையின் பாசத்தோடு ஒப்பிட்டு ஒரு பாடலை நமக்குத் தருகிறார் தாயுமானவர்.



இரவுபகல் பாராமல், அன்பில் கரைந்து கரைந்து உருகி "அண்ணா!" என்றும், "அரசே!" என்றும், கூவிப் பின்னே பற்றிவரும் குழந்தை போல்

கண்களில் நீரைத் தாரை தாரையாகப் பெருக்கி, பித்தன் ஆகி, துன்பக் கடலை விட்டு வெளியேறுவேனோ?

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(சொல்லற்கு அரிய 4 -  தா.பா.285.)

இன்பக் கடலில் புகுந்திடுவான் இரவும் பகலும்  தோற்றாமல்
அன்பில் கரைந்து கரைந்து உருகி, அண்ணா அரசே எனக்கூவிப்
பின்புஉற்று அழும்சேய் எனவிழிநீர் பெருக்கிப் பெருக்கிப் பித்தாகித்
துன்பக் கடல்விட்டு அகல்வேனோ? சொரூபா  னந்தச் சுடர்க்கொழுந்தே!

இந்தப்பாடலில் தாயுமானவர் தன்னை குழந்தையுடன் ஒப்பிட்டு பேசுகிறார். தாயுமானவர் நமக்கு எதை உணர்த்துகிறார்?

துன்பமாகிய கடலை விட்டு விடுபட இன்பமாகிழய கடலில் நூழைய நாம் என்ன  செய்ய வேண்டும்?

இரவு பகல் பாராது எந்த நேரமும் இறைநிலையை நினைந்து ஒரு குழந்தையைப் போல் உருகி நிற்க வேண்டும்.  உருகி அழைக்க வேண்டும்.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

---

52. தாயிலாச் சேய்போல் அலைந்தலைப் பட்டேன்

மனிதன் தான் காணுகின்ற எல்லாப் பொருள்களையும் ஒன்றோடொன்று ஒப்பிட்டுப் பார்க்கஎண்ணுகிறான். இவ்வியல்பு மனிதன் சிந்திக்கத் தொடங்கியபோதே தோன்றியிருக்க வேண்டும்.

தாயுமானவர் தன்னை தாயில்லாப் பிள்ளையைப் போல் அலைந்து திரிந்ததை ஒப்பிட்டு நமக்கு ஒரு தத்துவத்தை சொல்ல வருகிறார். அது என்ன தத்துவம். வாருங்கள் சுவைப்போம்.

பெற்ற தாயை விட பரிந்து அருள்செய்யும் பொன்னம்பலத்தில் முதல்வனாய் நின்று, ஒளிவிடும் மாணிக்க மணியே!

எம் உயிர்த் தலைவனே! ஞானக் கடலே!

மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளின் வாயிலாகப் பெறும் உற்றறிதல், சுவைத்தல், பார்த்தல், நுகர்தல், கேட்டல் என்னும் ஐம்புலன்கள் ஆகிய வேடர்கள் என்னைப் பற்றி இழுத்துக் கொண்டுபோய், கொடிய காமமாகிய நெருப்பிலே வதக்கி, உயிரோடு தின்ன, மனம் வருந்தி, உருகி, உடம்பை மறந்து, தாயில்லாப் பிள்ளை போல் அலைந்து திரிந்து துயர் உறுகின்றேன். (எளியேனைக் காத்து அருள்வாயாக!)

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(சிவன்செயல் 5 - தா.பா.306.)

வாயில்ஓர் ஐந்திற் புலன் எனும் வேடர்
  வந்துஎனை ஈர்த்து, வெம் காமத்
தீயிலே வெதுப்பி உயிரொடும் தின்னச்
  சிந்தைநைந்து உருகிமெய்ம் மறந்து
தாயிலாச் சேய்போல் அலைந்தலைப் பட்டேன்
  தாயினும் கருணையா மன்றுள்
நாயகம் ஆகிஒளிவிடும் மணியே
  நாதனே ஞானவா ரிதியே!

இந்தப்பாடலில் -- காமத்தை நாம் கட்டுப்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார் தாயுமானவர்.

---

திருஞான சம்பந்தர் தேவாரப் பாடல் இங்கு ஒப்புநோக்கதாகும்.

**நிலனொடு வானும் நீரொடு தீயும் வாயுவு மாகியோ ரைந்து**
**புலனொடு வென்று பொய்ம்மைகள் தீர்ந்த புண்ணியர் வெண்பொடிப் பூசி**
**நலனொடு தீங்குந் தானல தின்றி நன்கெழு சிந்தைய ராகி**
**மலனொடு மாசு மில்லவர் வாழும் மல்குபெ ருந்துறை யாரே.**

# தாயுமானவரின் உவமைகள் 100

## மன்னார்குடி பானுகுமார்

53. காற்றின் நடுவே மாட்டிக் கொண்ட இலவம் பஞ்சு போல

ஒரு கவிஞனின் உள்ளத்துள் எழுந்தவாறே உலகிற்கு உணர்த்த உதவுவன உவமைகள் ஆகும். இதனையே நம் தாயுமானவரும் தனது பாடல்களில் விதைத்துள்ளார்.

அறிவாகிய ஒளி மிகுந்து, திருவருள் முதிர்ந்து திகழ்கின்ற மேலான தெய்வமே!



ஆசை என்னும் பெரிய காற்றின் நடுவே மாட்டிக் கொண்ட இலவம் பஞ்சு போல எனது மனம் அலையும் காலத்து, அதற்கு ஏமாற்றம் வரும்.

இதனால் கற்று கேட்டுப் பெற்ற ஞானம் அனைத்தும் கெட்டு, வீடுபேற்றுக்கான அன்பும், நல்ல தலத்தில் வசிப்பதும் போய், ஐம்புலன் வழி சென்று, இல்லாத தீமையை எல்லாம் பற்றி நிற்பர்.

அந்தோ!

அவா அறும் நிலை இல்லையேல், தெய்வம் என்ற ஒன்று அறிவுக்குப் புலப்படுமோ?

-----------------------------------------------------------------------------------------------------------------------

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(ஆசை எனும் 1 - தா.பா.322.)

ஆசைஎனும் பெருங்காற்றூ டு இலவம்பஞ்சு
எனவும்மனது இலையும் காலம்
மோசம் வரும். இதனாலே கற்றதுங்கேட்
டதுந்தூர்ந்து, முத்திக்கு ஆன
நேசமும்நல் வாசமும்போய்ப் புலனாய்,இல்
கொடுமைபற்றி நிற்பர். அந்தோ
தேசுபழுத்து அருள்பழுத்த பராபரமே!
நிராசை இன்றேல் தெய்வம் உண்டோ?

இந்தப்பாடலில்

ஆசை என்னும் பெரிய காற்றின் நடுவே மாட்டிக் கொண்ட இலவம் பஞ்சினை மனதுடன் ஒப்பிடுகிறார் தாயுமானவர்.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

### 54. புரப்பான்தன் அருள்நாடி இருப்பதுபோல்

தாயுமானவர் உவவமைகள் பொருளின் உண்மைத் தன்மைகளை அறிந்து கொள்வதற்குப் பெரிதும் உதவுகின்றன.

ஒரு பொருளை மற்றொரு பொருளோடு ஒப்புமைப்படுத்திக் கூறுவது உவமை எனப்படும். இந்தப் பாடலில் சாதகன் எப்படி இருக்க வேண்டும் என்பதை அழகாகக் கூறுகிறார்.




பிச்சை கேட்கும் ஒருவன், பழிச்சொல்லை எதிர்நோக்காது, கொடுப்பனின் அருளையே நாடி இருப்பது போல

மரம் போன்ற மனமுடைய நான் வேண்டுவது கேட்டு மனம் இரங்குவாயாக!.

மௌனமாய் ஆகாயம் போல்உயர்ந்து காணும் தன்மையாய், அருளின் முழுமையில் இருப்பதுதான், இயல்பான நிட்டையோ?

---

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(ஆசை எனும் 2 - தா.பா.323.)

இரப்பானன் அங்கு ஒருவன்அவன், வேண்டுவகேட்டு
அருள்செய்என, ஏசற் றேதான்
புரப்பான்தன் அருள்நாடி இருப்பதுபோல்
எங்குநிறை பொருளே கேளாய்!
மரப்பான்மை நெஞ்சினன்யான் வேண்டுவகேட்டு
இரங்கு எனவே. மௌனத் தோடு அந்
தரப்பான்மை அருள்நிறைவில் இருப்பதுவோ?
பராபரமே சகச நிட்டை.

பிச்சை கேட்கும் ஒருவன், பழிச்சொல்லை எதிர்நோக்காது, கொடுப்பனின் அருளையே நாடி இருப்பது சாதாரன மனிதனுக்கு மட்டுல்ல மகான்களுக்கும் உரியதே!

- தொழுநோயாளிகளுக்காக பிச்சை எடுத்த போது, ஒரு கையில் எச்சில் துப்பியதைப் பெற்றுக் கொண்ட அன்னை தெரசா, மறு கை உயர்த்தி எச்சில் துப்பியவரை மன்னித்தார்.



பிச்சை எடுக்கப் போனவரை வசைமாரி திட்டிய பெண்மணியை மன்னித்தார் புத்தர்.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

55. சாட்டை இல்லாத பம்பரக் கூட்டம் போல



தத்துவத்தின் சித்துக்களை நயம்படப்பாடி அதிலும் உவமைகளையும் உருவகங்கைளயும் சொல்லி மக்களின் செவிக்கும், சிந்தனைக்கும் ஊக்கத்தை அளித்தவர் நமது தாயுமானவர். இதோ ஒரு பாடலை பாருங்கள்.

சாட்டை இல்லாத பம்பரக் கூட்டம் போல,

எல்லாவற்றையும் ஆட்டுபவன் இறைவன் என்று அறிந்து, கவலை ஒன்று இன்றி திருவருளில் கலந்து நிற்பதானால், இல்லறம் துறவறம் என்னும் இரண்டும் மேலான அறங்களே.

சாட்டையில்லா பம்பரத்தையும் இறைவனுடைய செயலையும் ஒப்பிடுகிறார் தாயுமானவர்.

எனவே, இல்லறம் ஆனாலும் துறவறம் ஆனாலும் கவலையின்றி இறைநிலையிலேயே கலந்திருப்போமாக.

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(ஆசை எனும் 3 -  தா.பா.324.)

சாட்டை இல் பம்பர ஜாலம் போல்எலாம்
ஆட்டுவான் இறைவன் என அறிந்து நெஞ்சமே!
தேட்டம் ஒன்று அறஅருட் செயலில் நிற்றியேல்,
விட்டறம் துறவறம் இரண்டும் மேன்மையே.

இந்தப் பாடலில் ------ இல்லறம் துறவறம் இரண்டும் மேன்மையானதே என்பதையும் இந்த பிரபஞ்சத்தையே ஆட்டுவிப்பவன் இறைவனே என்பதையும் தாயுமானவர் அழகான உவமை மூலம் தருகிறார்.

## இல்லறமா? துறவறமா?

புத்தரின் மனைவிக்கு இல்லாதா ஞானமா?



பனிரெண்டு வருடங்களுக்குப் பிறகு, ஞானமடைந்தபின் புத்தர் செய்த முதல் வேலை, தந்தையிடம், மனைவியிடம், பனிரெண்டு வயதடைந்த மகனிடம் மன்னிப்பு கேட்க திரும்பி வந்ததுதான்.

புத்தரைப் பார்த்தவுடன் அவர் மனைவி, “நீங்கள் மாறியிருப்பதை என்னால் பார்க்க முடிகிறது. இந்த பனிரெண்டு வருடங்கள் மிகவும் துன்பமான காலங்கள். நீங்கள் சென்று விட்டதல்ல காரணம்.

நீங்கள் என்னிடம் எதுவும் சொல்லாமல் சென்றதே காரணம். நான் உண்மையை தேட செல்கிறேன் என என்னிடம் கூறியிருந்தால்- நான் உங்களை தடுத்து நிறுத்தியிருப்பேன் என நினைத்தீர்களா?

நீங்கள் என்னை கேவலப் படுத்தி விட்டீர்கள். நான்- உங்களை தடுத்து நிறுத்தியிருக்க மாட்டேன். நான்- நீங்கள் செல்ல அனுமதித்திருப்பேன்.

நான்- உங்களுக்கு விடை கொடுத்து, தேர் வரை வந்து வழியனுப்பி வைத்திருப்பேன்.

நீங்கள் அடைந்திருப்பது எதுவோ- அதை இங்கிருந்தே அடைந்திருக்க முடியாதா என்பதுதான்- இந்த பனிரெண்டு வருடங்களும் –உங்களை- நான்- கேட்க துடித்துக் கொண்டிருந்த கேள்வி. இந்த அரண்மனை -நீங்கள் ஞானம் பெறுவதை தடுத்து நிறுத்தி விடுமா?” என்று கேட்டாள்.

இது மிக புத்திசாலித்தனமான கேள்வி. இதை கௌதம புத்தர் ஏற்றுக்

கொள்ள வேண்டி வந்தது. “நான் இங்கிருந்தே அடைந்திருக்கலாம். ஆனால் அப்போது எனக்கு எதுவும் தெரியாது.

இப்போது என்னால் ‘இங்கிருந்தே அடைய முடியும், எந்த மலைகளுக்கும் செல்ல வேண்டியதில்லை, எங்கேயும் செல்ல வேண்டியதில்லை’ என இப்போது சொல்ல முடியும்

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 57. இடத்தைக் காக்கும் நாய்போல

சாதகனின் மனம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை அழகான உவமை வாயிலாக பாடுகிறார் தாயுமானவர்.

தூய்மையும், முழுநிறைவும், மலமற்றதும், எல்லை இல்லாததும், பேரின்ப வடிவம் உடையதும், மகிமைகள் நிறைந்ததும், தன்வசம் ஆகியதும், ஆன அருளே பழுத்தது போன்றதொரு பொருளே!



இரண்டற்ற தன்மையில் உன்னுடன் கலப்பதே பெரும்பேறு என்பதை அறியாமல் யான் என்னும் பேயானது தன்முனைப்பு காட்ட-பித்துப் பிடித்தவர் போல் மனம் கிடந்து தடுமாற, மேலும் மேலும் வருத்தம் அடைவேனோ?

### தாயுமானவரின் அந்தப் பாடல்

(ஆசை எனும் 9 -  தா.பா.330.)

அத்வைதம் பெறும்பேறு என்று அறியாமல்
  யான் எனும்பேய் அகந்தை யோடு,
மத்தமதி யினர்போல மனங்கிடப்ப
  இன்னம் இன்னம் வருந்து வேனோ?
சுத்தபரி பூரணமாய் நின்மலமாய்,
  அகண்டிதமாய்ச் சொரூபா னந்தச்

சத்திகள்நீங் காதவணம் தன்மயமாய்,
அருள்பழுத்துத் தழைத்த ஒன்றே.

இந்தப்பாடலில் -- பித்துப் பிடித்தவரை மனதுடன் ஒப்பிடுகிறார். என்ன அழகான உவமை.

மனம் வேறு, உணர்வு வேறு - மனம் சுழன்று கொண்டே இருப்பது - உணர்வு நிலைத்து நின்று சாட்சியாக இருப்பது -
நான் என்பது உணர்வு மட்டுமே .

நாம் உறங்கும்போது யாராவது அழைத்தால் தெரிவதில்லை . ஆனால் கொசு கடிப்பதை தட்டி விடுகிறோம். இது எதனால்...??? ஆழ்ந்த உறக்கத்தில் மனம் மயங்கிவிட்டது. ஆனால் உணர்வு விழித்திருந்து சாட்சியாக இருக்கிறது.

அந்த உணர்வு தான் நான். 'நான்' என்பது உணர்ச்சியோடு கூடிய எழுச்சி நிலை. 'தான்' என்பது உணர்வோடு கூடிய சாட்சி நிலை

நான் என்ற உணர்ச்சி தான்- மனம் என்று தெரிந்து கொண்டால் மனதை கடப்பது சுலமாகும்.

மனதைக் கடந்து தன் உணர்வில் லயித்திருப்போம்

தான் என்ற தன்னுணர்வில் திளைத்திருப்போம்.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

# 56. மத்தமதியினர் போல

நிலையையாமை விளக்க வந்த தாயுமானவர் அப்பாடல்களிலும் தனது கவித்திறத்தால் பல அழகான உவமைகளை சொல்லுகிறார்.

---

உலக நிலையாமையைப் புரிந்துக் கொண்டு, நேரிய வாழ்க்கை வாழ நம்பிக்கையும், தெம்பும் ஊட்டக் கூடியவையாக கவியரசரின் வாழ்வியல் தத்துவங்கள் நமக்கு உணர்த்துகின்றன.



இடத்தைக் காக்கும் நாய்போல இழிந்த ஊனாலும் இறைச்சியாலும் ஆன உடம்பைக் காத்துக் கிடந்தேன்.

உனது அடியார்கள் தங்கும் மடத்தைக் காத்த புண்ணியத்தால், சிறப்பான தொரு வாழ்வு வாழ எனக்கு, நின் திருவருள் வேண்டும்.

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(ஆசை எனும் 27 - தா.பா.348.)

இடத்தைக் காத்திட்ட சுவானனப் புன்புலால் இறைச்சிச்
ஜடத்தைக் காத்திட்ட நாயினேன், உன் அன்பர் தயங்கும்
மடத்தைக் காத்திட்ட சேடத்தால் விசேஷமாய் வாழ
விடத்தைக் காத்திட்ட கண்டத்தோய்! நின்னருள் வேண்டும்.

இந்தப்பாடலில் -- உடம்பின் நிலையாமை உவமை வாயிலாக எடுத்துச் சொல்லி ஆன்மீக சாதனையில் பயணிக்க வழிகாட்டுகிறார் தாயுமானவர்.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

### 58. பாட்டுஅளி நறவம் உண்டு அயர்ந் தது போல

தேன் குடித்த வண்டுவையும் பற்றுள்ளவனையும் ஒப்பிடுகிறார் தாயுமானவர். வாட்டம் இல்லாத மனத்தை கிண்ணமாக்கி, உன்னை வாய்வைத்துப் பருகி மகிழ்ந்தேன். அங்கே பாடும் வண்டுகள் தேன்

-----

உண்டு, மயங்கிக் கடப்பது போல அடியேன் பற்று விட்டு இருப்பது எந்த நாளோ?

### தாயுமானவரின் அந்தப் பாடல்

(ஆசை எனும் 39 - தா.பா.360.)

நாட்டம் மூன்று உடைய செந்நிற மணியே,
  நடுவுறு நாயக விளக்கே,
கோட்டம்இல் குணத்தோர்க்கு எளியநிர்க் குணமே
  கோதுஇலா அமிர்தமே நின்னை
வாட்டம்இல் நெஞ்சம் கிண்ணமாச் சேர்த்து,
  வாய்மடுத்து அருந்தினன். ஆங்கே
பாட்டுஅளி நறவம் உண்டுஅயர்ந் ததுபோல்
  பற்றுஅயர்ந்து இருப்பமு எந் நாளோ?

இந்தப்பாடலில் -- சாதனையில் முன்னேற, பற்றற்று இருப்பதை வலியுறுத்துகிறார் தாயுமானவர்.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 59. அந்தரத்தில் நிறுத்துஅவ தானம் போல

இறைவன் மிகப் பெரிய சித்துகளை செய்கிறான் என்பதை அழகான உவமை வாயிலாக தாயுமானவர் தனது தத்துவத்தை விதைக்கிறார்.



இவ்வுலகின் கண்கட்டு வித்தை காட்டும் ஒருவன், கோழி முட்டைகளை அடுக்கு அடுக்காய் அந்தரத்தில் நிற்க விட்டு, சாமர்த்தியம் காட்டுவதுபோல

நினைக்க அருமை உடைய கோடிக்கணக்கான கோளங்களைத் தன் அருள்வெளியில் தங்கி இருக்கும்படி செய்து, நிகழ்த்தும் அற்புதத்தை எவராலும் புரிந்து கொள்ள முடியாது.

தாயுமானவரின் அந்தப் பாடல்

(மண்டலத்தின் 1 -  தா.பா.390.)

மண்டலத்தின் மிசைஒருவன் செய்தவித்தை
  அகோஎனவும் வார ணாதி
அண்டமவை அடுக்கு அடுக்காய் அந்தரத்தில்
  நிறுத்துஅவ தானம் போல
எண்தரும்நல் அகிலாண்ட கோடியைத்தன்
  அருள்வெளியில் இலக வைத்துக்
கொண்டுநின்ற அற்புதத்தை எவராலும்
  நிச்சயிக்கக் கூடா ஒன்றை.

இந்தப்பாடலில் -- அண்டங்கள் அனைத்தையும் வெட்டவெளியில் வைத்து விளையாடும் அற்புதத்தை இறைநிலையைத் தவிர வேறு எதுவாலும் செய்ய இயலாது என்று வியக்கிறார் தாயுமானவர். இக் கருத்தினை அழகான உவமை வாயிலாக நமக்குத் தந்துள்ளார்.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 60. பாயப் புலிமுனம் மான்கன்றைக் காட்டுவது போல்

தாயுமானவர் பாடல்களில் அதிகமாக தன்னை நொந்து கொள்ளுவதைக் காணலாம். அவர் தன் அனுபவத்தை சாதகனுக்குச் சொல்கிறார். அதனையும் உவமைகள் வாயிலாக அவனுக்கு மனதில் பதியும் வண்ணம் பாடுகிறார்.

தாய் போல் பெருங்கருணை கொண்டு நின் அடியார்க்கு அருளும் சத்து சித்து ஆனந்த தற்பரமே!

பாய்ந்து வரும் புலிக்கு முன்னால் மான் தனது கன்றினைக் காட்டினால் எப்படியோ, அதுபோல

---



மாயையாகிய பெரிய எதிரிக்கு முன்னர், என்னை பலியாக்க நினைத்தனையோ? நீ எப்படி முறை செய்தாலும் அதுவும் நல்லதே!

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(பாயப்புலி 1 - தா.பா.401.)

பாயப் புலிமுனம் மான்கன்றைக் காட்டும் படி, அகில
மாயைப் பெரும்படைக்கேஇலக் காஎனை வைத்தனையோ?
நீஎப் படிவகுத் தாலும், நன்றே நின் பெருங்கருணை
தாயொத்த அடியர்க்கு அருள் சச்சி தானந்த தற்பரமே.




இந்தப்பாடலில் -- மாயையும் மான்குட்டியை சாப்பிட வரும் புலியையும் உவமைப்படுத்தி தன்னை மாயையிலிருந்து விடுவிக்க தாயுமானவர் நம்மைப் பக்குவப்படுத்துகிறார்.

---

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 61. குண்டலினி ஆற்றல் மழை மேகம் போல்

மேல்நோக்கிச் செல்லும் பிராணனை கீழ்நோக்கிச் செலுத்தி, மூலத்தில் தீமூட்டி, அங்கு வெளிபபடும் குண்டலினி ஆற்றல் மழை மேகம் போல் சகசிரதளத்தை நோக்கிப் பொழிவதை நான் காணவில்லை.

ஆனால் மௌனகுருவின் கருணையால் வாயில் இனிப்புச் சுவை உண்டாவதைக் கண்டேன். அதனால் இனிமேல் அமுதம் பருகுவேன்.

தாயுமானவரின் அந்தப் பாடல் (பாயப்புலி 28 - தா.பா.428.)

மேல்கொண்ட வாயுவும் கீழ்ப்பட மூலத்து வெந்தழைச்
சூல்கொண்ட மேகம் என, ஊமை நின்று சொரிவதைஎன்
னால்கண்டது அன்று மவுனோப தேசிஅ ளிக்கைஇனிப்
பால்கண்டு கொண்டனன். மேலே அமிர்தம் பருகுவனே

குண்டலினி ஆற்றல் சகசிதளத்தில் சென்று முட்டுவதை, ஆத்ம சாதகன் அறியாவிட்டாலும், அமுதம் சுரக்கும். அதனை அமுதம் என அறியாவிட்டாலும், அதன் சுவை கொண்டு, பின்னர் அமுதம் சுரந்தது என்பதை உணரலாம் என்பது இப்பாடலின் கருத்து.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 61. குண்டலினி ஆற்றல் மழை மேகம் போல்

தாய்ப்பசுவையும் இறைவனையும் உவமைப்படுத்தி சாதகனுக்கு ஆன்மீகப் பாதையைக் காட்டுகிறார் தாயுமானவர்.

ஐயா! என்னைப் பற்றி நீ, முழுவதும் அறியமாட்டாயோ? என்னை அடிமை கொண்ட நீ, வெளித்தனமாய் என்னை ஏன் அலையவிட்டாய்?

---

கன்று காணாமல்போனால், தாய்ப்பசு பாதை தவறி சிறுமலை, செடிகள் என இவற்றின் இடமாகச் சென்று தேடிக் கண்டுபிடிக்குமே அது போலவா?.

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(உடல்பொய் உறவு 35 - தா.பா.494.)

அறியாயோ என்னையும்நீ ஆண்டநீ சுத்த
வெறியாய் மயங்கவும் ஏன் விட்டாய்-நெறிமயங்கிக்
குன்றும் செடியும் குறுகுமோ ஐயாவே
கன்றுகெட்டால் தாய் இருகே காண்.

இந்தப்பாடலில் -- தாய்ப் பசு கன்றை ஒரு போதும் பிரியாது. அதுபோல தேவரீரும் என்னை விட்டுப் பிரியாது இருந்திருக்க வேண்டும் என்பது இதன் கருத்து.

---

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 62. பட்டினத்தடிகள் துறவு மேற்கொண்டது போல

மாணவனே! இந்த உலகம் அனைத்தும் பொய் என்று உணர்ந்து, பட்டினத்தடிகள் துறவு மேற்கொண்டது போல,



புறப்பொருளை ஏனையோர் துறத்தல் மிகவும் அரிது. அகத்துறவும் அப்படியே. இவற்றில் உனக்கு ஏற்புடைய ஒன்றை ஆராய்ந்து தெளிவாயாக!

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(உடல்பொய் உறவு 57 - தா.பா.516.)

பார் அனைத்தும் பொய்எனவே பட்டினத்துப் பிள்ளையைப்போல்
ஆரும் துறக்கை அரிதுஅரிது. - நேரே

---

மனத்துறவும் அப்படியே மாணா! இவற்றில்
உனக்கு இசைந்தவாறு ஒன்றே ஓர்.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 63. இன்பத்தை சொல்லமுடியாத தன்மை போல

என்னை என்றோ, உன்னை என்றோ, இன்னது இது என்றோ, சொல்ல முடியாமல் நிற்கும் நிலைமையினை, கூறி அருளுவாயாக!" என்று கேட்ட சமயத்தில்,



தாய் தன்னுடைய மணாளனுடன் கூடி அனுபவித்த இன்பத்தைத் தன் பிள்ளைக்கும் சொல்லமுடியாத தன்மை போல வெளியில் சொல்லாது, உள்ளத்தில் வைத்து மகிழ்வாயாக!

தாயுமானவரின் அந்தப் பாடல்

(உடல்பொய் உறவு 60 - தா.பா.519.)

என்னையஉன்னை இன்னதுஇது என்னாமல் நிற்கும்நிலை
தன்னைஅரு ள் என்ற தருணத்தில்-அன்னைபெற்ற
பிள்ளைக்கும் சொல்லாத பெற்றிகண்டாய் ஐயனே
உள்ளத்தின் உள்ளே உணர்.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 65. ஊஞ்சல் கயிறு போல

---

வீணான மனமே! பழிப்பு அற்ற அந்த மௌன நிலையே, எம் தந்தையாம் பரபூரணமே, முன்நின்று குற்றமற்ற பேரின்பப் பெருக்கினை வழங்கிவிடுமே!



எனவே நீ ஊஞ்சல் கயிறு போல உலக வாழ்க்கை வாசனை காரணமாக முன்னும் பின்னுமாக பாசங்களுக்குள் பலமுறையும் செல்லாது இருப்பாயாக!

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(ஏசற்ற அந்நிலை1 - தா.பா.543.)

ஏசற்ற அந்நிலையே எந்தைபரி பூரணமாய்
மாசுஅற்ற ஆனந்த வாரி வழங்கிடுமே.
ஊசல் சுழல்போல் உலகநெறி வாதனையால்
பாசத்துட் செல்லாதே பல்காலும். பாழ்நெஞ்சே!

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 66. வண்டு தேனுக்காக ஏங்குவது போல

தலைவனே! மேலான தெய்வமே! குளத்தில் பூத்துள்ள தாமரை மலரை நாடி வந்த வண்டு தேனுக்காக ஏங்குவது போல உயிருக்கு உயிராய் நின்ற உன்மீது அன்பு வைத்த தொண்டருக்கு, "அஞ்சாதே!" என்று கூறி அருள்செய்வாய்.

பூவிற்கும் உயர்ந்த கடையில் புல் விற்பரோ? (விற்கமாட்டார்) அதுபோல உன்னை விட்டு வேறொரு தெய்வத்தை நானும் நினைப்பேனோ?

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(திடம் உறவே 5 - தா.பா.401.)

---

வாவிக் கமலமலர் வண்டாய்த் துவண்டுதுவண்டு
ஆவிக்குள் நின்ற உனக்கு அன்புவைத்தார்க்கு அஞ்சல் என்பாய்
பூவிற்கும் வான்கடையில் புல்விற்போர் போலஒன்றைப்
பாவிக்க மாட்டேன் பதியே பராபரமே.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 67. கண்மணி போல்

வளம் மிகுந்த தேவை நகருக்கு அரசியே! இமயமலை அரசனுக்குக் கண்மணி போல் வந்து உதித்தவளும், மலையில் வளர்ந்தவளும், பெற்றோருக்கு விருப்பம் மிகுமாறு வளர்ந்த பெண்ணும் ஆகிய பார்வதை தேவியே!

நயமுடன் உன்னைப் புகழ்ந்து பாட எனக்குத் தெரியாது. மலபரிபாகம் வருவதற்கு ஏற்ற பண்பு ஒருசிறிதும் என் மனதில் இல்லை.

ஒழுக்க நெறிகளைக் கடைபிடிக்கும் இயமம் முதலிய யோக நெறியில் நிற்கலாம் எனின், பாவியாகிய என்னுடைய பாவ வடிவ உடம்பக்கு வலிமை இல்லை.

ஞானநெறி பற்றி கனவில்கூட சிந்தித்துப் பார்க்கவில்லை. பேரின்பம் பெறலாம் என்றால் கள்ள மனம் மிகுதியும் தடுக்க நினைக்கிறது. இதற்கு நான் என்ன செய்வேன்?

மோகம், மதம், குலோதம், லோபம், மாச்சரியம் முதலியன அடிமை ஓலை எழுதி, என்னை அந்த ஆவணத்தால் அடிமை கொள்கிறது.

செல்வத்தைத் தேடலாம் எனிலே, மலர்களைத் தேடிச் சென்று மொய்க்கும் அழகிய வண்டுகள் போல ஆகாயத்திலும் திரிய வல்லவனாய் இருக்கிறேன். இப்படிப்பட்ட என்னை நீ, உனது வல்லமை கொண்டு ஆட்கொள்வாயோ?

### தாயுமானவரின் அந்தப் பாடல்

(மலைவளர்க் காதலி 6 - தா.பா.583.)

---

பாகமோ பெறஉனைப் பாடஅறி யேன்மல
  பரிபாகம் வரவும்மனதில்
பண்புமோ சற்றும்ன இலை நியமமோ செய்திடப்
  பாவியேன் பாபரூப
தேகமோ திடம் இல்லை ஞானமோ கனவிலும்
  சிந்தியேன். பேரின்பமோ
சேர என் றால் கள்ள மனமோ மெத்தவும்
  சிந்திக்குது என்செய்குவேன்?
மோகமோ, மதமோ, குரோதமோ, லோபமோ,
  முற்றுமாற் சரியமோதான்
முறியிட்டு எனைக்கொள்ளும் நிதியமோ தேடஎனில்
  மூசுவரி வண்டுபோல
மாகமடஓ  டவும்வல்லன் எனைஆள வல்லையோ?
  வளம்மருவு தேவைஅரசே!
வரைரா சனுக்கு இருகண் மணியாய் உதித்தமலை
  வளர்காத லிப்பெண்உமையே

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 68. சுவை கண்ட நாவினைப்  போல



வெல்லத்தை வாயில் போட்டு சுவை கண்டவரது நாவினைப் போல தெவிட்டாத விருப்பம் மிகும் பேரின்ப வடிவைப் பொருந்தும் நாள்வரை சாதகன் சாதனையில் ஈடுபடவேண்டும். பயிற்சி முயற்சி தேர்ச்சி.

### தாயுமானவரின் அந்தப் பாடல்

(நிற்கும் நிலை 11 -  தா.பா.1281.)

கருப்புவட்டை வாய்மடுத்துக் கண்டார்நாப் போல

விருப்புஉவட்டா இன்பு உருவை மேவுநாள் எந்நாளோ?"

---

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

### 69. கண்ணில்லாத ஊர்க்காளை போல

மன்மதன் ஏறிவரும் இருளாகிய யானையையும், பெரிய தந்தமுடைய யானையையும் வென்று, மனம் பொருந்திய மலர்களால் ஆன மாலை அணிந்து, ஆகாயத்தில் தவழும் மேகங்கள் மலைமீது, நாணமுடன் தவழ, கரிய கூந்தலை உடையாய்!

வாள் போன்ற கண்ணை உடையாய்! இடபத்தில் ஏறிவரும் எம்பெருமானது மனதுக்கு விருப்பம் உடைய மயிலின் சாயலை உடையாய்! இமயமலை அரசனுக்குக் கண்மணி போல் வந்து உதித்தவளும், மலையில் வளர்ந்தவளும், பெற்றோருக்கு விருப்பம் மிகுமாறு வளர்ந்த பெண்ணும் ஆகிய பார்வதியே!

அழுக்கு மிகும் ஆடையை போல் வினை ஈட்டும் உடம்பு என்னும் தோல்பையினுள்ள சிக்கிக்கொண்டு,

நாள்தோறும் சுழன்றடிக்கும் காற்றில் பற்றி எரியும் நெருப்பில் பட்ட பஞ்சுபோல அறிவெல்லாம் அழிந்துபட, நாள் செல்லச் செல்ல, முதுமை என்னும் எமனுடன் தொடர்பு அதிகரிக்க, மனம் கலங்கி, கண்ணில்லாத ஊர்க்காளை போல இந்நிலவுலகில் அலைந்து திரியவோ?

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(மலைவளர்க் காதலி 7 - தா.பா.584.)

தூள்ஏறு தூசுபோல் வினையேறு மெய்யெனும்
தொக்கினுடள் சிக்கி நாளும்
சுழல் ஏறு காற்றினிடை அழல்ஏறு பஞ்சுஎனச்
சூறையிட் டு அறிவைஎல்லாம்,
நாள்ஏற நாள்ஏற வார்த்திகம் எனும்கூற்றின்
நட்புஏற உள்உடைந்து,
நயனங்கள் அற்றதுஓர் ஊர் ஏறு போலவே
நானிலம் தனில் அலையவோ?
வேள்ஏறு தந்தியைக் கனதந்தி யுடன்வென்று

---

விரையேறு மாலைசூடி
விண்ஏறு மேகங்கள் வெற்புஏறி மறைவுஉற
வெருட்டிய கருங்கூந்தலாய்!
வாள்ஏறு கண்ணியே! விடைஏறும் எம்பிரான்
மனதுக்கு இசைந்தமயிலே!
வரைரா சனுக்கு இருகண் மணியாய் உதித்தமலை
வளர்காத லிப்பெண்உமையே.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 72. கண்ணில்லாத ஊர்க்காளை போல

தாய்ப்பசு போல என்னிடம் இரக்கம் எப்போது காட்டுவாய்? என்ற வினாவை இறைவனிடம் வைக்கிறார் தாயுமானவர்.

தாய்ப்பசு போல் இறைவன் நம்மிடம் இரக்கம் காட்டுமாறு நம்மை நாம் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற அறிவுரையை இந்த பழமொழி மூலம் நமக்குச் சொல்கிறார்.

என் மீது அருளைப் பொழியும் எம் தந்தையே! தன் கன்றுக்காக இரங்கும் தாய்ப்பசு போல் எனக்கு எப்பொழுது இரக்கம் காட்டுவாய்?

தாயுமானவரின் அந்தப் பாடல் (பராபரக்கண்ணி 34 - தா.பா.669.)

கன்றினுக்குச் சேதா கனிந்து இரங்கல் போலஎனக்கு

என்றுஇரங்கு வாய்கருணை எந்தாய் பராபரமே.

---

இந்தப்பாடலில் -- இந்த தாய்பசு உவமையை போல் கம்பனுடைய உவமையும் சிந்திக்கத்தக்கது.

**தாய்தன்னை அறியாத கன்று இல்லை தன் கன்றை அறியாத**

**ஆயும் அறியும் உலகின் தாய் ஆகி ஐய**

**நீ அறிதி எப்பொருளும் அவை உன்னை நிலை அறியா**

------------------------------------------------------------------------------------------------------------------------

## மாயை இது என்கொலோ வாராதே வரவல்லாய்

"தலைவனே! பக்தர்களிடம் வருவதற்கு அரியவன்போல் தோன்றி, பிறகு எளிதாக வந்து காட்சி தரும் வல்லமை உள்ளவனே! தன்னைப் பெற்ற தாயைத் தெரிந்து கொள்ளாத கன்றுகள் இல்லை.



தான் பெற்ற கன்றுகளை தாயும் அறிந்து கொள்ளும். உன்னிடமிருந்தே உலகம் தோன்றியதால் நீ உலகத்தின் தாயாக விளங்கி, எல்லாப் பொருள்களையும் அறிகிறாய்.

ஆனால் அப்பொருள்கள் எல்லாம் உனது தனிமையான நிலையை அறிய மாட்டா."

இதைப் படிக்கையில் பதி, பசு, பாசம் என்ற சைவ சித்தாந்த உண்மையும் நினைவுக்கு வருகிறது.

**'வாத்சல்யம்'** (தாய்ப் பசு – கன்று (வத்ஸ) இடையிலுள்ள அன்பும் நினைவுக்கு வருகிறது.

ஒவ்வொரு பசுவும் அதன் கன்றை அறியும். அது போல ஒவ்வொரு கன்றும் அதன் தாயை அறியும்.

இதே போல தாயாகிய இறைவனே நீ எங்கள் எல்லாரையும் அறிவாய். நாங்கள் உன்னை அறியும் பக்குவம் பெறவில்லையே. இது என்ன மாயமோ என்று கம்பன் வியக்கிறான்.

கன்று எப்படி தன் தாயை அறிகிறதோ அது போல நாமும் இறைவனை அறிய வேண்டுமானால் அது போலப் பாசம் (பக்தி) வேண்டும்.

இறைவனோ எப்போதுமே தாய்ப்பசு போல நம் மீது அன்பைப் பொழிந்துகொண்டிருக்கிறான்.

எது எப்படியாகிலும் வேதத்தில் காணும் இந்த உவமை சில ஆயிரம் ஆண்டுகளுக்கு பயன்படுத்தப்பட்டது சிறப்புடைத்து.

வேத கால உவமை சைவ சித்தாந்தத்துக்கும் வித்திட்டது!

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 71. ஆழித் துரும்பு போல்

உன் அடிமையாகிய நான், கடலில் விழுந்த துரும்பு போல அங்கும் இங்கும் வீணில் திரிந்து அலைவது என்ன பாவமோ?

### தாயுமானவரின் அந்தப் பாடல்

(பராபரக்கண்ணி 36 - தா.பா.671.)

ஆழித் துரும்புஎனவே அங்கும்இங்கும் உன்அடிமை

பாழில் திரிவதுஎன்ன பாவம் பராபரமே

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 72. கொழுந்தில் வயிரம்எனக்



(கொழுந்தாய் இருந்து பின்னர் வயிரம் பாய்வதால்) கொழுந்தில் வயிரம் மறைந்திருக்கிறது. அதுபோல குற்றமற என் அன்பில் மூழ்கும் அடியார்களுக்கு பேரின்பப் பயன் உண்டாகும்.

### தாயுமானவரின் அந்தப் பாடல்

(பராபரக்கண்ணி 88 - தா.பா.723.)

---

கொழுந்தில் வயிரம்எனக் கோதுஅறஉள் அன்பில்

அழுந்தும்அவர்க் கேசுகம்உண் டாகும்பராபரமே.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 73. விளையும் பயிரை அதன் முளையிலே



விளையும் பயிரை அதன் கொழுந்திலே அதாவது முளையிலே கண்டு கொள்ளலாம். அதுபோல பக்குவம் அடைந்தவர்க்கே நின்திருவருளாகிய பேற வாய்க்கும்.

தாயுமானவரின் அந்தப் பாடல்

(பராபரக்கண்ணி 89 - தா.பா.724.)

பற்றும் பயிர்க்குப் படர்கொழுந்து போல் பருவம்

பெற்றவர்க்கே நின்அருள்தான் பேறுஆம் பராபரமே.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 74. அப்பும் உப்பும் போன்ற



தண்ணீரும் உப்பும் போல் இரண்டறக் கலந்த மேலான பேரின்பம் பெற்றவர் தமக்கு, இவ்வுலகில் ஏதேனும் ஒரு பொருளை உவமையாகக் கூற, நமக்கு வாயும் உண்டோ?

-----

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(பராபரக்கண்ணி 147 - தா.பா.782.)

அப்பும் உப்பும் போன்ற அமிக்கியபரா னந்தர்தமக்கு

ஒப்புஉவமை சொல்லவும்வாய் உண்டோ பராபரமே.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 75. துள்ளிக் குதிக்கும் பேய்க்குரங்கு போல

கொள்ளித்தேள் எனப்படும் ஒருவகைத் தேள் கொட்ட, துள்ளிக் குதிக்கும் பேய்க்குரங்கு போல எனது வஞ்சமனம் துள்ளுகிறதோ! இது எதற்காக?

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(பராபரக்கண்ணி 172 - தா.பா.807.)

கொள்ளித்தேள் கொட்டிக் குதிக்கின்ற பேய்க்குரங்காய்க்

கள்ளமனம் துள்ளுவதுஎன் கண்டாய் பராபரமே.

LIKE THE MAD MONKEY

STUNG BY THE FIERY SCORPION

WHY DOTH THIS DECEITFUL MIND DANCE?

OH PARA PARAM!

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 76. சிறுபிள்ளைகள் மணல்சோறு சமைத்து உண்பது போல்

---



மிகவும் சிறுபிள்ளைகள் மணல்சோறு சமைத்து உண்பது போல் பாவனை செய்வதோடு ஒக்கும் அபரஞானம் (நூலறிவு) கொண்டு இறைவனை அடைய நினைப்பது.

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(பராபரக்கண்ணி 187 - தா.பா.822.)

சின்னஞ் சிறியார்கள் செய்தமணல் சோற்றைஒக்கும்

மன்னும் கலைஞான மார்க்கம் பராபரமே.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 77. நீர்க்குமிழி போல

நீர்க்குமிழி போல என் நினைவு அருள்வெளியில் கரைய, பார்க்கும் இடங்கள் தோறும் அப்பரவெளியே தோன்றுகிறது.

## தாயுமானவரின் அந்தப் பாடல்

(பராபரக்கண்ணி 204 - தா.பா.839.)

நீர்க்குமிழி போல் என் நினைவு வெளி யாய்க்கரையப்

பார்க்கும்இடம் எல்லாம்என் பார்வை பராபரமே.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 78. சுழன்று ஓய்ந்துபோன பம்பரம் போல



சுழன்று ஓய்ந்துபோன பம்பரம் போல் பெருவிருப்பமுடன் எங்கும் உன்னைத் தேடி அலைந்து ஓய்ந்து போனேன். இதற்கு வேறு என்ன செய்வேன்?

தாயுமானவரின் அந்தப் பாடல்

(பராபரக்கண்ணி 205 - தா.பா.840.)

ஆடிஓய் பம்பரம்போல் ஆசையுடன் எங்கும்உனைத்

தேடிஓய் கின்றன்என் செய்வேன் பராபரமே.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

79. கல் கொண்டு வீச பாசி கலைந்து நல்ல நீர் தெரிவது போல

கல் கொண்டு வீச பாசி கலைந்து நல்ல நீர் தெரிவது போல நல்லோர் சொல்லும் சொல்லின் உண்மையை ஆராயின், ஞானம் பிறக்கும்.

தாயுமானவரின் அந்தப் பாடல்

(பராபரக்கண்ணி 214 - தா.பா.849.)

கல்எறியப் பாசி கலைந்துநன்னீர் காணும்நல்லோர்

சொல்உணரின் ஞானம்வந்து தோன்றும் பராபரமே.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 80. கரைக்கின்ற அஞ்சனம்போல்



மை தீட்டப்பட்ட பொருள்கள் அனைத்தும், மையின் நிறத்தைப் பெறுவதுபோல உலகம் அனைத்தும் நின் திருவருளின் வடிவமே அன்றோ?

தாயுமானவரின் அந்தப் பாடல்

(பராபரக்கண்ணி 286 - தா.பா.921.)

கண்டவடிவு எல்லாம் கரைக்கின்ற அஞ்சனம்போல்

அண்டம் எல்லாம் நின்அருளே அன்றோ பராபரமே.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## **81.** கடைந்து வெளிப்படுத்தல் போல

விறகுக் கட்டையில் உள்ள நெருப்பை, ஒரு கட்டையோடு மற்றொரு கட்டை கொண்டு கடைந்து வெளிப்படுத்தல் போல உன்னை நினைக்க நினைக்கவே உன்னுடைய நட்பு கைகூடும்.

தாயுமானவரின் அந்தப் பாடல்

(பராபரக்கண்ணி 312 - தா.பா.947.)

காஷ்டத்தில் அங்கி கடையவந்தால் என்னஉன்னும்

நாட்டத்தி னூடுவந்த நட்பே பராபரமே.

### நினைப்பே நடப்பு

--------------------------------------------------------------------------------------------------------------------------------

**எண்ணம் போல் வாழ்க்கை நம் எண்ணமும் கண்ணாடியும் ஒன்றுதான்.**
**கண்ணாடி நம் பிம்பத்தைப் பிரதிபலிக்கிறது. அதேபோலத்தான் நம் எண்ணமும் வாழ்க்கையும்.**
**நம் எண்ணம் நன்றாக இருக்கும் போது வாழ்க்கையும் நன்றாகவே அமைகிறது.இதை நம்பி வாழ்வோர்க்கு அந்த நம்பிக்கையே பெருந்துணையாகிறது.**
**இதைத்தான் நினைக்க நினைக்க அது நிச்சயம் நடக்கும் என்பதை தாயுமானவர் வலியுறுத்துகின்றார்.**

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## **82.** கண் இன்றி நிகழுமோ? அதுபோல



உலகத்தில் உள்ள பொருள்களை எல்லாம் காணும் காட்சி என்பது கண் இன்றி நிகழுமோ? அதுபோல எல்லாவற்றின் இயக்கமும் நினது திருவருளின் துணையின்றி நிகழுமோ?

தாயுமானவரின் அந்தப் பாடல்

(பராபரக்கண்ணி 337 - தா.பா.972.)

காட்சிஎல்லாம் கண்ணைவிடக்கண்டதுஉண்டோ யாதினுக்கும்

ஆட்சி உனதுஅருளே அன்றோ பராபரமே.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## **83.** ஒவியம்போல் நிற்கின்ற எனை

---

ஒரு தெய்வத்தை விட்டு மற்றொரு தெய்வத்தை வணங்கம் தன்மை விட்டு, சிவபெருமான் இடத்து அசையாது ஒவியம் போல் மனத்தை நிறுத்தின், என்னை நினைப்பார் போலும்.

### தாயுமானவரின் அந்தப் பாடல்

(பைங்கிளிக்கண்ணி 28 - தா.பா.1052)

தாவியதுஓர் மர்க்கடம்ஆம் தன்மைவிட்டே அண்ணல்இடத்து

ஒவியம்போல் நிற்கின்றஎனை உள்குவரோ பைங்கிளியே

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## **84.** விலை கொடுத்து வாங்குவது போல

கற்கண்டு போல் தித்திக்கும் மொழி பேசி, ஆடவரது மன உணர்ச்சியைக் கண்டுகொண்டு, அவர்களை சிறிதாக விலை கொடுத்து வாங்குவது போல வாங்கிக் கைப் பொருளாக்கிக் கொண்டுவிடும், மான்போல் மருண்ட பார்வை உடைய மகளிரிடம், நிகழ்த்தும் சிற்றின்ப விடையாட்டிலிருந்து விடுபட வேண்டும் என்று தாயுமானவர் வலியுறுத்துகிறார்இ

### தாயுமானவரின் அந்தப் பாடல்

(மாதர் மயக்கு அறுத்தல் 3 - தா.பா.1129.)

கண்டுமொழி பேசிமனம் கண்டுகொண்டு கைவிலையாக்

கொண்டுவிடும் மானார்பொய்க் கூத்துஒழிவது எந்நாளோ.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## **85.** ஆழமான கடல் போல

ஆழமான கடல் போல அளக்க முடியாத வஞ்சனை பொருந்திய மனமுடைய வீணான மகளிர்மீது வைத்த மயக்கமாகிய பற்று ஒழிக்க வேண்டும் என்று சாதகனுக்கு அறிவுரை தருகிறார் தாயுமானவர்.

### தாயுமானவரின் அந்தப் பாடல்

(மாதர் மயக்கு அறுத்தல் 11 - தா.பா.1137.)

ஆம்ஆழி என்ன அளவுபடா வஞ்செஞ்சப்

பாழ்ஆன மாதர்மயலம் பற்றுஒழிவது எந்நாளோ?

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## **86.** குளிர்ந்த சந்திரஒளி கூட வெப்பம் தருவது போல்

தூய குளிர்ந்த சந்திர ஒளி கூட வெப்பம் தருவது போல், உணரச் செய்யும் அளவு பித்து ஏற்றி மயக்கம் செய்விக்கும் மகளிரது, காம மயக்கத்திலிருந்து விடுபட வேண்டும் என்பது தாயுமானர் விருப்பமாகும்.

### தாயுமானவரின் அந்தப் பாடல்

(மாதர் மயக்கு அறுத்தல் 12 - தா.பா.1138.)

தூயபனித் திங்கள் சுடுவதுஎனப் பித்துஏற்றும்

மாய மடவார் மயக்குஒழிவது எந்நாளோ.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## **87.** பாம்பின் வாயில் அகப்பட்ட தேரை போல்



பாம்பின் வாயில் அகப்பட்ட தேரை போல், புத்தியின் வசம் அகப்பட்ட உயிருக்குத் துன்பம் நேரும். அது நேராதிருக்க, எம் தந்தையின் திருவருள் ஓங்க வேண்டும். அது நிகழ்வதற்கு தகுந்த பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

### தாயுமானவரின் அந்தப் பாடல்

(தத்துவ முறைமை 8 - தா.பா.1149.)

புத்திஎனும் துத்திப் பொறி அரவின் வாய்த்தேரை

ஒத்துவிடாது எந்தைஅருள் ஓங்குநாள் எந்நாளோ.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## **88.** யானையின் வாயில் அகப்பட்ட கரும்பு போல



மதங்கொண்ட யானையின் வாயில் அகப்பட்ட கரும்பு போல ஆங்காரம் எனப்படும் தன்முனைப்பைக் கொண்டு, துன்புறும் உயிருக்கு, எம் தந்தையின் திருவருள் பதியும் வண்ணம் நாம் சாதனையில் உயரவேண்டும்.

### தாயுமானவரின் அந்தப் பாடல்

(தத்துவ முறைமை 9 - தா.பா.1150.)

ஆங்காரம் என்னும்மத யானைவா யில்கரும்பாய்

ஏங்காமல் எந்தைஅருள் எய்துநாள் எந்நாளோ.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## **89.** பிறவிக் குருடனுக்கு எங்கும் இருளாகவே தோன்றுவது போல



பிறவிக் குருடனுக்கு எங்கும் இருளாகவே தோன்றுவது போல என் அறிவை மயக்கி வந்த ஆணவமல இருள் என்னும் கடல், வற்றுமாறு நாம் தற்சோதனை பழக வேண்டும். அகத்தாய்வினை நாள்தோறும் மேற்கொள்ள வேண்டும் என்கிறார் தாயுமானவர்.

### தாயுமானவரின் அந்தப் பாடல்

(தத்துவ முறைமை 16 - தா.பா.1157.)

அந்தகனுக்கு எங்கும்இருள ஆனஆ றாஅறிவில்

வந்தஇருள் வேலை வடியுநாள் எந்நாளோ.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## **90.** வறுத்த பொரி போல்



சஞ்சிதம் (தொல்வினை, பிராரத்தம் (நுகர்வினை), ஆகாமியம் (ஏறுவினை) ஆகிய மூன்று பொருள்களாகிய சேறும் வரண்டு.வறுத்த பொரி போல் ஆக,

திருவருள் பொருந்தும் வண்ணம் நாம் இறைநிலையோடு ஒன்றி இருக்க வேண்டும். இமைப்பொழுதிலும் நீங்காத நெஞ்சத்தோடு இறைவனை வழிபட்டுக் கொண்டிருக் வேண்டும் என்பது தாயுமானவரது விருப்பமாகும்.

### தாயுமானவரின் அந்தப் பாடல்

(தத்துவ முறைமை 21 - தா.பா.1162.)

சஞ்சிதமே ஆதி சரக்குஆன முச்சேறும்
வெந்தபொரி ஆகஅருள் மேவுநாள் எந்நாளோ.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 91. கைவிளக்கின் பின்னேபோய்க் காண்பார்போல்



கைவிளக்கு கொண்டு உலகியல் பொருள்களைக் காண்பது போல மெய்ஞ்ஞானமாகிய மெய்விளக்கினைக் கொண்டு, இறைவனது திருவடியைக் காண்பதற்கு தகுந்த பயிற்சிகளை முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

### தாயுமானவரின் அந்தப் பாடல்

(பொருள் இயல்பு 1. தாயு.பா.1195)

கைவிளக்கின் பின்னேபோய்க் காண்பார்போல் மெய்ஞ்ஞான
மெய்விளக்கின் பின்னேபோய் மெய்காண்பது எந்நாளோ?

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

---

## **92.** நீரில் மூழ்குவது போல



தேவர்கள் வாழும் உலகங்களும் யுகமுடிவில் அழியும் போது, நீரில் மூழ்குவது போல பேரின்ப வெள்ளத்தில் நானும் மூழ்க வேண்டும்.

அது நிகழ்வது உரிய பக்குவத்தை நாம் பெற வேண்டும்.

### தாயுமானவரின் அந்தப் பாடல்

(ஆனந்த இயல்பு 5 - தா.பா.1218.)

அண்டர்அண்ட கோடி அனைத்தும் உகாந்தவெள்ளம்

கொண்டதுஎனப் பேரின்பம் கூடுநாள் எந்நாளே.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## **93.** இனியா தின்றால் இனிப்பனபோல்



இனிய கரும்பு என்று வாயினால் கூறிய மட்டில் இனிப்பதில்லை. மென்று தின்றால்தான் இனிக்கும். அதுபோல பேரின்பம் என்னும் ஒன்றில் மூழ்கித் திளைத்து, அதனை அனுபவிக்க வேண்டும். அதற்குரிய பண்புகளையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

தாயுமானவரின் அந்தப் பாடல்

(ஆனந்த இயல்பு 13 - தா.பா.1226.)

தீங்கரும்புஎன் றால் இனியா தின்றால் இனிப்பனபோல்

பாங்குறும்பே ரின்பம் படைக்குநாள் எந்நாளோ.

--------------------------------------------------------------------------------------------------------------------

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## **94.** பெய்கின்ற முகில்காள்எம் பெருமான் நும்போல்

முறையாக இரவும் பகலும் ஒரு தன்மையாய் மாறி மாறி வர, சூரிய சந்திரர்களை இயக்குபவர் யார்?

அவர் பெருமை குறித்து எவ்வாறு எடுத்துரைப்பது?

அடிக்கின்ற காற்றே நீ யாருடைய ஆணையின்படி இயங்குகின்றாய்! என்று கேட்பேன்.

மழையாய் வந்து பொழிகின்ற மேகங்களே! உங்களைப் போல எம்பெருமானும் தாராளமாய் அருளைப பொழிய வேண்டும் என்று அவருக்கு எடுத்துக் கூறுங்கள்! என்பேன்.

### தாயுமானவரின் அந்தப் பாடல்

(ஆகாரபுவனம் 26 - தா.பா.157.)

நேரேதான் இரவுபகல் கோடா வண்ணம்
  நித்தம்வர உங்களை இந் நிலைக்கே வைத்தார்
ஆரே? அங்கு அவர் பெருமை என்னே என்பேன்!
  அடிக்கின்ற காற்றேநீ யாரா லேதான்
பேராதே சுழல்கின்றாய் என்பேன் வந்து
  பெய்கின்ற முகில்காள்எம் பெருமான் நும்போல்
தாராள மாக்கருணை பொழியச் செய்யும்
  சாதகம் என் னேகருதிச் சாற்றும் என்பேன்.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## **95.** சூரியனைக் கண்ட தாமரை மலர் மலர்வது போல



---

சூரியனைக் கண்ட தாமரை மலர் மலர்வது போல என் மனம் மிகுந்த திருவருளைக் கண்டு, மலர்வது எப்பொழுது?

தாயுமானவரின் அந்தப் பாடல்

(அன்பு நிலை 1 - தா.பா.1228.)

தக்கரவி கண்ட சரோருகம்போல் என்இதயம்

மிக்கஅருள் கண்டு விகசிப்பது எந்நாளோ?

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## **96.** வானமுகில் கண்ட மயூரபட்சி போல



வானத்தில் மேகத்தைக் கண்ட மயில் மகிழ்ந்து ஆடுவது போல ஐயனது ஞானநடனம் கண்டு. மகிழ்ந்து நாமும் ஆடுவோமாக!

தாயுமானவரின் அந்தப் பாடல்

(அன்பு நிலை 2 - தா.பா.1229.)

வானமுகில் கண்ட மயூரபட்சி போல ஐயன்

ஞானநடம் கண்டு நடிக்குநாள் எந்நாளோ.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 97. சந்திரனை விரும்பும் சகோரப் பறவை போல

---



சந்திரனை விரும்பும் சகோரப் பறவை போல நம் அறிவில் வெளிப்பட்ட, மேலான சுடரை, நாம் விரும்பவது கிடைக்கும்.

தேவை இடையறாத சாதனைதான்.

தாயுமானவரின் அந்தப் பாடல்

(அன்பு நிலை 3 - தா.பா.1230.)

சந்திரனை நாடும் சகோரபட்சி போல் அறிவில்

வந்தபரஞ் ஜோதியையான் வாஞ்சிப்பது எந்நாளோ?

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

98. கருப்புவட்டை வாய்மடுத்துக் கண்டார்நாப் போல



வெல்லத்தை வாயில் போட்டு சுவை கண்டவரது நாவினைப் போல தெவிட்டாத விருப்பம் மிகும் பேரின்ப வடிவைப் பெறுவதற்குரிய முயற்சிகளை நாம் மேற்கொள்வோமாக!

தாயுமானவரின் அந்தப் பாடல்

(நிற்கும் நிலை 11 - தா.பா.1281.)

கருப்புவட்டை வாய்மடுத்துக் கண்டார்நாப் போல

விருப்புஉவட்டா இன்புஉருவை மேவுநாள் எந்நாளே.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

---

## 99. சுடச்சுட ஒளிவிடும் பொன்கட்டி போல

சுடச்சுட ஒளிவிடும் பொன்கட்டி போல் மலமற்றவராய், பேச்சற்ற மௌன நிலை பெற்றவரே, பிறவா நெறி பெற்றவர் ஆவார்.

தாயுமானவரின் அந்தப் பாடல்

(பராபரக்கண்ணி 354 - தா.பா.989.)

காச்சச் சுடர்விடும்பொன் கடம்டிபோல் நிர்மலமாய்ப்

பேச்சற் றவரே பிறவார் பராபரமே.

தங்கம் தனை தீயினில் சுடச்சுட மாசு நீங்கி அது பொன்போல் பொலிவு பெறும் /ஒளிவிடும். அது போல், ஒருவர் தவத்தால் (தவம்போல்) துன்பங்களை கலைந்து மாசு நீங்கினால் மெய்யுணர்வு பெறுவர்.

சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பஞ்

சுடச்சுட நோற்கிற் பவர்க்கு. (**குறள்** *அறத்துப்பால், துறவறவியல், தவம்]*

ஆக மெய்யுணர்வு பெறுவது என்பது ஒரு நாளில் அடைவது அல்ல. அது மெல்ல மெல்ல கடும் தவத்தினால் குற்றங்களை களைந்து அடையும் ஒரு நிலை.

தவம் என்பது ஒருமுகப்படுத்தும் ஒரு பயிற்சி, முயற்சி. அவ்வாறு முயலும் போது எத்தனையோ தடங்கல்களும், துன்பங்களும் வருவது இயல்பே.

அத்தடங்கல்களையும் தாண்டி, துன்பங்களைப் பொறுத்துகொண்டு, அறிவை நோக்கிய ஒரு உறுதியும், அதனால் தெளிந்த ஞானம் அடைவதும் உறுதி.

ஆகவே தான் மற்றுமொரு குறளில் கடுமையான பயிற்சி தேவை என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்

வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.

## மௌனம் என்னும் மந்திரமொழி.

வார்த்தைகள் இல்லாத புத்தகம் மௌனம் . ஆனால் வாசிக்க வாசிக்க இதற்குள் வாக்கியங்கள்.

மௌனம் என்பது வெளிச்சம். நம்மை நாமே இதற்குள் தரிசிக்கலாம்.

மௌனம் என்பது இருட்டு. எல்லாத் துன்பங்களையும் இதற்குள் புதைக்கலாம்.

மௌனம் என்பது மூடி. இதைத் தயாரித்து விட்டால் எல்லா உணர்ச்சிககளையும் புட்டி வைக்கலாம். மௌனம் என்பது போதி மரம். இதுவரை சொல்லாத உண்மைகளை இது போதிக்கும்.

மௌனம் என்பது வரம். நம்மிடம் நாமே பெறுவது. இன்பம், துன்பம் இரண்டையும் மௌனம் கொண்டு சந்தித்தால் எப்போதும் இதயம் இயல்பாக இருக்கும். இதழ்களை இறுக மூடி நாம் நமக்குள் இறங்குவோம்.

அதிகம் பேசாதவனை உலகம் விரும்புகிறது. அளந்து பேசுகிறவனை உலகம் மதிக்கிறது. பேசாத ஞானியை உலகம் தொழுகிறது. அமைதி மேலோட்டமானது. மௌனம் உள்ளிருந்து வருவது.

மௌனம் வார்த்தைகள் அற்ற நிலை. எண்ணங்கள் அற்ற நிலை. ஓம் எனும் பிரணவத்தின் பொருள் – அறிவாக உள்ள இறைவனை உயிராக உணர்கிற மனிதன், பேரின்ப நிலையாகிற மௌனத்தில் ஆழ்கிறான் என்பதே.

"தந்தது உன்தன்னைக் கொண்டது என்தன்னை" என மாணிக்கவாசகர் கூறுகிறார்.

நம்மை முற்றிலும் அவருக்குக் கொடுகின்றளவு அவர் நம்மை ஏற்றுக்கொண்டு அவரை நமக்குக் கொடுத்து விடுகிறார். அவரை நாம் பெறுகின்றளவு பேரானந்தத்தை அனுபவிக்கும் பேற்றினைப் பெற்று மோன நிலையை அடைகின்றோம்.

## நாரதர் – சுகர் - மகாதேவர்

---

பேரானந்தப் பெருங்கடலிலிருந்து வீசிய காற்று பட்டதும் நாரதர் தம்மை மறந்து பக்திப்பரவசமடைந்தார்.

எப்பொழுதும் "நாராயண, நாராயண" என்று உச்சரித்த வண்ணம் ஆனந்தத்தில் மூழ்கி இருந்தார்.

சுகர் பேரானந்தக் கடலைப் பார்த்தார். பார்த்தவுடன் உடல் உணர்வை எல்லாம் கடந்து ஞானப் பெருநிலையை அடைந்து விட்டார்.

மகாதேவர் அப் பேரானந்த கடலின் நீரை ஒருகை அள்ளிப் பருகினார். அது அவருக்கு போதுமானதாகப் போய்விட்டது.

இனி யார்தான் அதை முற்றிலும் அறியமுடியும், நம்மை நாம் அவருக்குக் கொடுக்கின்ற பொழுது அவர் நம்மை தம் வசம் ஆக்கிப் பேச்சற்ற பெருநிலையில் வைத்து விடுகின்றார். இதனைத் தாயுமானவர் "மடக்கிக்கொண் டான்என்னைத் தன்னுள்-சற்றும் வாய்பேசா வண்ணம் மரபும்செய்தான்" என்று ஆனந்தக் களிப்பில் பாடினார்.

இங்கு சுடச்சுட ஒளிவிடும் பொன்கட்டி போல் மலமற்றவராய், பேச்சற்ற மௌன நிலை பெற்றவரே, பிறவா நெறி பெற்றவர் ஆவார் என்று பராபரக்கண்ணயிலும் மௌனத்தின் சிறப்பை வலியுறுத்துகின்றார்.

# தாயுமானவரின் உவமைகள் 100

**மன்னார்குடி பானுகுமார்**

## 100. கடல்மடை திறந்தால் போல

கடல்மடை திறந்தால் போல கண்களில் நீர் ஆறாகப் பெருக, உடல் வெதும்பி, மூர்சை அடைந்து, உள்ளம் உருகி சாதனை செய்தால் வெற்றி கிடைக்கும் என்று சாதகனுக்கு சொல்கிறார் தாயுமானவர்.

### தாயுமானவரின் அந்தப் பாடல்

(அன்பு நிலை 11 - தா.பா.1236.)

கடலின்மடை கண்டதுபோல் கண்ணீர் ஆறுஆக

உடல்வெதும்பி மூச்சித்து உருகுநாள் எந்நாளோ.

அன்னை காளி மாதாவின் தரிசனம் பெற வேண்டுமென்ற ஆவலும் ஏக்கமும் இராமகிருஷ்ணரிடம் நாளுக்கு நாள் பெருகின.

அன்னையின் வழிபாட்டில் மனமுருகிக் கரைந்தார். பூஜை நேரங்களில் பக்திப் பாடல்களை குறிப்பாக "ராம பிரசாதர்" என்ற மகானின் பாடல்களைப் பாடிப் பேரானந்தம் அடைந்தார், அவர் பாடுவதைக் கேட்டு பக்தர்களும் பக்தியல் மெய்சிலிர்த்து நின்றார்கள்.

தலைமீது புஸ்பங்களை வைத்தவண்ணம் மணிக்காணக்காக தியானத்தில் மூழ்குவார். காளி மாதவுக்கு நிவேதனம் படைத்து அதனை அன்னை உண்ண வருவாள் என்று காத்திப்பார்.

கோயிலின் மரபுகளையும் நியதிகளையும மீறி நேரம் காலம் அறியாமல் பூஜை செய்தும் பாடியும் அலங்காரம் செய்தும் தீபாராதனை காட்டியும் அழுதும் தொழுதும் இராமகிருஷ்ணர் அன்னை வழிபட்டு வந்தார்.

தாயுமானவர் குறிப்பிட்டது போல் " கடலின்மடை கண்டதுபோல் கண்ணீர் ஆறு ஆக உடல்வெதும்பி மூச்சித்து உருகினார்.

"கல்லும் கனிய உன்முன் பாடுகின்றேனே. என்முன் காட்சிதர வராமாட்டாயா? என்று அவர் கனிந்து உருகி வேண்டினார். கணகளில் நீர் பெருகி வழிபாட்டார்.

அன்னையின் அருங்காட்சி கிடைக்காமல் போய்விடுவோமோ என்ற தவிப்பும் துயரமும் பெருகியதும் இனி உயிர் வாழ்வதே வீண் என்ற முடிவுக்கு வந்தார்.

இந்த எண்ணம் வந்ததுமே காளியின் அருகில் இருந்த வாளை எடுக்க விரைந்தார். காளியின் வாளைத் தம் கரங்களால் தொட்டார். அவ்வளவுதான். ஆனால் என்ன வியப்பு!

இராமகிருஷ்ணரின் முன்பு அன்னை ஒளிமமாகத் தோன்றினாள். ""கஞ்குகரையற்ற ஞானப் பேரொளிக் கடல் போன்ற தோற்றம். எங்கு நோக்கினாலும் ஒளி அலைகள் கொந்தளித்துப் பொங்கிப் பெறுகிய கடல்

மட்டுமே தெரிந்ததாக இராமகிருஷ்ணர் பின்னாளில் சீடர்களிடம் இதைப்பற்றி நிகழ்ந்ததை வர்ணித்தார்.

வாளைத் தொட்டதும் அன்னையின் அருங் காட்சயைத் தான் பெற்றதும் அக்கணமே இராமகிருஷ்ணர் வெளியுலக நினை விழந்து வீழ்ந்தார். பரவசமானார். அன்னை அருளில் திளைத்தார்.

# துணைநின்ற நூல்கள்.


1. தொல்காப்பியம்.
2. சங்க இலக்கியத்தில் உவமைகள் என்றும் டாக்டர் ரா. சீனிவாசன்
3. காளிதாசன் உவமைகள் - -நா.வரதஜுலு நாயுடு
4. தாயுமானவர் பாடல்கள் புலவர் வீ.சிவஞானம்
5. இணையதள தகவல்கள்
6. தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை – நா.சுப்புரெட்டியார்
7. Mirror of Tamil and Sanskrit – Dr. Nagasamy
8. வால்மீகி ராமாயணத்தில் 3462 உவமைகள்! – லண்டன் சுவாமிநாதன்.
9. இணைதளத்தில் தகவல்கள், படங்கள்.
10. தாயுமானவர் பாடல்கள் – சுவாமி சித்பவானந்தர்
11. திருக்குறளில் உவமைகள் – முல்லை முத்தையா